டிசம்பர் 2010

விலை: 40/-



கெட்டுப் போனதா குட்டி யாழ்ப்பாணம்?

கணி-நீ

தகவல் தொழில்நுட்ப இணைப்பிதழ் உள்ளே

சிகரம்:2 அடி:3

# சகரம்

இளையோர் மாதாந்தம்

தொடு

சிகரம் ஊடக இல்ல மாணவர் வெளியீடு




## A/L க்குப் பின்னர் ஏராளம் வாய்ப்புக்கள்

# உயர்கல்வியை முடித்த பின் தொழில்சார் கற்கை நெறிகள்

## வெளிவாரி பட்டம் External Degree
(Jaffna & Peratheniya University)

## BA & BCom
**GAQ, BA I & BA Final / 1st in Com, BCom (I&II), Final**

**Minimum Requirement** : GCE A/L 3 Passes

தனியார் அரச நிறுவனங்களில்
கணக்காளராக உடன்
வேலை வாய்ப்புக்களைப் பெறுவதற்கு

## Chartered Accountancy
Foundation & Intermediate Level

**Medium**:Tamil & English

**Minimum Requirement**
GCE A/L 3 Passes

வங்கிகளில் உடன்
வேலை வாய்ப்புக்களைப் பெறுவதற்கு

## Banking Course (CBF&DBF)
**Medium**:Tamil & English

**Minimum Requirement**: GCE O/L 6 Passes with credits including Maths / Business Studies & Accounts, Language (Tamil / English)

## Certificate Course in English
**Minimum Requirement** : GCE O/L

அரச - அரசசார்பற்ற நிறுவனங்களில்
தொழிற்துறைக் கணக்காளராகப்
பணியாற்றுவதற்கு

## AAT (Sri Lanka)
Foundation Level, Intermediate & Final

**Medium**:Tamil & English

**Minimum Requirement:**
GCE O/L 6 Passes

மருந்தாளர் (வெளிவாரி) பரீட்சை
(Ceylon Medical College Council, University of Colombo)

## Pharmacist (External)
Examination Course

**கல்வித் தகைமைகள்:**

GCE O/L - ஆங்கில பாடம் சித்தி

GCE A/L - இரசாயன பாடம் உட்பட மூன்று விஞ்ஞான பாடங்களில் சித்தி

**பதிவுகளை உடன் மேற்கொள்ள - மேலதிக விபரங்களுக்கு**

JAFFNA COLLEGE · JESUS CHRIST THE LIGHT OF LIFE · 1823 · CEYLON · 1872

**யாழ்ப்பாண கல்லூரி பட்டதாரிப் பிரிவு,**
**464, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

நேற்றைய அனுபவங்களிலிருந்து
நாளைய சாதனைகளை நோக்கி

# சிகரம் தொடு
SIKARAM THODU

சிகரம் 2 அடி 3

சிகரம் ஊடக இல்லம்
மாணவர் வெளியீடு

**தொகுப்பு**
கோ.றுஷாங்கன்

**இணைத் தொகுப்பு**
ம.யசோநிதி

**வடிவமைப்பு**
அல்பேர்ட் பெஸ்ரியன்


**ஆக்கங்கள்**
ச.சிந்து
கி.கிருத்திகா
ம.யசோநிதி
சி.ஜெயந்தி
செ.கார்த்திகா
சி.சிவபிரபா
மா.சுரேஷ்
சு.நேதாஜி
ம. பிரசாத்
ஞா.கிரிஷாந்
அ.பெஸ்ரியன்
ந.சதீஸ்

**அச்சாக்கம்:**
கரிகணன் பிறின்டேர்ஸ்


**சந்தா விபரம்**
ஆண்டு சந்தா: 600 ரூபா
2 ஆண்டு சந்தா: 1,000 ரூபா
மாணவர்களுக்கும், கல்வி நிறுவனங்களுக்கும்
ஆண்டு சந்தா: 500 ரூபா

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
**சிகரம் ஊடக இல்லம்**
இல.221, பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 300 80 60
நேரடி : 077 77 33 931
மின்னஞ்சல்:
sikaramthodu@gmail.com

# உள்ளே...


04 வாசிக்க நேரமில்லை?


12 ஏ.எல்.க்குப் பின் ஏராளம் வாய்ப்புக்கள்


14 பல்கலைக்கழகம் செல்லாமலே பட்டம்



32 கொழும்பில் HOLIDAY கொண்டாட்டம்


38 குறும்பாணிகள்


44 ஊடகங்களிடம் - மக்கள் என்ன எதிர்பார்க்கிறார்கள்?

**இன்னும்....**

பள்ளிக்காதல் பயன்தருமா? ........ 06
கொக்குவில் இந்துவின் சாதனை! ........ 11
சுயவிபரக்கோவை தயாரிப்பு ........ 16
127 மணித்தியாலங்கள் ........ 18
கிளித்தட்டு ........ 34
சாதிக்கும் டயமன்ஸ் ........ 36
எண்ணம்போல் வாழ்வு ........ 40
கடன் ஒரு வரம் ........ 42
அழகே உன்னை ஆராதிக்கின்றேன் ........ 46


கணினி அழிப்படைகள்
கணினிப் பராமரிப்பு
Word இல் Text Formatting
ஃபோட்டோ எழிட்டிங்
2010இன் தலைசிறந்த கண்டுபிடிப்புக்கள்
புது வரவு
2050-2100இல் உலகம்


# தற்கொலைக்கோ கல்வி கற்றோம்?



க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவந்துவிட்டன.

வழமைபோன்று பரீட்சைப் பெறுபேறுகளில் சாதித்திருக்கும் மாணவர்களும், முன்னணியில் நிற்கும் பாடசாலைகளும் கொண்டாடப்படுகின்றனர்.

தேசியப் பல்கலைக்கழகங்களில் அனுமதி கிடைக்கும் என்று உறுதியாகிவிட்ட மாணவர்களை எல்லோருமே போற்றி கொண்டாடுகின்றனர்.

மூன்று தசாப்த கால போர்ச்சூழலைக் கடந்தும், இன்னும் கல்வியில் சாதித்துக்கொண்டிருக்கும் இந்த மாணவர்களை 'சிகரம் தொடு'வும் மனமார வாழ்த்துகிறது.

ஆனால், இந்தப் பரீட்சையில் எதிர்பார்த்த பெறுபேறுகள் கிடைக்கவில்லை என்ற விரக்தியில் யாழ்ப்பாணத்தில் இரண்டு மாணவர்கள் தற்கொலை செய்ய முயற்சித்தார்கள் என்ற செய்தி, இந்த வெற்றிக் கொண்டாட்டங்கள் மீது இடிவிழுத்தியிருக்கிறதே?

ஏன் இவர்கள் தற்கொலை செய்ய முயன்றார்கள்...?

2009ம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின்படி, பரீட்சைக்கு தோற்றிய 199,000 பேரில் 20,000 பேரே தேசிய பல்கலைக்கழகங்களில் அனுமதிக்கப்பட்டார்கள் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 127,000 பேர் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதிபெற்றவர்களாக பரீட்சைப் பெறுபேறுகள் தெரிவிப்பினும், இதில் 107,000 பேருக்கு தேசிய பல்கலைக்கழங்களில் அனுமதி கிடைக்கவில்லை.

அதாவது, பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றவர்களில் சுமார் 15.7 சதவீதமானவர்களே தேசிய பல்கலைக்கழகங்களுக்குச் செல்லும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். பரீட்சைக்குத் தோற்றியவர்களின் எண்ணிக்கையில் இது வெறும் 10.05 சதவீதம் மட்டுமே.

ஆக, பரீட்சைக்குத் தோற்றிய 179,000 பேரில் – 90 சதவீதம் – பேர் தேசிய பல்கலைக்கழக அனுமதியைப் பெறவில்லை.

ஒவ்வொரு வருடமும் இவ்வாறு சுமார் 20,000 பேர் வரையிலேயே தேசிய பல்கலைக்கழகங்களில் அனுமதிக்கப்படுகின்றனர்.

தேசிய பல்கலைக்கழக பட்டப்படிப்பு வாய்ப்புக்கள் அறிமுகப்படுத்தப்பட்ட காலத்திலிருந்து இந்த நிலைமைதான் தொடர்ந்து வருகிறது.

ஆனால், ஒவ்வொரு வருடமும் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும்போது இது எமக்குத் தெரிந்திருக்கிறதா?

ஆசிரியர்களோ, அதிபர்களோ, பெற்றோரோ இந்த யதார்த்தத்தை முன்கூட்டியே எமக்கு உணர்த்துகிறார்களா?

தேசிய பல்கலைக்கழகங்களை விட விரிந்து கிடக்கும் ஏராளம் உயர் கல்வி வாய்ப்புக்கள் பற்றி யாராவது அறிவூட்டுகிறார்களா?

எல்லோருமே தேசிய பல்கலைக்கழக அனுமதியை மட்டுமே குறியாகக் கொண்டு பந்தயத்தில் ஓடச் செய்கின்றனர்.

அதில் தோற்றுவிட்டால் பாடசாலை, வீடு, சுற்றம், நண்பர்கள் என்று எல்லா மட்டத்திலும் அழுத்தம் தருகின்றனர்.

இதுவே இரண்டு மாணவர்களைத் தற்கொலை முடிவுக்கு இட்டுச் சென்றுள்ளது.

இம்முறை இரண்டு மாணவர்கள்தான் தற்கொலை செய்துகொள்ள முயற்சித்ததாக அறிந்தோம். இன்னும் எத்தனை மாணவர்கள் உளவியல் ரீதியாகக் கொலை செய்யப்பட்டிருப்பர்?

இவ்வாறு தற்கொலை செய்துகொண்டு உயிரை மாய்ப்பதற்காகவா நாம் கல்வி கற்கிறோம்?

பரீட்சை வெற்றியையே வாழ்க்கை வெற்றிக்கான ஒரே வாய்ப்பு என்று நினைப்பதே இந்த நிலைமை ஏற்படக் காரணம். முதலில் நாம் அதைக் கைவிடவேண்டும்.


தேசிய பல்கலைக்கழகங்கள் தவிர, விரிந்துகிடக்கும் உயர் கல்வி வாய்ப்புக்களையும், அதன்மூலம் பெறக்கூடிய தொழில்வாய்ப்புக்களையும் பற்றித் தேடி அறிந்துகொண்டு...

'சிகரம் தொடு' வோம்!

**அன்புடன்**

**கோ.றுஷாங்கன்**

## சிகரம் தொடுவோம்



# கெட்டுப்போனதா குட்டி யாழ்ப்பாணம்?

யாழ்ப்பாணம் கெட்டுப்போச்சு! இளைஞர்கள் கெட்டுப்போய்விட்டனர். கலாசாரம் சீரழிந்துவிட்டது!

சில ஊடகங்களும், இணையத்தளங்களும் அடிக்கடி யாழ்ப்பாணத்தை இப்படிச் சித்திரித்து வருகின்றன.

உண்மையில் என்ன நடக்கிறது? அந்தளவுக்கு யாழ்ப்பாணம் கெட்டுப்போய்க் கிடக்கிறதா.....?

இளைஞர்கள் பஸ்சரில் பறக்கிறார்கள்! கைத்தொலைபேசி, நெட்க.:.பே பாவனை அதிகரித்து-விட்டது! பாடசாலைப் பெண்கள் காதலிக்கிறார்கள்! கர்ப்பமடைகிறார்கள்!! இளைஞர்கள் மது அருந்துகிறார்கள்! விபசாரம் நடக்கிறது! என்ற குற்றச்சாட்டுக்கள் அடுக்கப்படுகின்றன.

அங்கொன்றும் இங்கொன்றுமாக நடக்கும் சில சம்பவங்களைக் கோர்த்துப் பார்த்து, ஒரேயடியாக முழு யாழ்ப்பாணமும் சீரழிந்துவிட்டதாகக் காட்டப்படுகிறது.

கட்டுப்பாடிழந்து இவ்வாறான விடயங்கள் நடக்கக்கூடாது என்ற அக்கறை நியாயமானது என்றாலும், நிலைமையைக் கட்டுப்படுத்துகிறோம் என்று சொல்லி, அதைப் படம்போட்டுக் காட்டிக் கைகொட்டிச் சிரிப்பதா?

போர் முடிவடைந்த பின்னர்தான் இப்படியெல்லாம் நடக்கிறது என்பது பொதுவாக இந்த வாதங்களில் அடிக்கடி தொனிக்கும் ஒரு கருத்து.

போர் நடைபெற்ற காலங்களில் இவையெல்லாம் நடக்கவே இல்லையா என்ற வாதம் ஒருபுறமிருக்க, அப்போ என்னதான் செய்வதாம்?

போர் முடிந்திருக்கக்கூடாதா? ஏ 9 பாதையைத் திறந்திருக்கக்கூடாதா?

யாழ்ப்பாணத்துக்கு நவீன தொலைபேசி வசதிகளும், இணையப் பாவனையும் வந்திருக்கவே கூடாதா?

நாகரீக உடைகளை நம்மவர்கள் அணிவது பெருங்குற்றமா?

மீண்டும் போர்க்காலம்போல் பாதைகள் மூடி, தனிமைப்பட்ட ஒரு இருண்ட யுகத்துக்குள் யாழ்ப்பாணச் சமூகம் தள்ளப்படவேண்டும். நவீன உலகின் எந்த வசதிகளையும் நுகர முடியாதவர்களாக இளைஞர்கள் கட்டுப்பெட்டிகள் ஆகவேண்டும்.

இதுதானா நாம் எதிர்பார்ப்பது?

யுத்தக் கெடுபிடிகளுக்கஞ்சி வீடுகளுக்குள்ளேயே முடங்கியிருக்க நிர்ப்பந்திக்கப்பட்ட இளைஞர்கள், இப்போதுதான் வெளிச்சத்துக்கு வந்து, கைகால்களை நீட்டி, கொஞ்சம் காற்று வாங்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

காற்றில் கொஞ்சம் விஷக் கிருமிகள் கலந்திருந்தால் நோய்நொடிகள் பிடிக்கச் செய்யும்தான்.

உடனே, 'அந்தா விஷக்காற்றைச் சுவாசித்துவிட்டான் நோயாளி!' என்று யுத்தப் பிரகடனம் செய்து மீண்டும் இருண்ட குகைகளுக்குள் இளைஞர்களைத் தள்ளிவிட எத்தனிப்பதா?

நோய் வருமென்றால், நோய்க்காப்பு அவசியம்.

வீட்டிலும், பாடசாலைகளிலும், பொதுச் சூழலிலும் நோய்த்தொற்றைத் தடுக்கவேண்டியது பெற்றோர், அதிபர், ஆசிரியர்களினதும், சமூகத்தினதும் கடமையல்லவா?

அதை எப்படிச் செய்து பிள்ளைகளைக் காப்பது என்று திட்டமிடாமல், யார் யார் காதலிக்கிறார்கள்?, எந்தக் குப்பைக்குள் எவர் பிள்ளையைப் போடுகிறார்கள்? எந்தப் பையன் எந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுகிறான்? எத்தனை பேர் கைத்தொலைபேசி பாவிக்கிறார்கள் என்று கணக்கெடுப்பு நடத்திப் புள்ளிவிபர அறிக்கையிட்டுப் பரபரப்பு வியாபாரம் செய்வதா?

பொறுப்புடன் கையாளப்படவேண்டிய விடயத்தை, வெறும் பரபரப்பு வியாபாரச் சரக்காக்கிக் கொச்சைப்படுத்துவது சரியல்ல.

பொறுப்புள்ளவர்கள் அனைவரும் கூடிச் சிந்திக்கவேண்டிய விடயமிது.

வாசக நெஞ்சங்களும் இதில் கைகோர்த்துக்கொள்ளலாம்.


**இன்றே எமக்கு எழுதுங்கள்! உங்கள் கருத்துக்களை!!**

**'சிகரம் தொடு' குழுவினர்**



"எங்களுக்கு புத்தகங்கள் படிக்க விருப்பம்தான். ஆனால் நேரம் கிடைகிறேல்லை. பள்ளிக்கூடத்தை விட்டுப் போனோன்ன ரியூசனுக்குப் போகவேணும். ரியூசனுக்குப் போய் வந்தோன்ன பள்ளிக்கூட வீட்டு வேலைகள் செய்யோணும். ரியூசனுக்குப் போகாமல் வீட்டில் நிற்க அம்மா அப்பா விடமாட்டினம். 'சோதனை வருகுது படி' என்று பேசுவார்கள்."

யாழ்ப்பாண பாடசாலையொன்றில் கல்வி கற்கும் மாணவர்கள் சிலர் 'சிகரம் தொடு' சஞ்சிகை அறிமுகத்துக்காகச் சென்ற என்னிடம் வெளிப்படையாகச் சொன்ன கருத்துக்கள் இவை.




# வாசிக்க நேரமில்லை?

இன்றைய இளைஞர்களிடம் வாசிப்புப் பழக்கம் அற்றுப்போய்விட்டது என்று அங்கலாய்க்கும் பலருக்கும் இவர்களுடைய கருத்துச் சமர்ப்பனம்.

இளைஞர்களிடம் வாசிப்புப் பழக்கம் அற்றுப்போய்விட்டது என்பது உண்மையென்றால், அதற்கு அவர்கள்மீது சுமத்தப்பட்டுள்ள அதீதமான கல்விச்சுமைதான் காரணம் என்பதை இவர்கள் நமது மண்டையில் உரைக்கும்படியாகச் சொல்லியுள்ளனர்.

இது ஒவ்வொரு நாளும் எல்லாப் பாடசாலைகளிலும், வீட்டிலும் நடக்கும் பிரச்சனைதான். இதனால்தான் பெரும்பாலான மாணவர்கள் பாடசாலைக் கல்வியுடனே தங்களுடைய அறிவுத் தேடலை நிறுத்திவிடுகிறார்கள்.

வாசிப்பே மனிதர்களின் அறிவுப் பசியைப் போக்கவல்லது. உலகத்தின் பரந்த தகவல்கள், பல்வேறுபட்டவர்களின் அனுபவங்கள், சிந்தனைகள், மாற்றங்கள், அதிசயங்கள், அற்புதங்கள் எல்லாவற்றையும் எங்களுக்கு அறியத்தந்து நம்மை வெளியுலகத்துக்குத் திறந்து விடுவது வாசிப்புத்தான்.

எத்தனை நவீன ஊடகங்கள் வந்தும், இன்னும் உலகளாவிய ரீதியில் அச்சு ஊடகங்கள் பெருகிக்கொண்டிருப்பதற்குக் காரணமும் இதுதான்.

ஆனால், எங்களிடம் மட்டும் இந்தப் பழக்கம் இல்லாமல்போனது ஏன்?

தொலைக்காட்சியும், கணினியும், மொபைல் போனும் வந்த பின்னர்தான் இன்றைய பிள்ளைகளிடம் வாசிப்புப் பழக்கம் இல்லாமல் போய்விட்டது என்று சுலபமாகச் சிலர் சொல்லிவிடுகின்றனர்.

நவீன ஊடகங்கள் மக்களை, குறிப்பாக இளைஞர்களை அதிகம் கவரும் என்பது உண்மைதான். ஆனால், வாசிப்புப் பழக்கம் இல்லாமல் போனதற்கான பழியை அவற்றின்மீது தூக்கிப்போடுவது சரியல்ல.

நவீன இலத்திரனியல் ஊடகங்களால் வாசிப்புப் பழக்கம் இல்லாமல்போகிறது என்றால், நம்மைவிட அதிகமதிகம் - 24 மணிநேரமும் - இலத்திரனியல் ஊடகங்களால் சூழப்பட்டுள்ள உலக நாடுகள் பலவற்றிலும் வாசிப்புப் பழக்கம் அறவே இல்லாமல் போயிருக்கவேண்டுமல்லவா?

ஆனால், அங்கெல்லாம் புத்தகங்களும், சஞ்சிகைகளும், பத்திரிகைகளும் இன்னுமின்னும் பெருகிக்கொண்டல்லவா இருக்கின்றன?

நம்முடைய அயல் நாடான இந்தியாவின் தமிழ்நாட்டிலிருந்துதான் நமக்கு பெரும்பாலான திரைப்படங்களும், தொலைக்காட்சி அலைவரிசைகளும் பார்க்கக் கிடைக்கின்றன.

ஆனால்,அதே தமிழ்நாட்டில் பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் கொட்டிக் கிடக்கின்றனவே?

ஆனந்தவிகடன் என்று ஆரம்பித்த ஒரு சஞ்சிகை, இன்று ஜீனியர் விகடன், அவள் விகடன், சக்தி விகடன், நாணயம் விகடன், மோட்டார் விகடன், பசுமை விகடன், சுட்டி விகடன், விகடன் பிரசுரங்கள் (ஏராளம்), விகடனம் டொட் கொம் (இணையத்தளத்தில்) என்று தசாவதாரம் எடுத்துள்ளதே?

இன்னும், குமுதம், குங்குமம், கல்கண்டு, கல்கி, மஞ்சரி, தீராநதி, கலைமகள், காலச்சுவடு என்று சஞ்சிகைகள் ஏராளம் பெருகிக் கிடக்கின்றன தமிழ்நாட்டில்.

உண்மையைச் சொன்னால், இலத்திரனியல் ஊடகங்களின் பெருக்கம் அச்சு ஊடகங்களையும் பெருகச் செய்கின்றதே தவிர, குறைத்துவிடவில்லை.

உலகம் தழுவிய நிலைமை இப்படியிருக்க, நம்மூரில் மட்டும் வாசிப்புப் பழக்கம் இல்லாமல் போவதற்கு இலத்திரனியல் ஊடகங்களைக் குற்றம் சொல்வது, நம்முடைய தவறை மறைக்க நாம் தேடும் ஒரு நொண்டிச் சாட்டுத்தானேயன்றி வேறல்ல.

எங்களுடைய கல்வி முறையை மாற்றி, வீட்டிலும், பாடசாலையிலும் பிள்ளைகளை வாசிக்கத் தூண்டும் பொறுப்பை பெற்றோரும், ஆசிரியர்களும் எடுத்துக்கொண்டால் அது தானாகவே வந்துவிடும்.

இவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று பார்ப்போம்

**திருமதி தா. சிவசங்கர் சர்மா**
**உயர்தர வகுப்பு ஆசிரியரும், நூலகப் பொறுப்பாளரும் கைதடி முத்துகமாரசுவாமி வித்தியாலயம்**

மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கம் அருகிவருவது மிகவும் கவலைக்குரிய விடயம். பாடசாலைக் கல்வியுடன் நின்றுவிடாது பரந்து பட்ட அறிவைப் பெற அவர்கள் முயற்சிக்கவேண்டும்.

சிறு பிள்ளைகள் கூட நவீன முறையிலான கல்வியையே விரும்புகின்றார்கள். அதிலுள்ள கவர்ச்சி, வர்ணம்(கலர்), சத்தம் (ஒலி) போன்றவையே இவர்களைக் கவர்கின்றன. இதனால், இவர்கள் நூலகங்களைத் தேடிப்போவது குறைவு.

பிள்ளைகளுக்கு வாசிப்புப் பழக்கத்தை, வாசிக்கும் ஆர்வத்தை குடும்பச் சூழ்நிலையே உருவாக்குகின்றது. ஒரு வீட்டில் உள்ளவர்கள் கூடுதலாக பெற்றோர் அவர்களுக்கு முன்மாதிரியாக இருக்கவேண்டும். ஒரு நாளில் ஒரு மணித்தியாலத்தையாவது வாசிப்பதற்கு ஒதுக்கவேண்டும். அப்பொழுது பிள்ளைகளுக்கும் வாசித்துப்பார்ப்போம் என்ற எண்ணம் தோன்றும் இல்லையா?

கல்விச்சுமையும் ஒருபுறம் மாணவர்களை வாசிக்க விடாமல் செய்கிறது. இந்த நிலையிலிருந்து பிள்ளைகளை மீட்பதற்கு கதை கூறுதல் சிறந்த வழி. கதையை ஆர்வமாகக் கேட்கும் பிள்ளைகளுக்கு, கதையின் முடிவு இருக்கும் புத்தகத்தையும் வேறு சில புத்தகங்களையும் கொடுத்து வாசிக்கச் செய்யலாம்.

உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு கணிப்பீடு முறையில் தேவையானவற்றை தேடிப்பெறப் பழக்கவேண்டும்.

.....................

**மகேந்திரன்**
**அதிபர், நவீல்ட் விழிப்புலனற்றோர் பாடசாலை**

புத்தகங்களில் அலகுகள் கூட்டப்பட்டு பாடங்கள்



குறைக்கப்பட்டுள்ளன. மாணவர்களுக்கு தனித்திருந்து செயற்படும் திறன் மிகவும் குறைவு. அத்துடன், ஆளுமையும் குறைகிறது. இதற்கான முழுப் பொறுப்பும் பெற்றோரையே சாரும்.

தொலைக்காட்சி நாடகங்களுக்கு அடிமைப்படும் பெற்றோர், பிள்ளைகளின் கல்வியில் அக்கறை செலுத்துவதில்லை. அத்துடன், குடும்பத்தில் சகோதர இணைப்பு மற்றும் ஒற்றுமை என்பனவும் குறைவாகக் காணப்படுகின்றன.

பாடசாலை மட்டத்தில் ஆசிரியர்கள் மாணவர்களை வாசிக்கத் தூண்டவேண்டும். ஈழத்து நூல்கள் பற்றிய அறிமுகம் மாணவர்களுக்கு அவசியம் தேவை.

.....................

**குகனேஸ்வரன்**
**உரிமையாளர்: நிலாமலர் புத்தகச்சோலை**

இங்கு வரும் மாணவர்கள் கதைப் புத்தகங்கள், துப்பறியும் கதைகள், ராணி காமிக்ஸ் போன்றவற்றில் ஆர்வம் காட்டுகின்றார்கள். ஆனால், பெற்றோர் கல்வி சார்ந்த புத்தகங்களையே வாசிக்கவேண்டும் எனக் கட்டாயப்படுத்துகின்றனர். இதனால் மாணவர்களின் சிந்தனை வட்டம் குறைகின்றது.

மாணவர்களின் எண்ணங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும்போதே அவர்கள் பரந்துபட்ட சிந்தனையாளர்களாக வளர்வார்கள். எனவே, பெற்றோர் சிந்தித்துச் செயற்படவேண்டும்.

அத்துடன் வீடுகள் தோறும் நூலகங்கள் உருவாகவேண்டும். ஈழத்து நாவல்களுக்கு எல்லோரும் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்.

**– செ.கார்த்திகா**



# பள்ளிக் காதல் பயன் தருமா?

பாடசாலை மாணவி ஒருவர் தனது காதலனுடன் இணைந்து எடுத்துக்கொண்ட நெருக்கமான படங்களை இணையத்தளங்களில் வெளியிட்டு, அவர் பாடசாலையிலிருந்து விலக்கப்பட்டதாக பரபரப்பான செய்தியொன்று அண்மையில் வெளியாகியிருந்தது.

வெளிநாடுகளிலிருந்து இயக்கப்படும் சில இணையத்தளங்களில் வெளியான இந்தச் செய்தியில், குறிப்பிட்ட மாணவியினதும், மாணவனதும் தனிப்பட்ட வாழ்க்கை சார்ந்த விடயங்கள் வேண்டுமென்றே வெளிச்சம் போட்டுக் காட்டப்பட்டன.

இந்த மாணவியை பாடசாலையிலிருந்து விலக்கி விட்டதாகவும், ஆனாலும், மாணவன் மீது அவர் கற்கும் பாடசாலை நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் அந்த இணையத்தளங்கள் குற்றஞ்சாட்டியிருந்தன.

பாடசாலை மட்டத்தில் மாணவர்களிடையே இவ்வாறான நிலைமை அதீதமாவது கவனத்தில் கொள்ளப்படவேண்டிய விடயம்தான். இதனைக் கட்டுப்படுத்த பாடசாலை நிர்வாகங்களும், பெற்றோரும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதும் உண்மைதான்.

ஆனால், குறிப்பிட்ட விவகாரத்தை மேற்படி இணையத்தளங்கள் கையாண்ட விதமும், தனிப்பட்ட வாழ்வின் அந்தரங்கங்கள் அம்பலப்படுத்தப்பட்டதும் அநாகரிகமான செயற்பாடுகளாகவே கணிக்கப்படவேண்டும்.

தனி மனிதனின் அடிப்படை உரிமையான, 'ஒருவரது அந்தரங்கத்துவம், குடும்பம், வீடு அல்லது கடிதப் போக்குவரத்து சம்பந்தமாக தலையிடவோ அல்லது அவரது மரியாதை நன்மதிப்பு என்பவற்றை தாக்குதலுக்கு உட்படுத்த-லாகாது' என்ற சர்வதேச மனித உரிமை (உறுப்புரை 12) சட்டத்துக்கு மாறான செயற்பாடாகவே இது அமைந்திருந்தது.

'இத்தகைய தலையீட்டுக்கு அல்லது தாக்குதல்களுக்கு எதிராக ஒவ்வொருவரும் சட்டப் பாதுகாப்புக்கு உரிமையுடைய-வராவார்' (உறுப்புரை 12) என்பதை ஊடகங்கள் கவனத்தில் எடுக்கவேண்டும்.



**காதல் தப்பானதா?**

பாடசாலை மட்டத்தில் காதல் விவகாரங்கள் தோன்றுவதொன்றும் புதிதல்ல. ஏதோ இன்றுதான் ஆரம்பித்திருக்கும் ஒரு புதினமுமல்ல.

எதிர்ப்பால் கவர்ச்சியின் அடிப்படையில் தோன்றும் இந்த பருவ வயதுக் காதல் கோளாறுகள் நமது பாட்டன் முப்பாட்டன் காலத்திலிருந்தே இருந்து வருகிறது.

ஆனால், அண்மைக்காலமாக இந்தப் போக்கு அதீதமாகி வருகிறது என்ற குற்றச்சாட்டு சமூகத்தில் முன்வைக்கப்படுகிறது. மாணவர்கள் ஏன் இவ்வாறு நடந்து கொள்கிறார்கள்?

பள்ளிப்பருவ வயது, அதாவது டீன் ஏஜ் என்று சொல்லப்படும் பருவ வயது, எதுவுமே முழுமையாகப் புரிபடாத ஒரு காலம். அர்த்தமற்ற ஆசைகள், கனவுகள் துளிர்விடும் பருவம். சினிமாக்களைப் பார்த்துவிட்டு மனதுக்குள் டூயட் பாடித் துள்ளித் திரியும் காலம்.

ஆடம்பர வாழ்வை விரும்பும் மனப்பாங்கு, சமுதாயக் கட்டுப்பாடுகளைப் புறக்கணிக்கும் அசட்டுத் துணிவு என்பன இவ்வயதினரில் இயல்பாகவே தோன்றும் பண்புகளாகும்.

இந்த வயதில் தோன்றும் காதல்,



பருவ வயதின் இயல்பான ஏனைய பண்புகளுடனும் இணைந்து, முன்பின் யோசிக்காத முரட்டுத்தனமான நடத்தைக்கு வழிகோலிவிடும். அதனால்தான் அது எல்லைமீறிய செயற்பாடுகளாகி அவர்களுக்கே பின்னர் தலையிடியைக் கொடுத்துவிடுகிறது.

பெண்களைக் கண்டாலே மனதில் ஒரு குறுகுறுப்பு - ஆண்களுக்கு. அரும்பு மீசையைப் பார்த்தவுடன் இனம்புரியாத பரபரப்பு - பெண்களுக்கு.

இந்த எதிர்ப்பால்க் கவர்ச்சியை உடனே காதல் என்று நினைத்துக் கொள்வதாலேயே பிரச்சினை வருகிறது.

உடலிலும் மனதிலும் ஏற்படும் இரசாயன மாற்றங்களின் விளைவாகத் தோன்றும் எண்ணங்கள் தான் இவை. இதை தவறு என்று சொல்ல முடியாது. இந்த மாதிரியான எண்ணம் நம் மனதில் தோன்றவே கூடாது என்றில்லை. அப்படி நினைத்தால் இயற்கைக்கு எதிராகச் சென்று, இயல்பாகத் தோன்றும் நம் மன உணர்வுகளை நமக்குள் அடக்கி வைக்கத் தொடங்கிவிடுவோம்.

அதற்காக காதலே வேண்டாம் என்று இருந்துவிட வேண்டியதில்லை. காதல் ஒரு அற்புதமான உணர்வு. தூய அன்பின் புனித வடிவம். அன்பு தான் காதல்.

ஆனால், அது போதையாகி, மதிகெட்டு நம்மைக் கட்டுப்பாடின்றித் திசைகெட்டுப் போகச் செய்துவிடக்கூடாது.

மனக்கட்டுப்பாடுதான் இங்கே பிரதானமானது.

**காதல் உணர்வு ஏற்பட்டுவிட்டதா?**

கட்டிப்போடுங்கள் என்று சொல்லவில்லை. ஒத்திப்போடுங்கள்.

இப்போது இது அவசியமானதா என்று யோசியுங்கள். இரண்டு பேருமே படித்து ஒரு நிலைக்கு வரமுன்னர் காதல் உணர்வுக்கு ஆட்பட்டு எதிர்காலத்தைக் குழப்பிக்கொள்ளலாமா என்று சிந்தியுங்கள்.

உங்கள் காதல் உணர்வை படிப்பில் காட்டுங்கள். இருவருமே இதை ஒரு சவாலாக எடுத்துக்கொண்டு

**இரண்டுபேருமே படித்து ஒரு நிலைக்கு வரமுன்னர் காதல் உணர்வுக்கு ஆட்பட்டு எதிர்காலத்தைக் குழப்பிக்கொள்ளலாமா என்று சிந்தியுங்கள்.**

முதலில் படிப்பில் முன்னேறுங்கள். காதல் ஒரு ஊக்கமாத்திரை போல் செயற்படுவதைக் காண்பீர்கள்.

அது மட்டுமன்றி, பள்ளிப் பருவத்தில் நமக்குள் ஏற்படும் இந்த மன உணர்வுகளை அடக்கி வைப்பதைவிட, அதைப்பற்றி வெளிப்படையாகப் பேசிப் புரிந்துகொள்வதன் மூலமும் பிரச்சினையிலிருந்து விடுதலை பெறலாம்.

காதல் உணர்வு நமக்கு ஏன் ஏற்படுகிறது?

எந்த அளவுக்கு அந்த உணர்வுகளை மதிக்கலாம்?

அந்த உணர்வால் நம் எதிர்காலத்துக்கு ஏதாவது பாதிப்பு ஏற்படுமா?

இந்த மாதிரி பல கோணங்களில் சிந்தித்துப் புரிந்துகொள்ளுங்கள். உங்களுக்கு தெளிவான பதில் கிடைப்பதுடன் உங்கள் கல்விக்கும் தடையிருக்காது.

உங்களுக்கு இன்னும் நிறையக் காலம் இருக்கிறது. இன்றைக்கே முடிந்துவிடப்போகிற வாழ்க்கையா என்ன? சிந்தியுங்கள்!


உரிய காலம், நேரம் வரும்போது எல்லாம் சுபமாக முடியும்!

எல்லோரின் எதிர்காலமும் சிறக்க நல்வாழ்த்துக்கள்! ■

**– ம.யசோ**



# நில்! கவனி!! செல்...



கே.கே.எஸ். வீதியால் பயணித்துக்கொண்டிருந்த நடுத்தர வயது பெண் மீது பின்னால் வந்த வாகனம் மோதி அவர் தலை நசுங்கிப் பலியான செய்தி அண்மையில் யாழ்ப்பாணத்தை உலுப்பியிருந்தது.

அவ்வாறே சில மாதங்களுக்கு முன்னர், மோட்டார் சைக்கிளில் சென்ற இரண்டு பல்கலைக்கழக மாணவர்கள், வீதியில் நிறுத்தப்பட்டிருந்த வாகனத்துடன் மோதி அந்த இடத்திலேயே பலியான செய்தி பலரையும் அதிர்ச்-சிக்குள்ளாக்கியது.

விபத்துக்கள், அதனால் ஏற்படும் மரணங்கள் இப்போது அடிக்கடி நிகழும் ஒன்றாகிவிட்டன. போர் முடிந்து, வன்முறைகள் ஓய்ந்து, மனித உயிர்களுக்கு உத்தரவாதம் அதிகரித்திருக்கும் இன்றைய சூழ்நிலையில், கவனயீனமான வாகன ஓட்டும் பழக்கத்தினால் அநியாய உயிரிழப்புக்கள் ஏற்பட்டு வருகின்றன.

ஏன் இப்போது வாகன விபத்துக்கள் திடீரென அதிகரிக்கின்றன?

யாழ்ப்பாணத்தில் முன்பு வீட்டுக்கு 2 - 3 சைக்கிள்கள் இருந்தது. இப்போது 2 - 3 மோட்டார் சைக்கிள்கள்தான் வீட்டுக்கு வீடு உள்ளன. அதிலும் இளைஞர்களிடமே அதிகம் உள்ளன.

மோட்டார் சைக்கிள்கள் அதிகரித்தபோதும், பெரும்பாலான-வர்களுக்கு அவற்றைச் செலுத்துவதற்குப் போதிய சாரதி அனுபவமோ, அனுமதிப்பத்திரமோ இருப்பதில்லை.

தற்போது போக்குவரத்துப் பாதைகள் சுமுகமாகிவிட்ட நிலையில், வெளி வாகனப் போக்குவரத்துக்கள் அதிகரித்து, நெரிசல் கூடியிருப்பதால், நிலைமை இன்னும் மோசமாகிவிடுகிறது.

சுமார் மூன்று தசாப்தங்களுக்கு மேலாகக் கவனிப்பாரற்றுக் கிடக்கும் யாழ் வீதிகள், திடீரென அதிகரித்திருக்கும் இந்த வாகனப்-போக்குவரத்தைச் சமாளிக்க முடியாது திணறுகின்றன.

இவையெல்லாம் வாகன விபத்துக்களின் அதிகரிப்புக்கு காரணமாகிவிடுகின்றன.

ஆனாலும், வெறுமனே சூழலை குறைகூறுவதை விடுத்து, வாகனங்களைச் செலுத்துவோர் கூடுதல் அவதானமாக இருந்தால் விபத்துக்களைத் தவிர்க்கலாம்.

இவ்வாறு, வீதி விபத்துக்கள் யாழ்ப்பாணத்தில் அதிகரிப்பதற்கான காரணங்கள் பற்றி அறிவதற்காக, அரச அங்கீகாரம் பெற்ற வாகனப்





# எம்மால் முடிந்ததைச் செய்கிறோம்

பயிற்றுவிப்பு நிறுவனமான ஈஸ்ரி லேனர்ஸ் (Esty Learners) இன் இயக்குநரும், அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்றுவிப்பாளருமான திரு. சொ.பாஸ்கரன் அவர்களிடம் பேச்சுக் கொடுத்தோம்.

“அண்மைக்காலமாக மோட்டார் சைக்கிள்களால்தான் அதிக வீதி விபத்துக்கள் நடக்கின்றன. 18 வயதுக்குட்பட்ட தமது பிள்ளைகளை மோட்டார் வாகனங்களைச் செலுத்த அனுமதிக்கும் பெற்றோரும் இதற்குக் காரணம்” என்று நிலைமையின் தீவிரத்தன்மையை எமக்கு விளக்கிய அவர்,

“தனது உயிரும், வீதியில் பயணிக்கும் மற்றையவர்களின் உயிரும் தனது வாகன செலுத்துகையில் தங்கியுள்ளது என்பதை வாகனங்களைச் செலுத்துவோர் உணரவேண்டும்” என்று ஆலோசனை கூறினார்.

பொதுவாக யாழ்ப்பாணத்தில் வீதி விபத்துக்கள் ஏற்படும் காரணங்களை அவர் இவ்வாறு பட்டியலிட்டார்.

- மதுபோதையில் வாகனத்தைச் செலுத்துதல்
- உள்வீதியிலிருந்து வாகனங்களில் வருவோர், பிரதான வீதியில் வருகின்ற வாகனங்களைக் கவனிக்காமல் நேரடியாகப் பிரதான வீதிக்குள் நுழைதல்.
- நாற்சந்தி (மத்திய வளைவு) களில் வலப்பக்கம் வருகின்ற வாகனங்களுக்கு இடங்கொடாமை.
- கட்டுமீறிய வேகத்தில் வாகனம் செலுத்தல்.
- வீதியில் ஒரே சமாந்தரத்தில் 3/4 துவிச்சக்கரவண்டிகளைச் செலுத்துதல்.
- பாதசாரிகள் வீதிகளைக் கடக்கும் கடப்புக்களில் அவர்களுக்கு இடம்கொடாமை.
- திருத்தப்படாத வாகனங்களை/ சேதமான தேய்ந்த ரயர்களுடன் வீதியில் செலுத்துதல்.
- எதிரே தெளிவற்றுக் காணப்படும் வீதி வளைவுகளில் வேகமாக வாகனங்களைச் செலுத்துதல்.

யாழ்ப்பாணத்தில் அதிகரித்துவரும் வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்த தம்மால் முடிந்ததைச் செய்துவருவதாக, யாழ் போக்குவரத்துப் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த பண்டார என்பவர் கூறினார்.

யாழ்ப்பாணம் பலாலி வீதியில் நவம்பர் 30ம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற்ற விபத்துச் சம்பவமொன்றை விசாரிக்க வந்த அவரிடம் பேச்சுக்கொடுத்தபோது, இந்த வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்த மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றி அவர் விளக்கமளித்தார்.

பலாலி வீதியில், யாழ் நகரை நோக்கி வந்துகொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று, திடீரென வலதுபக்கம் திரும்ப முற்பட்டபோது, யாழ் நகரிலிருந்து வந்துகொண்டிருந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி, இரண்டு மோட்டார் சைக்கிள்களும் எதிரே வந்த லாண்ட் மாஸ்டருடன் மோதின.

யாழ் நகர் நோக்கி வந்துகொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநரிடமும், லாண்ட் மாஸ்டர் சாரதியிடமும் வாகன அனுமதிப்பத்திரம் இருக்கவில்லை.

“வாகன அனுமதிப்பத்திரம் இல்லாமல் வாகனம் செலுத்துவோராலேயே இப்போது அதிகளவு வாகன விபத்துக்கள் நடைபெறுகின்றன” என்று கூறிய அந்த போக்குவரத்துப் பொலிஸ் உத்தியோகத்தர், அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்களும் போக்குவரத்து விதிமுறைகளை உரிய முறையில் கடைப்பிடிப்பதில்லை என்று கூறினார்.

பல ஆண்டுகளாக சிவில் நிர்வாகம் சீராக இருந்திராத காரணத்தினால், யாழ்ப்பாணத்தவர்களுக்கு போக்குவரத்து விதிமுறைகள் பற்றித் தெரியவில்லை என்று கூறிய அவர், போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பாக பொதுமக்களுக்கு அறிவூட்டுவதற்கு தம்மாலான முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகக் கூறினார்.

முச்சக்கர ஓட்டுநர் சங்கம், தனியார் வாகனப் போக்குவரத்துச் சங்கம், பாடசாலைகள், பொது நிறுவனங்கள் என்று பல இடங்களிலும் போக்குவரத்து விதிமுறைகள் பற்றி விளக்கமளிக்கும் கருத்தரங்குகளை பொலிஸார் நடத்தி வருவதாக அவர் சொன்னார்.

“எல்லோருக்கும் வீட்டுக்கு வீடு போய் போக்குவரத்து விதிமுறைகளை எம்மால் சொல்லித்தர முடியாது. பொதுமக்களும் இவைபற்றி அறிந்துகொள்ள முயற்சிக்கவேண்டும். ஊடகங்களுக்கு இதில் பெரும் பொறுப்பு இருக்கிறது” என்றார் அந்தப் பொலிஸ் உத்தியோகத்தர்.



- இரவில் வெளிச்ச விளக்கு இன்றி அல்லது ஒருபக்க வெளிச்ச விளக்குடன் பயணித்தல்.
- இரவில் எதிரே வரும் வாகனங்களுக்கு தமது வெளிச்ச விளக்கை குறைக்காமை.
- இரவில் வாகனத்தை நிறுத்தி வைக்கும்போது அபாய விளக்கை எரியவிடாமை.
- வாகனங்களைச் செலுத்தும்போது கையடக்கத் தொலைபேசியில் உரையாடுதல்.
- வலப்பக்க வளைவில் திரும்புகின்றபோது, வாகனத்தை இடதுபக்க ஓரமாய்ச் செலுத்தாது, குறுகிய அளவில் வலது பக்கமாகவே பாரப்படுத்தி வளைவிற் செலுத்துதல்.

| வாகனங்கள் | நகருக்குள்ளே | நகர எல்லைக்கு வெளியே |
|---|---|---|
| மோட்டார் கார், ஜீப் வண்டிகள், இரட்டைநோக்க வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள் | 50Km/h | 70Km/h |
| பஸ் வண்டிகள், லொறிகள், இழுவை வண்டிகளுடன் கூடிய பிறேம் மூவர்கள், ஆறு சில்லுகள் அல்லது அதற்கு மேற்பட்ட சில்லுகளைக் கொண்ட மோட்டார் வாகனங்கள் | 50Km/h | 60Km/h |
| முச்சக்கர வண்டிகள், உழவு இயந்திரங்கள், இழுவை வண்டிகள் | 40Km/h | 40Km/h |

மேலே குறிப்பிட்ட காரணங்களை அவதானித்துச் செயற்பட்டால் விபத்துக்களிலிருந்து தப்பித்துக்கொள்வதுடன், விலை மதிக்கமுடியாத உயிரையும், பெறுமதிமிக்க உடைமைகளையும் பாதுகாத்துக் கொள்ளமுடியும் என்றார் அவர்.

இவற்றுடன், பாடசாலைகளில் வீதி ஒழுங்குகள் பற்றி மாணவர்களுக்கு கற்பித்தல் அவசியம் என்றும், வாகனத்தை செலுத்தும் ஒவ்வொருவரும் வீதியில் இறங்க முன் தமது வாகன Tax, Insurance, Driving License என்பவற்றைப் பார்ப்பதுபோல், தமது வாகனத்தின் நிலைமை, ரயர்களின் நிலை என்பவற்றைப் பரீட்சித்து, தனது மனோநிலையையும் உணர்ந்த பின்னர் வாகனத்தைச் செலுத்த முற்படவேண்டும் என்றும் அவர் ஆலோசனை கூறினார்.



"விபத்துக்கள் ஏற்படக்கூடும் என உணரப்படும் இடங்களில் முன்னெச்சரிக்கையுடன், அவதானமாக உரிய முறையில் வாகனங்களைச் செலுத்துங்கள்."

"பாதுகாப்பான இடைவெளியில் வாகனத்தைச் செலுத்துவதுடன், இயலுமானவரை வாகனம் செல்லும் ஒழுங்கைச் சரியாகப் பேணுங்கள்."

"முந்திச்செல்லவேண்டிய தேவை வந்தால் மட்டும் பாதுகாப்பாக முந்திச்செல்லும் முறையைப் பின்பற்றுங்கள்."

"இவற்றைவிட முக்கியமாக, இதற்கு முன் ஒருபோதும் நான் எந்தவொரு விபத்தையும் சந்திக்கவில்லை என்ற மனோநிலையில், வாகனத்தைச் செலுத்துவதைக் கைவிடுங்கள்."

என்று, தமது அனுபவ ஞானத்தை இளம் வாகன ஓட்டுநர்களுக்காகப் பகிர்ந்துகொண்டார் அவர்.


எங்கள் உயிர் மட்டுமன்றி வீதியில் பயணிக்கும் மற்றைய உயிர்களுக்கும் உத்தரவாதமானதும், பாதுகாப்பானதுமான போக்குவரத்து விதிமுறைகளைப் பின்பற்றி வாகனத்தை நாம் செலுத்தினால், வீதி விபத்துக்களைக் குறைக்கலாம் அல்லவா? ■



**– சிந்து.சச்சி**

2ம் அணி

# ஹரிச்சந்திராவின் பசுமை இல்லம்



### கொக்குவில் இந்து 'இளம் விஞ்ஞானி' சாதனை!

ஏட்டுக் கல்விக்கு அப்பால், விளையாட்டு, அறிவியல் என பல துறைகளிலும் புதிய பல சாதனைகளைப் படைத்துவரும் நமது இளைஞர்கள் வரிசையில், கொக்குவில் இந்துக் கல்லூரி உயிரியல் பிரிவைச் சேர்ந்த மாணவன் காலிங்கராசா ஹரிச்சந்திராவும் இணைந்துகொண்டுள்ளார்.

இயற்கைச் சூழலோடு ஒன்றிய வாழ்வுக்கு ஏற்ற மாதிரியாக, மாற்று உபயோகமுள்ள மூலப்பொருள்களைக் கொண்டு இவர் அமைத்த மாதிரி வீட்டுக்காக இவருக்கு **'இளம் விஞ்ஞானி'** விருது கிடைத்துள்ளது.




அகில இலங்கை ரீதியில் 600 மாணவர்கள் போட்டியிட்ட இத்தேர்வில், தெரிவுசெய்யப்பட்ட 50 மாணவர்களின் கண்டுபிடிப்புக்கள் கடந்த ஒக்டோபர் 8,9,10 ம் திகதிகளில் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கண்காட்சிக்கு வைக்கப்பட்டது.

Techno-2010 என்ற இக்கண்காட்சியில், காலிங்கராசா ஹரிச்சந்திராவினுடைய 'சூழலுக்கு நண்பனாக அமைந்த மாதிரி வீட்டு நிர்மாணத் திட்டம்' தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுச் சாதனை படைத்தது.

சென்ற வருடம் மொரட்டுவ பல்கலைக்கழகத்தினால் நடத்தப்பட்ட Innomech 2010 புத்தகக் கண்காட்சியிலும் இவர் தேசியமட்டச் சான்றிதழைப் பெற்றிருந்தார். இவரைத் தவிரவும், கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த சிறிதரபவான் சக்திதாஸ், பகீரதன் ஜெனகன் ஆகிய இரண்டு மாணவர்களும் இறுதித் தேர்வு வரை போட்டியில் கலந்து கொண்டிருந்தனர்.

சர்வதேச ரீதியில் கவனத்தைப் பெறும் 'பசுமைக் கொள்கை'யை கவனத்தில் எடுத்து, மீளப் பயன்படுத்தக்கூடிய சக்தி மூலங்களை இயற்கையில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும் என்ற கருப்பொருளை மையமாக வைத்து, இந்த வீட்டை இவர் உருவாக்கியுள்ளார்.



ஏற்கனவே உள்ள வீடுகளின் அமைப்புக்களை ஆராய்ந்து, பொருத்தமான மாற்றங்களை உள்ளடக்கி, பசுமைக் கொள்கை பற்றிய தன்னுடைய தேடலுடன் இணைத்து இந்த மாதிரி வீட்டை அவர் உருவாக்கியுள்ளார்.

இதில், எல்லா இயற்கை வளங்களும் சூழலுக்கு எவ்வித தீங்கும் ஏற்படாத வகையில் பயன்படுத்தப்படுகின்றன. சக்தி மாற்றத்துக்கு காற்றலை உதவுகிறது. வீட்டுக்குத் தேவையான மிகக் கூடியளவு சக்தி உயிர்வாயுவில் இருந்தே பெறப்படுகின்றது. வீட்டின் சேதனக் கழிவுகள் உயிர்வாயு கருவியைத் தொழிற்படுத்த உதவுகிறது.

வீட்டின் நிர்மாண அமைப்பானது சுற்றாடலுக்கு பாதகமில்லாமலும், குடியிருப்பாளர்களுக்கு வசதியுள்ள-தாகவும் உருவாக்கப்பட்டுள்ளது. மழைக்காலங்களில் நீர் வீட்டினுள் புகாதவாறு அமைக்கப்பட்டுள்ள இந்த வீட்டில், மழை நீரைச் சேமிக்கவென சேமிப்புத் தொகுதி ஒன்றும் உள்ளது. மிகுதி மழைநீர் பயிர்களால் உபயோகிக்கப்படும்.

இதனால், ஒரு துளி நீரும் வீணாகாதவாறு தடுக்கப்படுகிறது. எதிர்காலத்தில் இவ்வாறான வீடுகள் நிஜத்தில் அமைவது சாத்தியமாகவேண்டும் என்பதே இந்த மாணவனின் பெருவிருப்பமாக உள்ளது ■



**- சி. சிவபிரபா**
2ம் அணி



# ஏ.எல்.க்குப் பின் ஏராளம் வாய்ப்புக்கள்



பல்கலைக்கழகம் கிடைக்கவில்லையா? நீங்கள் அதிர்ஷ்டசாலிதான்! இதென்ன, துன்பப்பட்டுப்போயிரு-க்கும்போது ஜோக் அடிக்கிறேன் என்று நினைக்காதீர்கள். கொஞ்சம் கீழே படியுங்கள்!

உங்களுக்கு மட்டும்தானா பல்கலைக்கழகம் கிடைக்கவில்லை?

2009இல் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய சுமார் 199,000 பேரில், ஒரு இலட்சத்துக்கு 79ஆயிரம் பேருக்கும் அதிகமானவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதி கிடைக்க-வில்லை.

ஒவ்வொரு வருடமும் இதுதான் நடக்கிறது.

உயர்தரப்பரீட்சைக்குத் தோற்றுபவர்களில் 90 சதவீதம் பேருக்கு ஒவ்வொரு தடவையும் பல்கலைக்கழக அனுமதி கிடைப்ப-தில்லை. ஆனால், இவர்களுக்கு பட்டக்கல்வி வாய்ப்புக்களை வழங்குவதற்கு ஏராளமான பல்கலைக்-கழகங்களும், தனியார் கல்வி நிறுவனங்களும் உள்ளன.

**என்ன செய்யலாம்?**

“இந்த முறைதானே அனுமதி கிடைக்கவில்லை. இன்னுமொரு தடவை முயன்று பார்!.” உங்கள் அம்மா, அப்பா உட்பட, உங்களுக்குக் கற்பித்த ஆசிரியர்கள், நண்பர்கள் வரையில் இவ்வாறு உங்களுக்கு ஆலோசனை சொல்லக்கூடும்.

கூடாதென்றில்லை. நீங்கள் பல்கலைக்கழக அனுமதித் தகுதிக்கான புள்ளிகளை மிக நெருங்கியிருக்கிறீர்கள் என்றால், இன்னொரு தடவை முயன்று பார்ப்பதில் ஒன்றும் கெட்டுவிடாது.

ஆனால், அடுத்த முறை பரீட்சைக்-குத் தோற்றும்போது, உங்களோடு போட்டிபோடுபவர்களின் எண்ணிக்-கை இன்னும் அதிகரிக்கிறது என்பதை மறந்துவிடாதீர்கள்.




**வேறு வழியே இல்லையா?**

தேசியப் பல்கலைக்கழகங்க-ளுக்குள் போவது ஒன்றுதான் உயர்கல்விக்கு இருக்கும் ஒரே வாய்ப்பு என்றில்லை. உண்மையில் இவற்றைத் தவிர சுலபமாக உயர்கல்வியை முடிக்கக்கூடிய, முடித்தவுடன் தொழில் ஒன்றைப் பெற்றுக்-கொள்ளக்கூடிய ஏராளமான வாய்ப்புக்கள் விரிந்து கிடக்கின்றன.

என்னதான் படித்தாலும், என்ன பட்டம்தான் பெற்றாலும், இறுதியாகத் தொழில் ஒன்றைப் பெற்றுக்கொள்வதுதானே எமக்கு அவசியமானது?

இதோ, எம்மைச்சூழ விரிந்துகிடக்கும் உயர் கல்வி வாய்ப்புகள் பற்றிய தகவல்களை உங்கள்முன் பட்டியலிடுகிறோம்.




**1. வெளிவாரிப் பட்டப்பழிப்பு:**
பல்கலைக்கழகம் போய்த்தான் பட்டம் பெறவேண்டுமென்றில்லை. உயர்தரத்தில் 3 பாடச்சித்தியுடன் வெளிவாரியாகவும் பட்டக்கல்வியைத் தொடரலாம். யாழ், பேராதனை, கிழக்கு பல்கலைக்கழகம் உட்பட, நாட்டின் அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் வெளிவாரிப் பட்டப்படிப்பைத் தொடரலாம். பட்டங்களில் உள்வாரி, வெளிவாரி என்ற எந்த வேறுபாடும் கிடையாது. வெளிவாரியாகப் பட்டம் பெற்ற பலர் பேராசிரியர்களாக உயர்ந்துள்ளனர்.

**2. திறந்த பல்கலைக்கழகம்:**
உயிரியல், இரசாயனவியல், பௌதீகவியல், கணிதம், பொருளாதாரம், சமூகவியல் உள்ளிட்ட ஏதேனும் ஒரு பாடத்தில் மேற்படிப்பைத் தொடர்வதற்கு திறந்த பல்கலைக்கழகம் உங்களுக்கு வாய்ப்பளிக்கிறது. உயர்தரத்தில் 3 பாடச் சித்தியுடன் உங்களுக்கு விரும்பிய பாடநெறியை இங்கு தொடரலாம். அதிக சுதந்திரத்துடன், வேண்டுமானால் தொழில் ஒன்றைச் செய்துகொண்டே கற்கைநெறியைத் தொடரவும் முடியும்.('சிகரம் தொடு' ஒக்டோபர் இதழில் விரிவான தகவல்கள் உண்டு).மேலதிக விபரங்களுக்கு: www.ou.ac.lk.

**3. இரசாயனவியல் கற்கை:**
இரசாயனவியலில் அதிக ஈடுபாடுள்ளவர்களுக்கு Institute of Chemistry நல்ல தெரிவு. மேலதிக விபரங்களுக்கு:www.ichemc.com

**4. தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்:**
சமூகப் பணித்துறையில் டிப்போளமா, பட்டச்சான்றிதழ் மற்றும் முதுமானி கற்கைநெறிகளை இங்கே தொடரலாம்.
மேலதிக விபரங்களுக்கு
தொ.பே.: 011-2690934

**5. தொழில்முறைக் கற்கைகள்:**
எந்தத் துறையில் பட்டம் பெற்றாலும், உடனடியாக அதற்குத் தொழில் கிடைத்துவிடும் என்றில்லை. விரைவில் தொழில் ஒன்றைப் பெற்றுக் கொள்ளவேண்டுமானால், அதற்குப் பொறுத்தமான கற்கைநெறியைத் தொடர வேண்டும். கணக்கியல் பாடநெறிகள் (Chartered Accounting, CIMA, ACCA), கணினி மற்றும் தகவல் தொழில்நுட்பம் (SLIIT, NIBM, BCS/ACS/NCC – தனியார் நிறுவனக் கற்கைகள்), முகாமைத்துவம், வர்த்தகம் மற்றும் சந்தைப்படுத்தல் (NIBM, CIM மற்றும் பல்கலைக்கழக வெளிவாரிக் கற்கைகள்).

**6. வெளிநாட்டுப் பட்டக் கல்வி:** வெளிநாடு சென்று கல்வி கற்பது உங்கள் நோக்கமாயின், அமெரிக்கா, ரஷ்யா, ஐக்கிய இராச்சியம், கனடா, மலேசியா, சிங்கப்பூர், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் இந்தியா உள்ளிட்ட நாடுகளில் வெளிநாட்டுப் பட்டக்கல்வியைத் தொடர முடியும். நேபாளம், ரஷ்யா, பங்களாதேஷ், சீனா, இந்தியா ஆகிய நாடுகளில் உயர்தரத்தில் சாதாரண சித்தி பெற்றவர்கள் கூட மருத்துவக் கல்வியைத் தொடர முடியும்.

**7. சர்வதேச அங்கீகாரம் பெற்ற பட்டக்கல்வி:**
உள்நாட்டில் பல தனியார் கல்வி நிறுவனங்கள் சர்வதேச பல்கலைக்கழகங்களினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டக்கல்வியை வழங்குகின்றன. விஞ்ஞானம், கணினி, தகவல் தொழில்நுட்பம், முகாமைத்துவம், தூய மற்றும் பிரயோக கணிதம் உள்ளிட்ட பல பாடத்துறைகளில் பட்டக்கல்வியைப் பெறும் வசதி தனியார் கல்வி நிறுவனங்களில் உண்டு.

**8. உல்லாசப்பயணத்துறைக் கற்கைகள்:**
உல்லாசப் பயணத்துறையில் அதிகரித்துவரும் வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளலாம். பொருத்தமான கற்கைநெறிகள் பற்றிய மேலதிக விபரங்களுக்கு: www.slithm.edu.lk

**9. சட்டக்கல்வி:**
சட்டக்கல்வி நுழைவுத் தேர்வுக்குத் தோற்றுவதன் மூலம் இலங்கை சட்டக் கல்லூரியில் இணைந்து ஒரு சட்டத்தரணியாக உயரலாம்.

**இன்னும் பல:**
தொழில்நுட்பக் கல்லூரிகள், தேசிய கல்வியியல் கல்லூரிகள், விவசாயக் கல்லூரிகள், உயர் தொழில்நுட்ப நிறுவகம், வாழ்க்கைத் தொழிற்கல்வி அமைச்சினால் நாடளாவிய ரீதியில் நடத்தப்படும் தொழிற்கல்வி பயிற்சி மையங்கள் மற்றும் கணினிக் கற்கை நிறுவனங்கள் என இன்னும் பல நிறுவனங்கள் தொழில்வாய்ப்புக்கு உத்தரவாதமான குறுகியகால கற்கைநெறிகளையும்,பட்டக்கல்வியையும் வழங்குகின்றன. ■

– கோ.றுஷாங்கன்



# ஹோட்டல் முகாமைத்துவக்கற்கைகள்

உல்லாசப் பயணத்துறை துரித வளர்ச்சி கண்டு, இம்முறை வரவுசெலவுத் திட்டத்திலும் முக்கிய கவனத்தைப் பெற்றிருக்கிறது. 2012ம் ஆண்டு முடிவுக்கிடையில் நாடு முழுவதும் மேலதிகமாக 4,000 அறைகள் இருக்கக்கூடியதாக புதிய உல்லாச விடுதிகள் அமைக்கப்படவேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டிருக்கிறது. இதில், சுமார் 500 அறைகள் வட பகுதி யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.


உல்லாசப்பயணத்துறையில் அதிக தொழில்வாய்ப்-புக்கள் பெருகவுள்ள நிலையில், இவற்றைப் பெற்றுக்கொள்ள இந்தத் துறையில் விசேட கல்வித் தகைமை மற்றும் பயிற்சியைப் பெற்றிருத்தல் அவசியமாகும்.

இலங்கை அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரே நிறுவனமான உல்லாசத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ கல்வி நிறுவனம் இதற்கென பல விசேட பயிற்சிநெறிகளை ஆரம்பித்துள்ளது.

சான்றிதழ் தரம் (Certificate Level) -3 மாதம், இடைநிலைப்பிரிவு (Intermediate Level) -6 மாதம், உயர்தரம் (Advance Level) -5 மாதம், என மூன்று பிரிவுகளாக தரம்பிரிக்கப்பட்டு, தொழிற்றுறை சமையல் (Professional Cookery), உணவு மற்றும் பானவகைகள் (Food & Beverage Operations), தங்குமிட பணிகள் (Accommodation Operations), சமையற்கலை (Cookery), உணவகம் மற்றும் குடிபான சேவைகள் (Restaurant & Bar Services), வீட்டுப் பராமரிப்பு பணிகள் (House Keeping), வரவேற்பிடப் பணிகள் ( Reception & Front Operations), ஹோட்டல் பராமரிப்பு பணிகள் (Hotel Housekeeping Operations) ஆகிய கற்கைநெறிகளை ஆரம்பித்துள்ளது.

உயர்தர கற்கைநெறி கொழும்பிலும், சான்றிதழ் கற்கைநெறி இரத்தினபுரி, கண்டி, கொக்கல, பண்டாரவளை, அனுராதபுரம் ஆகிய இடங்களிலுள்ள ஹோட்டல் பயிற்சி கல்லூரிகளிலும் நடைபெறும்.

கற்கைநெறிக் காலத்தில் ஆங்கிலநெறிப் பயிற்சியும் வழங்கப்படவுள்ளது. வயதெல்லை 17-45 ஆகும். மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப் படிவங்களை www.slithm.edu.lk என்ற இணையத்தளத்தில், அல்லது, மேற்குறிப்பிட்ட இடங்களிலுள்ள ஹோட்டல் பயிற்சிப் பாடசாலைகளில் இதனைப் பெற்றுக்கொள்ளலாம். **விண்ணப்ப முடிவுத் திகதி: 31-12-2010** ஆகும்.



# பல்கலைக்கழகம் செல்லாமலே

க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வந்துவிட்டன. வழமைபோலவே பலருக்கு பல்கலைக்கழக அனுமதி கிடைத்திருக்காது என்ற கவலை இருக்கும்.

கவலையை விடுங்கள்! பல்கலைக்கழகம் செல்லாமலே பட்டப்படிப்பை முடித்து தொழில்வாய்ப்பொன்றைக் பெற்றுக்கொள்ள ஏராளமான வழிகள் உள்ளன.

இதில் ஒன்றான பட்டக்கல்வியையும், தொழில்வாய்ப்பு-க்களுக்கான ஏராளமான கற்கைநெறிகளையும் வழங்கும் யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிப் பிரிவு தரும் வாய்ப்புக்கள் பற்றிப் பார்ப்போம்.

ஏறக்குறைய இரண்டு நூற்றாண்டு பழமை வாய்ந்த யாழ்ப்பாணக் கல்லூரியின் பட்டதாரிப் பிரிவு 1947 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டதாகும். சர்வதேச தொழிற்சந்தைக்குப் பொருத்தமான கற்கைநெறிகளை மாணவர்கள் இலகுவாகப் பெற்றுக்கொள்ள வசதியாக யாழ் நகர மத்தியில் வைத்தியசாலை வீதியில் இயங்கிவருகின்றது.

சர்வதேச பல்கலைக்கழகங்களுடனும், பிரபலமான வேறு கல்வி நிறுவனங்களுடனும் தொடர்பைக் கொண்டிருப்பதுடன், அவற்றினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இது உள்ளது.

மாணவர்கள் தமது தற்போதைய கல்வித்தரத்திற்-கேற்ப, தொழில்வாய்ப்புக்குப் பொருத்தமான கற்கைநெறிகளை தெரிவுசெய்யும் வாய்ப்பு, மிகக் குறைந்த கட்டணத்திலேயே இங்கு கிடைக்கிறது.

O/L, A/L பரீட்சையில் தோற்றிய மாணவர்கள், பரீட்சைக்குப் பின்னர் தொழில்வாய்ப்புக்குப் பொருத்தமான எவ்வாறான கல்வியைத் தொடர வழிகாட்டியாக கற்கைநெறிகள் பற்றிய ஆலோசனைகளும் இங்கே வழங்கப்படுகின்றன.

# JAFFNA COLLEGE
UNDERGRADUATE DEPT
# யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டதாரிப் பிரிவு

464, HOSPITAL ROAD, JAFFNA. 464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## கற்கைநெறிகள்

**வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள்:** பேராதனை, மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகங்களுக்கான வெளிவாரிப் பட்ட மாணவர்களுக்கான GAQ,

# பட்டம்



BA, B.Com கற்கைநெறிகளுக்கான விரிவுரைகள் அனுபவமுள்ள விரிவுரையாளர்களைக் கொண்டு இங்கு நடத்தப்படுகின்றன. க.பொ.த. உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தால் போதும் - நீங்களும் ஒரு பட்டத்துக்குச் சொந்தக்காரனாகிவிடலாம்.

**வங்கியாளர் கற்கைநெறிகள் Banking Course(CBF, DBF):**

IBSL என அழைக்கப்படும் வங்கியாளர் நிலையத்தினால் அங்கீகரிக்கப்பட்டு இப்பிரதேசத்தில் இயங்கும் ஒரே நிறுவனம் யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிப்பிரிவே. வங்கியில் வேலை செய்யும் ஊழியர்கள், வங்கித்துறையிலும் ஏனைய நிதித்துறைகளிலும் வேலைவாய்ப்பைப் பெற விரும்பும் மாணவர்களும் இந்தக் கற்கைநெறிகளைத் தொடரலாம்.

ஆங்கிலம், தமிழ் ஆகிய இரண்டு மொழிகளிலும் கற்பிக்கப்படுகிறது. கா.பொ.த. சாதாரணதரத்தில் தமிழ் மற்றும் கணித பாடத்தில் திறமைச்சித்தி அடங்கலாக ஆறு பாடத்தில் சித்தியடைந்திருந்தால் போதும்

**மருந்தாளர் பரீட்சை Pharmacist(External):**
இன்று யாழ்ப்பாணத்தில் அதிகளவு வேலைவாய்ப்புள்ள ஒரு துறை இது. இந்தக் கற்கைநெறியைத் தொடர்வதற்கு கா.பொ.த. சாதாரண தரத்தில் ஆங்கிலம் மற்றும் உயர்தரத்தில் இரசாயன பாடம் உட்பட மூன்று விஞ்ஞான பாடகளிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**AAT கற்கை நெறிகள்:**
இலங்கையின் AAT அங்கீகாரம் அளிக்கப்பட்டு இக்கற்கைநெறி இங்கு போதிக்கப்படுகிறது.

கா.பொ.த. சாதாரணதரத்தில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருந்தால் இந்தக் கற்கைநெறியைத் தொடரலாம். தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் விரிவுரைகள் நடாத்தப்படுகின்றன. தொழில்வாய்ப்பைப் பெறுவதற்கு உத்தரவாதமான ஒரு கற்கைநெறியாக இது அமைந்துள்ளது.

**CIMA கற்கை நெறிகள்:**
முன்பு கொழும்பு சென்றே கற்கவேண்டியிருந்த இந்த நெறி, இப்போது அங்கீகாரத்துடன் யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரி பிரிவில் நடத்தப்படுகிறது. ஆரம்பகட்ட பரீட்சைகள் இங்கேயே நடைபெறுகின்றன. தனித்து இக்கற்கைநெறிக்கு தோற்றுபவர்களும் இங்கு பரீட்சைக்கு தோற்ற முடியும்.

**Certificate Course In English:**
தற்போது எமது நாட்டிலும் சரி சர்வதேச நாடுகளிலும் சரி வேலைவாய்ப்பைப் பெறுவதற்கு ஆங்கில மொழி அறிவு மிக அவசியமாகும். இதனைக் கருத்திற்கொண்டு யாழ்ப்பாணக் கல்லூரி ஆங்கில சான்றிதழ் கற்கைநெறி ஒன்றை ஆரம்பித்துள்ளது. பரீட்சை நடாத்தப்பட்டு பெறுமதி வாய்ந்த சான்றிதழும் வழங்கப்படுகின்றது. ■

– கி.கிருத்திகா



# சுயவிபரக்கோவை (Curriculum Vitae) தயாரிப்பது எப்படி?

இன்று நிறையத் தொழில் வாய்ப்புக்கள் எம்மைச் சுற்றி உருவாகியுள்ளன. வங்கிகள், புதிய கம்பனிகள், நிதி நிறுவனங்கள் என்று புதிதாக வந்திருக்கும் ஏராளமான நிறுவனங்களுக்கு பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள். இந்தத் தொழில்வாய்ப்புக்களை நாம் கையகப்படுத்தவேண்டுமானால், எமது திறைமைகளைச் சரியாகச் சந்தைப்படுத்துவதற்கு எமக்குத் தெரிந்திருக்கவேண்டும். இதற்கு, முதலில் எமது சுயவிபரக்கோவையை கவர்ச்சிகரமானதாக ஆக்கத் தெரிந்திருக்கவேண்டும்.

தொழிலுக்கு விண்ணப்பிக்கும்போது அதற்கு எம்மைத் தெரிவு செய்வதா என்பதைத் தீர்மானிக்கச் செய்வது நாம் அனுப்பும் சுயவிபரக்கோவைதான். இதனால், சுயவிபரக்கோவையை மிகவும் கவனமாக, முதல் முயற்சியிலேயே தொழில் தருநரை கவரக்கூடிய விதத்தில் திட்டமிட்டு உருவாக்கவேண்டும்.

தொழிலொன்றுக்கு விண்ணப்பிப்பதற்கு மாத்திரமன்றி, வெளிநாடுகளில் உயர் கல்வியைத் தொடர்வதற்கும், மேற்படிப்பு, ஆராய்ச்சிகள், புலமைப்பரிசில் விண்ணப்பம் போன்றவற்றுக்கும் சுயவிபரக்கோவை தேவைப்படும்.

ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொருவிதமாக, தேவைக்கேற்ப அதனைத் தயாரிக்கத் தெரிந்திருக்கவேண்டும். பலவிதமான சுயவிபரக்கோவை மாதிரிகளைப் பார்த்து பொருத்தமான வடிவத்தைத் தெரிவு செய்யலாம். இணையத்தளத் தேடல் இதற்கு உதவும்.

எந்தவொரு தொழிலுக்கு விண்ணப்பிக்கும் போதும் ஒரே சுயவிபரக்கோவையை அனுப்பாமல், விண்ணப்பிக்கும் தொழிலுக்கு ஏற்றவிதமாக, குறிப்பிட்ட தொழிலுக்குரிய, தொழில் தருநரின் எதிர்பார்ப்புக்களை பூர்த்திசெய்யக்கூடிய விடயங்களை மனதில் நிறுத்தி, அதற்கேற்ற விதத்தில் சுயவிபரக்கோவையை மீளமைத்துக்கொள்ளவேண்டியது அவசியம்.

---

**விண்ணப்பிக்கும் ஒவ்வொரு தொழிலுக்கும் ஏற்றவிதமாக, குறிப்பிட்ட தொழிலுக்குரிய, தொழில் தருநரின் எதிர்பார்ப்புக்களை பூர்த்திசெய்யக்கூடிய விடயங்களை மனதில் நிறுத்தி, அதற்கேற்ற விதத்தில் சுயவிபரக்கோவையை மீளமைத்துக்கொள்ள வேண்டியது அவசியம்**

---



**எவற்றை உள்ளடக்குவது?**

கல்வித் தகைமைகள், பல்கலைக்கழகத் தகைமைகள், தொழில்சார் தகைமைகள், தொழில் அனுபவங்கள், வெளிக்களச் செயற்பாடுகள், பெற்றிருக்கும் விருதுகள் மற்றும் உங்கள் பொழுதுபோக்குகள், சாரதி அனுமதிப்பத்திரம் பற்றிய தகவல்கள் உள்ளிட்ட முக்கியமான அனைத்து விடயங்களும் சுயவிபரக்கோவையில் உள்ளடங்கியிருக்கவேண்டும்.

**இலக்கு**

இன்று நிறுவனங்களோ, தொழில் தருநர்களோ வாழ்க்கையில் உயரிய இலட்சியங்களைக் கொண்டுள்ள, அர்ப்பணிப்புள்ளவர்களையே தேடுகின்றனர். இதற்கேற்ப உங்கள் வாழ்வின் இலட்சியம், இலக்கு என்பவற்றைச் சுருக்கமாக சுயவிபரக்கோவையின் ஆரம்பத்தில் நீங்கள் குறிப்பிடலாம்.

**சரிபார்க்கவும்**

சுயவிபரக்கோவை எந்தவிதமான எழுத்து மற்றும் இலக்கணப் பிழைகளுமின்றி இருக்கின்றதா என்பதை மிகக் கவனமாகச் சரிபார்த்துக் கொள்ளவும். நீங்கள் வழங்கும் தகவல்களை ஒவ்வொரு தலையங்கங்-களின் கீழ் ஒழுங்காக வகைப்படுத்- தவும்.நீங்கள் கணினியில் தட்டச்சு

செய்வதானால் Times New Roman / Arial ஆகிய Font களில், Font size 11அல்லது12 இல் அமைத்துக்கொள்வது சிறந்தது. கூடுதலான வெற்றிடங்களைத் தவிர்க்க வேண்டும்.

**உண்மையைச் சொல்லுங்கள்**
சுயவிபரக்கோவை சுருக்கமானதாயும், தெளிவாகவும் இருப்பதுடன், உண்மையான தகவல்களை மாத்திரம் கொண்டிருக்க வேண்டும். சுயவிபரக்கோவையை மெருகூட்டுவதற்காக உண்மைக்குப் புறம்பான தகவல்களைச் சேர்க்க வேண்டாம். பின்னர், அதுவே உங்களுக்கு எதிரியாகிவிடும்.

### Curriculum Vitae Format

**Contact Information**

Name, Address , Telephone (Res & Mob), Email

**Career Objectives**
உங்கள் வாழ்க்கையின் இலக்கு அல்லது தூரநோக்கை இங்கு தெளிவாகவும், சுருக்கமாகவும் குறிப்பிடுங்கள்

**Personal Information**

Date of Birth, Place of Birth Nationality, Gender, Marital Status

**Professional Background**
காலஒழுங்கில் நீங்கள் வகித்த பதவி விபரங்கள் மற்றும் திகதிகளுடன் குறிப்பிடுங்கள். மிகப் பிந்தியதை முன்னே சொல்லி, ஏனையவற்றை அதன் பின் ஒழுங்குபடுத்தலாம்.

Work history, Academic Positions, Research & Training Educational Background, Schools Attended , University/Any Higher Studies

திகதிகள், பெற்ற விருதுகள், பட்டங்களின் விபரங்கள், விசேட பயிற்சிகள், சான்றிதழ் விபரங்களைக் குறிப்பிடுங்கள்

**Professional Qualifications**

Certification and Accreditations

Computer Skills

**Hobbies and Interests**

**Referees**




# இணைப்புக் கடிதம் (Cover Letter)

சுயவிபரக்கோவையுடன் இணைப்புக் கடிதமொன்றையும் (Cover letter), தொழில்தருநருக்கு உங்களை அறிமுகப்படுத்திக்கொள்ளும் ஒரு சாதனமாக அனுப்பிவைக்க வேண்டும்.

தொழில்தருநரைக் கவர்வதற்கு உங்களுக்கு இரண்டாவது சந்தர்ப்பம் கிடைக்காது. எனவே, Cover letter மூலம் தொழில்தருநரை ஒரே தடவையில் கவர முயலுங்கள்.

## ஏன் அவசியம்?

- உங்களைப்பற்றிச் சாதகமான நிலைப்பாட்டை உருவாக்குவதற்கு
- உங்களை அறிமுகப்படுத்திக் கொள்வதற்கு
- உங்கள் தொழில் நிபுணத்துவத்தை விளங்குபடுத்துவதற்கு
- உங்கள் தொடர்பாடல் திறனை வெளிக்காட்டுவதற்கு

எந்தவொரு தொழிலுக்கும் 'தொடர்பாடல் திறன்' என்பது மிகவும் முக்கியமானது என்பதால், உங்களுடைய தொடர்பாடல் திறனை இந்த Cover letter மூலம் தொழில்தருநருக்குத் தெரியப்படுத்துங்கள்.

**மூன்று பகுதிகள்**
**1.**நீங்கள் ஏன் இதனை எழுதுகிறீர்கள் என்பதை விளங்கப்படுத்தி, ஆர்வமொன்றை ஏற்படுத்துவது. நீங்கள் என்ன பதவிக்கு விண்ணப்பிக்கிறீர்கள், விண்ணப்பிக்கும் நிறுவனம் பற்றி எவ்வாறு அறிந்து வைத்துள்ளீர்கள் என்பவற்றுடன், சுயவிபரக்கோவையை இணைத்துள்ளீர்கள் என்பதையும் குறிப்பிடுங்கள்.

2.குறிப்பிட்ட பதவிக்கு விண்ணப்பிப்பதில் நீங்கள் எவ்வளவு ஆர்வமாக உள்ளீர்கள் என்பதையும், விண்ணப்பிப்பதற்கு நீங்கள் கொண்டிருக்கும் தகுதி, அனுபவங்கள் போன்றவற்றையும் சுருக்கமாக எழுத்து மூலம் விபரியுங்கள். அத்துடன், நிறுவனத்துக்காக எவ்வாறான சேவையை வழங்குவீர்கள் என்பதைக் குறிப்பிட்டுக் கூறுங்கள்.


3.நேர்முகப்பரீட்சை அல்லது சந்திப்பிற்கான நேரமொன்றை ஒதுக்கித் தருமாறு தொழில்தருநரிடம் கோரிக்கையை முன்வையுங்கள். உங்களைத் தொடர்பு கொள்வதற்கு ஏதுவாகத் தொலைபேசி இலக்கம் அல்லது மின்னஞ்சல் முகவரியைக் குறிப்பிடுங்கள்.

இறுதியாக மீண்டும் குறிப்பிட்ட நிறுவனத்தில் நீங்கள் கொண்டிருக்கும் ஆர்வம் பற்றிச் சொல்லி முடியுங்கள்.

மேற்கூறிய் வழிமுறைகளைப் பின்பற்றி சுயவிபரக்கோவை மற்றும் இணைப்புக் கடிதத்தைக் கச்சிதமாகத் தயாரித்து அனுப்பி வைத்தால் உங்கள் கனவுகள் நனவாவதுடன்....

*வெற்றி நிச்சயம்!*

**– ம.பிரசாத்**




# 127 மணித்தியாலங்கள்

## ஒஸ்கார் தமிழனின் மற்றொரு இசைச் சாதனை

ஒஸ்கார் தமிழன், உலகத்தையே இசையால் தன்பக்கம் ஈர்த்துள்ள நாயகன், ஏ.ஆர்.ரகுமான் மீண்டும் ஹொலிவூட் திரைப்படமான 127 அவர்ஸ்(127 Hours) இற்கு இசையமைத்துள்ளார்.

இதன்மூலம், ஸ்லம்டோக் மில்லியனர் இயக்குநர் டானி பொயிலுடன் அவர் இரண்டாவது தடவையாக இணைந்துள்ளார்.

ஸ்லம்டோக் மில்லியனர் திரைப்படக் குழுவே இத்திரைப்படத்துக்காக மீண்டும் அணிசேர்ந்துள்ளது.

அமெரிக்காவின் சில இடங்களில் மட்டும் நவம்பர் 5ம் திகதி திரையிடப்பட்டுள்ள இத்திரைப்படம், இதுவரை 1.9பில்லியன் டொலர் வருமானத்தை வசூலித்துள்ளது. அமெரிக்காவுக்கு வெளியே இது வெளியாகும்போது சக்கை போடு போடும் என்பதில் எந்தச் சந்தேகமும் கிடையாது.

ஸ்லம்டோக் மில்லியனர் மூலம் ஹொலிவூட்டில் ஏ.ஆர்.ரகுமானும், தமிழ்த் திரையுலகில் டானியல் வொயிலும் அறிமுகமாகி பெருமை பெற்றனர். மீண்டும் 127 மணித்தியாலங்களில் இணைந்துள்ள நாயகர்களின் சாதனையைப் பார்க்க இரசிகர்கள் காத்துள்ளனர். ■

---

# அச்சுத் தாள்களிலிருந்து... வெள்ளித்திரைக்கு!

தொடர் நாவல்களாக வெளியாகி, உலகெங்கும் மில்லியன் கணக்கான விற்பனை மூலம் சாதனை படைத்த ஹரி பொட்டர் கதைகள் அச்சுத்தாள்களிலிருந்து வெள்ளித்திரையில் விரிந்துகொண்டிருக்கின்றன.

மொத்தம் 7 நாவல்கள் கொண்ட தொடராக வெளிவந்த ஹரிபொட்டர் கதைகள் ஒவ்வொன்றும் திரைக் காவியங்களாக வெளியாகின. இப்போது 7வதும் இறுதியுமான நாவலின் முதல் பாகம் ஹரிபொட்டர் அன் த டெட்லி ஹலோவ்ஸ் (Harry Potter and the Deathly Hallows part - 1) திரைப்படமாகியிருக்கிறது.

2007 ஜுலை 21இல் உலகின் 93 நாடுகளில் வெளியான இந்த நாவல், வெளியான முதல் தினத்திலேயே 15 மில்லியன் பிரதிகளுக்கும் அதிகமான விற்பனையாகி உலக சாதனை படைத்திருந்தது. இதற்கு முந்திய சாதனை, ஹரி பொட்டர் அன் த ஹால்ஃவ் பிளட் பிறின்ஸ், 9 மில்லியன் பிரதிகள் முதல் நாளில் விற்பனையாகியிருந்தது.

வாசக மட்டத்தில் மில்லியன் கணக்கானவர்களை ஈர்த்த ஹர் பொட்டர் சினிமா உலகையும் தன்பால் இழுத்ததில், அது வெள்ளித்திரையிலும் வலம் வரத் தொடங்கியது.

ஹரி பொட்டர் அன் த டெத்லி ஹலோவ்ஸ் திரைப்படத்தின் பாகம் ஒன்று நவம்பர் 19ம் திகதி வெளியாகி வெளுத்துக் கட்டுகிறது. இதன் தழிழாக்கம் ஹரிப்பாட்டரும் உயிர் ரகசியமும் ஹீ தேனாட்டால் நிறுவனத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

2011 ஜுலையில் இத்திரைப்படத்தின் பாகம் இரண்டு வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தொலைக்காட்சிகள் மற்றும் சினிமாவின் வருகையினால் வாசிப்புப் பழக்கம் அருகிப்போவதாக புலம்பும் நம்மவர்களுக்கு, ஹரி பொட்டரின் இந்தச் சாதனைகள் சமர்ப்பனம். ■

– ஞா.கிரிசாந்



# கணினி-நீ

**எதிர்கால இலட்சியத்தை – அதற்கான கல்வியை**






சமூக வலைப்பின்னலின் ஜாம்பவானாக விளங்கிக்கொண்டிருக்கும் பேஸ்புக் விரைவில் மின்னஞ்சல் சேவையையும் ஆரம்பிக்கவுள்ளதாக அதன் வலைப்பதிவில் தகவல் வெளியிட்டுள்ளது.(facebook.com).

nnn@facebook.com எனும் மாதிரியில் அதன் மின்னஞ்சல் முகவரி அமையவுள்ளது. இதனூடாக குறுஞ்செய்திகள், ஒளிப்படங்கள், காணொளிகள் என சாதாரணமாக நாம் பயன்படுத்தும் மின்னஞ்சலின் அனைத்துச் சேவைகளையும் பெற்றுக்கொள்ள முடியும். அது மின்னஞ்சல் சேவையைத் தாண்டிய எதிர்காலத்துக்கான தகவல் பரிமாற்ற சேவையாக இது இருக்கும் என அதன் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

ஃபேஸ் புக் மின்னஞ்சல் சேவை அறிவிப்பையடுத்து, ஜீமெயில் மின்னஞ்சல் சேவை வழங்கும் கூகுள் (google.com) நிறுவனம் ஃபேஸ்புக் சமூக வலைப்பின்னலுடன் வழங்கிவந்த சேவைகளிலிருந்து தன்னை விலக்கிக்கொண்டது. ஆனால், யாகூ (yahoo.com) மற்றும் ஆஸ்க் (ask.com) ஆகியன ஃபேஸ்புக் வலைப்பின்-னலுடன் கைகோர்த்துள்ளன.

கிட்டத்தட்ட 500 மில்லியன் பயனாளிகளைத் தன்னுடன் இணைத்துக் கொண்டுள்ள பேஸ்புக், புதிய மின்னஞ்சல் சேவையூடாக பலமிக்க ஜாம்பவானாகும் என்பதில் ஐயமில்லை. இதேவேளை கூகுள் நிறுவனம் தானும் ஒரு சமூக வலைப்பின்னலை ஆரம்பிக்க உள்ளதாக தகவல் வெளியிட்டுள்ளது.



# கணினி அறிமுகமும் அடிப்படைக்கட்டமைப்பும்

கடந்த இதழில் நாங்கள் உள்ளீட்டுக் கருவிகளான Keyboard, Mouse ஆகியன பற்றிப் பார்த்தோம். அதைப் போன்ற ஏனைய கருவிகளைப் பற்றி அறிந்து கொள்வோம்

## Scanner (உருவ வருடி)

கணினியில் வருடி என்பது உருவப்படங்கள், அச்சிட்ட உரை, கையால் எழுதப்பட்ட



ஆவணம் அல்லது ஒரு பொருள் ஆகியவற்றை ஒளியியல் ரீதியாக வருடி அதனை டிஜிட்டல் உருவப்படமாக மாற்றும் சாதனம் ஆகும்.

## Touch Screen (தொடு திரை)

மவுஸ், கீ போர்ட் இல்லாமலே கணினியை இயக்க உதவும் தொழில்நுட்பம் இது. கணினியின் காட்சித் திரையில் (Display



Screen) உரிய படங்கள் அல்லது சொற்களைத் தொடுவதன் மூலம் கணினியில் வேலை செய்ய முடியும்.

மைக்ரோசொ.:.ப்டினைப் போன்று மற்றொரு நிறுவனமான அப்பிள் (Apple) நிறுவனத்தின் தொடுதிரை ஐபோன் (iPhone) எல்லோரையும் கவர்ந்துள்ளது. தற்போது மொபைல் போன், ரிமோட் கொன்ட்ரோல் போன்றவை கூட தொடு திரையில் இயங்குகின்றன.

## Web camera


இவ்வகை ஒளி கருவிகள் மூலம் ஒருவரோடு ஒருவர் இணையம் மூலம் தொடர்பாட முடியும். Skype, MSN messenger, Yahoo messenger போன்ற தொலைத்-தொடர்பு



மென்பொருள்களில் ஒருவரையொருவர் பார்த்துத் தொடர்பாடுவதற்கு இது பயன்படுத்தப்படுகின்றது.

## Microphone (ஒலிவாங்கி)


ஒலிவாங்கி என்பது ஒலியலையை மின்னலையாக மாற்றும் ஒரு மின்னியல் ஆற்றல் மாற்றி அல்லது உணரி ஆகும். 1876ஆம் ஆண்டு, ஈமைல் பெர்லினர் முதன்முதலில் ஒலிவாங்கியைக் கண்டறி-ந்தார். இது குரலொலியை மின்னலையாக



மாற்றி அனுப்ப பயன்படுத்தப்-பட்டது. மேலும் கணினிகளில் குரலொலி பதிவு செய்வதற்கும், குரலொலியை கண்டறியும் வசதியிலும், இணையத்திலிருந்தே பேசுவதற்கும் இது பயன்படுத்தப்படுகிறது.

## Fingerprint Reader

இதன்மூலம் கணினியில் கடவுச்சொல்-லுக்குப் பதிலாக எமது கை ரேகையினை பயன்படுத்த முடியும்.




நவீன கணினிகளில் இது பெருமளவில் பயன்படுத்தப்படுகிறது. இதன் மூலம் உருவாக்கப்படும் பாதுகாப்பு மிக வலுவானது. DigitalPersona எனும் மென்பொருள் Fingerprint Reader ஆக பெருமளவில் பயன்படுத்தப்படுகிறது

## Joystick

இந்தச் சாதனமானது கணினி விளையாட்டுகளில் பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றது. இதன் மூலம் கணினித் திரைக்குள் தேவைக்கேற்ற விதத்தில் பொருள்களை நகர்த்துதல் மற்றும் கட்டளைகளை வழங்கல் போன்ற வேலைகளைச் சிறந்த முறையில் செய்யலாம்.




## Digitizing Tablet



டிஜிட்டலைசிங் டேபிள் மூலம் வரைதல் மற்றும் உள்ளீடுகளை வழங்கல் போன்ற செயற்பாடுகளைச் செய்ய முடியும். வடிவமைப்பாளர்கள் மற்றும் வரைபடம் உருவாக்குநர்கள் போன்றோர் இதைப் பயன்படுத்துகின்றனர். இந்தக் கருவியின் மூலம் வரையப்படும் விடயங்கள் நேரடியாக கணினித்திரையில் தோன்றும்.

## Light Pen

லைட் பென் ஒருவகை உள்ளீட்டுக் கருவியாகும். இது பேனா வடிவில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கருவியானது VDU எனப்படும் Video Display Unitல் நேரடியாக இணைக்கப்பட்டுள்ளது. இதன் முனையில் லைட் சென்சிட்டிவ் எலிமென்ட் எனப்படும் கருவி மூலம் கணினித்திரையில் நேரடியாக வரைவதற்கு பயன்படுகின்து. இந்தக் கருவி திரையில் கையெழுத்து இடுவதற்கும் பயன்படுகிறது.




## Digital Still Camera

டிஜிட்டல் ஸ்ரில் கமராவும் ஒருவகை உள்ளீட்டுக் கருவியாகும். இதன் மூலம் ஒளிப்படங்களை டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் எடுத்து அதன் நினைவகத்தில் சேமித்து வைப்பதுடன், பின் வேண்டிய இடத்திற்கு மாற்றவும் அல்லது அவற்றினை அழிக்கவும் முடியும். ஒளிப்படங்களை கணினியில், கமராவிலிருந்து பதிவிறக்கிய பின் மென்பொருட்கள் மூலமாக மாற்றியமைக்க அல்லது அச்சுக்கனுப்ப முடியும்.





## Magnetic Ink Character Recognition

மக்னடிக் இங்க் ரீடர் ஆனது காந்தப்புல மை (INK) யில் எழுதப்பட்ட எழுத்துக்களை வாசிப்பதற்கு பயன்படுத்தப்படும் உபகரணமாகும். இதன்மூலம் வங்கியில் காசோலைப் பரிமாற்றங்களில் முறைகேடுகளைத் தவிர்க்கலாம். அத்துடன் பரீட்சைத் தாள்களை வேகமாகத் திருத்தவும் உதவுகின்றது.




## Optical Mark Reader (OMR)



ஓப்ரிகல் மாக் ரீடர் ஆனது செய்தித்தாள்கள் அல்லது புத்தகங்களில் அச்சிடப்பட்டுள்ள எழுத்துக்களை டிஜிட்டல் முறையில் மாற்றி கணினியில் பயன்படுத்தக்கூடிய எழுத்துருக்களாக மாற்றுகின்றது.

## Bar Code Reader

கடைகளில் விற்கும் பெரும்பாலான பொருட்களில் காணக்கூடியதாக உள்ள பார்கோட் வெவ்வேறு தடிமன்களில் கோடிடப்பட்ட செவ்வக வடிவப் படம். இது அச்சிடப்பட்டிருக்கும் பொருளின் விலை, அளவு, உற்பத்தி மற்றும் காலாவதித் திகதி மற்றும் பிற தகவல்களைக் கொண்டிருக்கும். ரீடரானது இவற்றில் உள்ள தகவல்களை அறிந்து கணினியில் வேகமாக பதிவு செய்கின்றது. இது பல்பொருள் அங்காடிகள் மற்றும் வணிக மையங்கள் மற்றும் பொருள்களை களஞ்சியப்படுத்தும் இடங்களில் பயன்படுகின்றது.



தொடரும்...

– சு.நேதாஜி

# கணினியைப் பராமரிப்பது எப்படி?

கணினியொன்றைப் பயன்படுத்தும் போது, அதன் பாவனையாளர் என்ற வகையில் அதனை எவ்வாறு பராமரிப்பது என்பது பற்றியும் நாம் தெரிந்து வைத்திருக்க வேண்டும். இதன்மூலம் கணினி பழுதுபார்ப்பவர்களிடம் அடிக்கடி கணினியை எடுத்துச்செல்லும் பிரச்சினை குறைவடைவதுடன், உங்கள் நேரமும், பணமும் மீதப்படுத்தப்படும்.

இங்கே நாம் தரும் தற்காப்பு பராமரிப்பு வழிமுறைகளைப் பின்பற்றி இதனை நீங்கள் செய்ய முடியும்.




1.தினமும் ரிசைக்கிள் பின்னை (Recycle Bin) வெறுமையாக்கிவிடுங்கள்.

2.எப்போதும் கணினியை இயங்கிக்கொண்டிருக்க விடாமல், சில நேரங்களிலாவது செயற்பாட்டை நிறுத்தி(OFF செய்து) கணினிக்கு ஓய்வு கொடுங்கள்.

3.கணினியில் காணப்படும் நீண்ட காலம் பயன்படுத்தாத செயலி (Programme) மற்றும் மென்பொருள்களை (Software) நீக்கிவிடுங்கள்.

4.தேவையற்ற, பயன்பாட்டில் இல்லாத கோவைகளை (files) அழித்துவிடுங்கள். அவற்றை ரீ சைக்கிள் பின்னில் (Recycle Bin) இருந்தும் நீக்கிவிடுங்கள்.

5.கணினிப் பாவனை முடிந்ததும் கணனியை மூடிவிடுங்கள்.

6.அவ்வப்போது டிஸ்க் கிளீன் அப் (Disc Clean Up) செய்யுங்கள். இதை பற்றி அடுத்த இதழில் விரிவாக பார்ப்போம்.


7.குறைந்த பட்சம் மாதம் ஒரு முறையாவது டிஸ்க் டி்.பிராக்மெண்டேஷன்( Defragmentation) செய்யுங்கள். அல்லது எப்போதெல்லாம் அதிக வேலை கொடுக்கிறீர்களோ, அதற்கு பிறகு டிஸ்க் டி்.பிராக்மெண்ட் செய்வது நல்லது.


8.குறிப்பிட்ட கால இடைவெளியில் எறர் செக்கிங் யுடிலிட்டி (Error Checking Utility) மேற்கொள்ள வேண்டும். ஒவ்வொரு முறை ஹார்ட் டிஸ்கை (Hard Disc) கம்ப்யூட்டர் பயன்படுத்தும் போதும், சில வேண்டாத செக்டார்கள் (Sector) உருவாகும். அவற்றை நீக்க, கம்ப்யூட்டரில் உள்ள எறர் செக்கிங் யுடிலிட்டி ஸ்கேனை(Error Checking Utility Scan) பயன்படுத்த வேண்டும்.

9.தேவையில்லாத மென்பொருள் தொகுப்புக்கள், மொழித்தொகுப்புக்கள் போன்றவற்றை நீக்கிவிடலாம். தேவைப்படும் நேரத்தில் அவற்றை இணையத்திலிருந்து பதிவிறக்கி (Download) பயன்படுத்திக் கொள்ளலாம்.

10.ஸ்பைவேர்(Spyware) எனப்படும் உங்கள் கணினியின் இரகசியங்களை திருடும் மென்பொருள்களிலிருந்து கணினியைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். இதற்கான மென்பொருள்கள் விண்டோஸ் உடன் கிடைக்கின்றன.

11.தினமும் அல்லது குறிப்பிட்ட கால இடைவெளியில் அண்ட்டி வைரஸ் ஸ்கானை(Anti Virus Scan) இயக்கி, கணனி



∴போல்டர்கள்(Folder), டிரைவ் (Drive)களில் உள்ள வைரஸ்களை நீக்கவேண்டும். Antivirus மென்பொருளை கணினியில் install செய்துகொண்டு அடிக்கடி அதனை பயன்படுத்த வேண்டும். சில பிரபலமான Antivirus மென்பொருள்கள்:MacAfee, Norton, Kaspersky,Panda, Avast,Avira,AVG)

12.ஒவ்வொரு முறை பதிவிறக்கம் (Download) செய்யும் போதும், வைரஸ் ஸ்கான் செய்யவேண்டும்.

13.USP, Speaker போன்றவற்றை கணினியுடன் இணைக்கும் வயர்களை கவனமாகச் சொருக வேண்டும்.

14.கணினியை முறைப்படியே shutdown செய்யவேண்டும். இதற்காக ON/OFF சுவிட்சை பயன்படுத்தவேண்டாம். கணினியை ஒழுங்கான முறையில் shutdown செய்யாத ஒவ்வொரு தடவையும், அல்லது மூன்று வாரங்களுக்கு ஒருமுறை scandisk செய்வது சிறப்பு.

15.UPS மூலமே கணினி ஐ இயக்குங்கள். இதனால் மின் தடை ஏற்படும்போது, கணினியில் தகவல்கள் இல்லாமல்போவதிலிருந்து தப்பித்துக்கொள்ளலாம். ■

– ஞா.கிரிசாந்

# பாகங்களைப் பராமரித்தல்

இந்தப் பகுதி உங்கள் கணினியின் வெளிப்பாகங்கள் பற்றியதாகும். தூசி, ஈரலிப்பு, மற்றும் தவறான பயன்பாடு என்பனவே கணினியின் பிரதான எதிரிகளாவர்.

☛ உங்கள் கணினி வைக்கப்பட்டிருக்கும் இடம் தூசிகள் படியாத இடமாக இருப்பதுடன், சி.பி.யூ.(CPU)வில் பொருத்தப்பட்டிருக்கும் விசிறிக்குத் தேவையான குளிர்ந்த காற்றைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான இடவசதி கொண்டதாகவும் இருக்கவேண்டும்.

☛ பொதுவாக கணினியின் Power Unit Fan மற்றும் Cooling Fan போன்ற பகுதிகளிலேயே அதிகம் தூசி படியும். இந்தத் தூசிகளை பஞ்சுத்தன்மையற்ற துணிகளைப் பயன்படுத்தி அகற்றிவிடுங்கள்.

☛ Motherboard மற்றும் Expansion Card போன்றவற்றைத் துப்பரவாக்கும்போது Static Proof Brush ஐப் பயன்படுத்துங்கள்.

☛ தூசிகளை அகற்றும் இயந்திரத்தைப் (Vacuum Cleaner) பயன்படுத்தும்போது, கணினியின் உட்பாகங்களைத் துப்பரவு செய்வதற்கென வடிவமைக்கப்பட்ட கருவியா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

வழமையான Vacuum Cleanerகள் தோற்றுவிக்கும் Static Electric Power இனால் கணினியின் உட்பாகங்கள் பாதிப்படையக்கூடும்.

☛ கணினியின் உட்பகுதியில் நீர் படிவதைத் தடுப்பதற்கு சிலிக்கா ஜெல் (Silica Gel) பக்கற்றுக்களை உள்ளே வைக்கலாம். இது அதிகளவு நீர்த்தன்மையை அல்லது ஈரலிப்பை உறுஞ்சிக்கொண்டுவிடும் (அவதானம்: சிலிக்காஜெல் நச்சுத்தன்மையானது. சிறுவர்கள் எடுக்காத விதத்தில் வைக்கவும்).

☛ கணினி இயங்கிக் கொண்டிருக்கும் போது அதனை இடம் மாற்றவோ அசைக்கவோ வேண்டாம். அவ்வாறு செய்தால் Hard disk இயக்கத்தில் பாதிப்புக்கள் ஏற்படும். மேலும், Hard Disk இடத்துக்கிடம் கொண்டுசெல்வதற்கு ஏற்றவகையில் வடிவமைக்கப்படவில்லை. எனவே, தரவுகளைக் கொண்டு திரிவதற்கு Data Traveler அல்லது External Hard Disk ஐப் பயன்படுத்துங்கள்.

☛ அனைவராலும் பொதுவாகப் பயன்படுத்தப்படும் Cleaner களைப் பயன்படுத்தி CD மற்றும் DVD ROM களைச் சுத்தப்படுத்தவும். சில Cleaner கள் உங்கள் CD-ROM Drive ஐப் பழுதாக்கிவிடுமென்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

☛ உங்கள் Monitorஇன் மேற்பரப்பை வாராந்தம் துடைத்து, ஏனைய பகுதிகளை இரண்டு வாரங்களுக்கு ஒருமுறையேனும் சுத்தப்படுத்துங்கள்.

**எச்சரிக்கை:** Monitorஇன் Coverஐக் கழற்றவேண்டாம். அனுபவம் வாய்ந்த கணினித் தொழில்நுட்பவியலாளர்கள் மாத்திரமே அதனைக் கையாள வேண்டும்.

☛ கணினி வைக்கப்பட்டிருக்கும் சுற்றுப்புறத்தையும் சுத்தமாகப் பேணவேண்டும். சுற்றுப்புறத்தில் தூசிகள் இருந்தாலும் அது கணினியைப் பாதிக்கக்கூடும்.

இவ்வாறு கணினியைப் பராமரிப்பதன் மூலம் உங்கள் கணினியின் ஆயுளை அதிகரித்துக்கொள்ள முடியும்.




# MIcrosoft Office 2003 Wordல் Text Formatting

கடந்த இதழில் Word 2003 ஐப் பயன்படுத்தி ஆவணமொன்றை தயாரிப்பது எப்படி என பார்த்தோம். ஆவணத்தில் தட்டச்சு செய்யும் விடயத்தின் எழுத்துரு, வண்ணம், அளவு போன்றவற்றையும், பந்திகளை தேவைக்கேற்ற விதத்தில் மாற்றியமைப்பது பற்றி இந்த இதழில் காணலாம்.

ஆவணத்தில் பந்திகளை தட்டச்சு செய்து முடித்த பின்பு அவற்றை நம்முடைய தேவையைப் பொறுத்து மாற்ற Format Menuல் உள்ள கட்டளைகளைப் பயன்படுத்துவோம்.

முதலில் தட்டச்சு செய்த எழுத்துக்கள் அல்லது பந்திகளை தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள் (மாற்றத்துக்கு உட்படவுள்ள வார்த்தைக்கு முன் கேர்சரை -cursor- வைத்துக் கொண்டு விசைப்பலகையில் உள்ள அம்புக்குறிகளைக் கொண்டு தேவைக்கேற்ப மேல், கீழ்,வலது மற்றும் இடது பாகங்களில் சுட்டியை அழுத்தியபடி நகர்த்தி தேர்ந்தெடுத்துக் select கொள்ளலாம்)

Format Menu ⟶ Font (குறுக்கு வழி: Ctrl+D) பாதையூடாக நாம் கீழேயுள்ள




கட்டளைத் தொகுதிக்குள் செல்வோம். இதற்குள் Font, Character Spacing, Text Effects ஆகிய முக்கிய கட்டளைகளும் அது சம்பந்தப்பட்ட கட்டளைத் தொகுதிகளும் உள்ளது.

அதில் முதலாவதாக உள்ள Font கட்டளைத் தொகுதியில் உள்ள font list boxல் எமது கணினியில் நிறுவப்பட்டிருக்கும் Fonts (எழுத்துருக்களின் தொகுப்பு) வரிசைப்படுத்தப்பட்டிருக்கும். அவற்றில் எமக்குத் தேவையான ஒரு எழுத்துருவை நாம் தெரிவுசெய்யும்போது, ஆவணத்தில் தேர்ந்தெடுத்த பகுதியில் உள்ள அனைத்து வாக்கியங்களின் வடிவமும் நாம் விரும்பியது போன்று மாற்றமடையும்.





அடுத்ததாக உள்ள font style மற்றும் Size ஆகிய இரண்டும் எழுத்துருவின் கீழ்க்கண்ட விதங்களில் மாற்றலாம்


**Bold** *Italic* <u>Underline</u>

Sizeஆனது எழுத்துருவின் அளவை கட்டுப்படுத்துகின்றது.

இந்த கட்டளைகளுக்குக் கீழே Font Color, Underline Style, Underline color ஆகிய மூன்றும் காணப்படுகின்றது.


Font color எழுத்துருவின் நிறத்தை மாற்றுவதற்கும் Underline Style அடிக் கோடிடுவதற்கான




வெவ்வேறான தெரிவுகளைக் கொண்டிருக்கும். Underline Color அடிக்கோட்டிற்கான நிறத்தினைத் தெரிவு செய்ய பயன்படுகின்றது.

மூன்றாவதாகவும் இறுதியாகவும் உள்ள Effects கட்டளைத் தொகுதியானது பல்வேறு விதமான எழுத்துருக்களுக்கான கட்டமைப்பு மற்றும்





வண்ணங்களைக் கொண்டுள்ளது. இதிலுள்ள SuperScript மற்றும் SubScript ஆகியன அடிக்கடி பயன்படுத்தப்படுவதால் அதை சற்று விரிவாகக் காண்போம்.

கடிதம் எழுதும்போது திகதியில் அல்லது கணிதவியல் சூத்திரங்கள் போன்றவற்றை Word 2003ல் தட்டச்சு செய்யும்போது இந்தக் கட்டளையை பயன்படுத்துவோம். முதலில் தேவையான எழுத்துக்களை தட்டச்சு செய்து கொண்டு சாதாரண எழுத்துக்கு சற்று மேல் அல்லது கீழ் செல்லவேண்டிய எழுத்தைத் தெரிவு செய்து கொண்டு format ⟶ font ⟶ Effect ⟶ கட்டளைத் தொகுதிக்குச் சென்று Super Script அல்லது SubScript கொடுத்து தேவையான விதத்தில் மாற்றிக் கொள்ளலாம்.

**H2O** SubScript ⟶ $H_2O$

**(a-b)2** Super Script ⟶ $(a-b)^2$

format Font கட்டளைத் தொகுதியின் முடிவிலுள்ள





வெள்ளைத் திரைப் பகுதியானது நாம் கட்டளைகளைத் தேர்ந்தெடுக்கும்போது அல்லது மாற்றும்போது ஏற்படும் மாற்றங்களை திரையில் காட்டுகிறது. நாம் OK கட்டளையை கொடுக்கும்போதுதான் எமது ஆவணத்தில் அந்த மாற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

Format ⟶ Font கட்டளைத் தொகுதியில் இரண்டாவதாக உள்ள Tab கட்டளைத் தொகுப்பானது **Character Spacing** ஆகும்.

இது ஒவ்வொரு எழுத்துகளுக்கும் இடையில் உள்ள அளவுகளை கட்டுப்படுத்தும் கட்டளைத் தொகுதியாகும். இதிலுள்ள Scale ன் பொதுவான அளவு 100%ல் இருக்கும். நாம் இதனைக் குறைக்கும் போது எழுத்துக்களுக்கு இடையேயான தூரம் குறைவதுடன் எழுத்துக்கள் ஒன்றோடு ஒன்று நெருங்கி வாசிக்க முடியாமல் இருக்கும். அதேபோல் Scale ஐ அதிகரிக்கும்போது எழுத்துக்கள் இயல்பான அளவினை விட பெரிதாகி காணப்படும். இந்த அளவினை பொதுவாக நாம் மாற்றுவது இல்லை.


Spacing ஆனது எழுத்து வரிகளுக்கு இடையிலான தூரத்தினை தேவைக்கு ஏற்றாற்போல மாற்ற உதவுகிறது.

**Character Spacing**ல் உள்ள Position ஆனது பந்திகளுக்கு இடையிலான அல்லது வரிகளுக்கு இடையிலான மேலே மற்றும் கீழே அமையும் தூரத்தின்




அளவுகளைத் தீர்மானிக்கின்றது. இது சுப்பர் ஸ்கிரிப்ட், சப் ஸ்கிரிப்ட் போன்றே செயல்படும் கட்டளையாகும் ஆனால் சுப்பர் ஸ்கிரிப்ட் சப் ஸ்கிரிப்ட் கொடுக்கப்படும் தூரம் மாற்றத்துக்கு உட்படுத்த முடியாது. இந்த Position கட்டளை மூலம் எமக்கு வேண்டிய அளவுகளைக் கொடுத்துக்கொள்ளமுடியும்.

**Text Effects** ஆனது, ஆவணங்களில் குறிப்பிட்ட தலைப்புகள் அல்லது விரும்பிய பகுதிகளை சிறப்புக் காட்சியாக, அசைவுறும் ஒளியாக காட்டப் பயன்படுகின்றது. இதில் பல வண்ண எ.:.பெக்ட்ஸ்




(effects) உள்ளன. இதை காட்சிப்புலத்தில் மட்டுமே காணலாம் (உதாரணமாக ஈமெயில், கணினித்திரை)

ஆவணத்தை அச்சிடும்போது இவை அவ்வாறு தெரிவதில்லை. அடுத்த இதழில் இன்னும் பல பயன்பாடுகளைப் பற்றி பார்ப்போம். ■

**– அ.பெஸ்ரியன்**


# PHOTO SHOP இல் எடிட்டிங்

Photoshop இல் ஒளிப்படங்களின் Brightness, Contrast ஐ மாற்றி ஒளிப்படங்களின் தெளிவை அதிகரிப்பது பற்றி கடந்த இதழில் பார்த்தோம்.

நமக்குத் தேவையான வடிவங்களில் ஒளிப்படங்களை எப்படி வெட்டுவது என இப்பகுதியில் காணலாம்.

இதற்கு நாம் Marquee tool, Magnetic Lasso tool , Pen tool போன்றவற்றைப் பயன்படுத்துவோம். முதலில் தேவையான அளவீடுகளைக் கொடுத்து புதிய ஆவணத்தைத் திறந்து கொள்ளுங்கள்.

Tool boxல் முதலாவதாக உள்ள Marquee toolஜ தேர்ந்தெடுங்கள். இதனுள் Rectangular Marquee tool, Elliptical Marquee tool, Single Row Marquee Tool, Single Column Marquee Tool என 4 விதமான வேறுபாடு கொண்ட Tools உள்ளன.




இவற்றில் Rectangle மற்றும் Elliptical என்பவை, முறையே சதுரம், செவ்வகம் மற்றும் வட்டம், முட்டை வடிவங்களை தேர்ந்தெடுக்கப் பயன்படுத்தப்படும்.

Single Row Marquee Tool, Single Column Marquee Tool ஆகியன, உயரம் மற்றும் அகல வாக்கில் குறுகிய கோடுகளை வரைவதற்குப் பயன்படுகின்றது.

Tool Boxல் இரண்டாவதாக உள்ள Move Tool, ▶✥ ஒளிப்படங்களை தேர்ந்தெடுக்கவும் தேவையான இடத்துக்கு நகர்த்தவும் பயன்படுகின்றது. இதைப் படங்களுடன் விளக்குகின்றேன்.




உங்களுக்குத் தேவையான ஒளிப்படத்தை File ⟶ Open அல்லது (Ctrl + O) மூலம் திறவுங்கள்.

இப்போது [⬚] Marquee toolல் சுட்டி (Mouse) யைக் கொண்டு Rectangular Marque toolஐத் தேர்தெடுத்துக் கொள்ளுங்கள்(Ctrl+M).

படத்தில் உங்களுக்கு வேண்டிய பகுதியை மவுஸ் மூலம் தெரிவுசெய்யும்போது, புள்ளிகளிடப்பட்ட ஓடும் கட்டம் ஒன்றைக் காண்பீர்கள்.

பிறகு Select Menu ⟶ வில் Inverse கட்டளையைத் தெரிவு செய்யவேண்டும். இதன்போது நீங்கள் முதலில் தெரிவு செய்த இடத்தைத் தவிர உள்ள ஏனைய இடத்தினைச் சுற்றி தெரிவு கட்டம் ஒன்று தென்படும். அதை நீங்கள் Delete கட்டளையின் மூலம் ஒளிப்படத்திலிருந்து நீக்கிவிடலாம்.

இப்போது உங்களுக்குத் தேவையான வடிவத்தில் ஒளிப்படம் வெட்டப்பட்டு இருப்பதைக் காண்பீர்கள். இதைப் போலவே Elliptical Marquee tool ஐப் பயன்படுத்தி வட்டம் மற்றும் முட்டை வடிவில் படங்களை வெட்டி எடுக்கலாம்.








Marquee tool ஐப் பயன்படுத்தி சரியான வட்டம் அல்லது சதுர வடிவங்களை வரைவதற்கு Shift உடன் Mouseஐ பிடித்தபடி வரையவேண்டும்.

**குறிப்பு:**

Options Bar ஒவ்வொரு Tools களுக்கும் ஏற்ற வெவ்வேறு விதமான கட்டளைத் தொடர்களைக் கொண்டிருக்கும்.

Marque toolல் Settingsஐ மாற்றுவதற்கு Menu barன் கீழே உள்ள Options Barல் ஒரு சில Settingsஐக் காணலாம்.

இதில் 1.New selection, 2.Add to selection, 3.Subtract





to selection, 4.Intersect with selection, 5.Feather என 5 விதமான தேர்வுகள் இருக்கும்.

முதலாவதாக உள்ள New selection ல் சாதாரண தேர்வு முறை காணப்படும்.

அடுத்ததாக உள்ள Add to selection ஆனது ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட தேர்வுகளை மேற்கொள்ளவும்



மூன்றாவதாக உள்ள Subtract to selection தேர்வானது தேர்ந்தெடுத்த பகுதியில் தேவையற்ற இடத்தினை நீக்குவதற்கும் உபயோகிப்போம்.




selectionகளுக்கான இடையில் உள்ளதை தேர்வு செய்ய உதவுகிறது.

ஐந்தாவதாக உள்ள Feather ஒப்ஷன் ஒளிப்படங்களின் விளிம்புகள் எவ்வாறு காட்டப்பட வேண்டும் என்பதனை நிர்ணயிக்கிறது.

Marquee Tool ஐ தெரிவு செய்த பின் Feather கட்டளையில் தேவையான அளவைக் கொடுத்து



Feather : 2



Feather : 20



Feather : 50



Feather : 100

ஒளிப்படத்தில் வேண்டிய பகுதியை தெரிவு செய்து Inverse Selection கொடுத்த பிறகு தேவையற்ற பகுதிகளை Delete செய்யும் போது படங்களில் காட்டியவாறு மாற்றங்களைக் காணலாம்.

இப்படி படங்களை வெட்டி ஒரு பின்னணிப் படத்தில் போட்டாலும், அதைவிட தத்துரூவமாக அதே பின்னணிப் படத்தில் குறித்த நபர் அல்லது வடிவம் இருப்பதைப் போன்று காட்டுவதற்கு நாம் விரும்பியவாறு ஒளிப்படங்களை வெட்ட பயன்படுவது -தான் Magnetic Lasso tool மற்றும் Pen tool ஆகும்.


போட்டோஷாப் Tool Barல் 3வதாக உள்ள இந்த Toolஆனது மூன்று வித வேறுபாடுகள் கொண்ட வேலைகளைச் செய்யக்கூடியது.
அவற்றைப் பற்றி அடுத்த இதழில் காண்போம். ■

– அ.பெஸ்ரியன்



# 2010 இன் தலைசிறந்த கண்டுபிடிப்புகள்

## லூக்சி [ LOOXCIE ]




தலைக்குள் மறைத்து வைத்துக்கொண்டு முன்னால் வரும் ஒருவரை இனங்காண-முடியும் என்பதை நிரூபித்துள்ளது இந்த லூக்சி என்ற வீடியோ கமெரா. இதனை காதின் மேல் பொருத்தி வைத்துக்கொண்டு அதன் பொத்தானை அழுத்தினால் போதும், முன்னாள் நடக்கும் அனைத்தையும் வீடியோவாக 5 மணித்தியாலத்துக்குச் சேமித்து வைத்திருக்கும் வீடியோவை பார்ப்பதுடன், அதனை நீங்கள் மாற்றியமைக்கவும் முடியும். அதுமட்டுமன்றி, உடனடியாக உங்கள் சமூக வலைப்பின்னல்களில் (பேஸ்புக், ருவிற்றர், மைஸ்பேஸ் ) 30 நிமிட வீடியோவை தரவேற்றி வைக்கவும் முடியும். காதில் இதனை பொருத்தி வைத்தால் போதும். உங்கள் கைகளுக்கு வேலையே இருக்காது.

• • • • • • • • • • • • • • •

## ஐ–பாட் [ iPad ]

ஒவ்வொருமுறை அப்பிள் நிறுவனம் ஒரு புதிய சாதனத்தைக் கொண்டு வரும்போதும், உலகம் அதை வியந்து பார்க்கிறது. 3 ஆண்டுகளு-க்கு முன் அப்பிள் ஐ–போனை (iPhone)க் கொண்டுவந்த-போது ஆச்சரியப்பட்ட விழிகள் இன்று மீண்டும் விரியத் தொடங்கியுள்ளன.



மக் (Mac) கம்ப்யூட்டர், ஐபொட் மியூசிக் பிளேயர் (iPod Music Player) மற்றும் ஐ போன் மொபைல்(iPhone Mobile) என முற்றிலும் புதிய சாதனங்களால், டிஜிட்டல் உலகில் புரட்சி ஏற்படுத்திய அப்பிள் நிறுவனம், சென்ற ஜனவரி 27ல் ஐ–பாட் (iPad) என்ற டிஜிட்டல் அதிசயத்தை வெளியிட்டது.

ஸ்மார்ட் போனுக்கும்(Smart Phone), லப் டாப்(Laptop) புக்கும் இடைப்பட்ட சாதனம்போன்று இது இருந்தாலும், அவை இரண்டையுமே ஓரம் கட்டும் சாதனமாகவும் உள்ளது. நெட்புக் கம்ப்யூட்டருக்குப்(Netbook) பதிலாக, ஆனால் முற்றிலும் புதுமையான அனுபவத்தினைத் தரும் சாதனமாக இது உள்ளது.

இணையத்தைப் பிரவுஸ் (Browse) செய்திடவும், அன்றாட வேலைகளான இமெயில், பாட்டு, படங்களைக் கையாளவும் மொபைல் போன் போதுமானதாக இல்லை. லப்டாப் கம்ப்யூட்டர் சற்று அதிகமானது. எனவே, இவற்றுக்கிடையே ஒரு சாதனத்தைக் கண்டுபிடித்தால் என்ன என்ற எண்ணத்தில் உதித்ததுதான் அப்பிள் ஐ–பாட்.

இதில் ஐ–போன் செயலிகள் அனைத்தையும் இயக்கலாம் என்பதுடன், அகலமான திரையில் உள்ள வேர்ச்சுவல் கீ போர்ட்(Virtual Keyboard) மூலம் எளிதாக உள்ளீடுகளை கொடுக்கக் கூடியதாகவும் உள்ளது.

• • • • • • • • • • • • • • • •

## ஃப்லிப்போட் [ FLIPBOARD ]

பேஸ்ஃபுக், ருவிற்றர் போன்ற சமூக வலைப்பின்னல்-களுடாக நண்பர்கள் நாளாந்தம் வெளியிடும் தொடர் வெளியீடுகள் அடுத்தடுத்து உங்கள் தளத்தில் நிறைந்து காணப்படும். பார்ப்பதற்கு ஏதோ ஒரு வகையில் வெறுப்பையும் சலிப்பையும் தான் தரும்.




ஆனால் இவற்றை அப்படியே தனக்குள் உள்-வாங்கி, பார்ப்பதற்குக் கவர்ச்சியாக சஞ்சிகை வடிவில் மாற்றித்தரும் செயலியே ஃப்லிப்போட் ஆகும்.

செய்திகள், புகைப்படங்கள், காணொளிகள் என


தனித்தனி பிரிவுகளாக உங்கள் விருப்புக்கேற்ப நீங்கள் அதை மாற்றியமைக்கவும் முடியும்..

அனைத்து நண்பர்களின் தொடர் வெளியீடுகளையும் ஒரே பார்வையில் உங்களுக்கு காட்டும். புதிய வருகையான, மிகச்சிறிய தொடுகை திரையுடைய கணினி ஐபாட்டிற்காக உருவாக்கப்பட்டுள்ள இச்செயலி, மிக வேகமான செயற்பாட்டுத்திறன் கொண்டதாகும்.

## நுளம்பழிக்கும் நுளம்பு!

## [ The Malaria-Proof Mosquito & the Mosquito Laser ]

மலேரியா நோய் பரப்பும் நுளம்பை



இனங்கண்டு கொல்லும் லேசர் கற்றையி-னைத் தெறிக்கும் உபகரண-ம் ஒன்றை நுளம்பின் வடிவிலேயே அமைத்துள்ளார்கள் அரிசோனா பல்கலைக்கழக விஞ்ஞானிகள்.

ஒரு வருடத்திற்கு உலக அளவில் 250 மில்லியன் பேர் மலேரியாத் தாக்கத்திற்கு உட்படுவதுடன், கிட்டத்தட்ட ஒரு மில்லியன் மக்கள் இறக்கிறார்கள்.

இதனால், இந்த வருடத்தை நுளம்புக்கே கெட்ட காலமாக மாற்றியுள்ளார்கள் இந்த விஞ்ஞானிகள்.

இந்த எதிரி நுளம்பானது மலேரியா கிருமியான பிளாஸ்மோடியத்தைக் காவும் நுளம்புகளின் இறக்கைகள் பறக்கும் அதிர்வெண்ணின் மூலம் அவற்றை இனங்காணும்.

உடனே, லேசர் கதிர்களை வெளியேற்றி நுளம்புகளை எரித்து அழித்துவிடும். மிக விரைவில் நுளம்புகளைக் கட்டுப்படுத்தி மலேரியாத் தாக்கத்தைக் குறைப்பதே இதனைக் கண்டுபிடித்த விஞ்ஞானிகளின் எண்ணமாகும்.

## ஆய்வுகூட சுவாசப்பை

## [ Lab-Grown LUNGS ]

அமெரிக்காவின் ஜேல் பல்கலைக்க-ழக ஆராய்-ச்சியாளர்கள் வளரும் தன்மையு-டைய சுவாசப்பை-யை உருவாக்கி-



யுள்ளார்கள். எலியில் பொருத்தப்-பட்டு பரீட்சிக்கப்பட்டபோது, 95% இயற்கை சுவாசப்பையுடன் ஒத்த செயற்பாட்டையே இது ஆற்றுகிறது.


இயற்கையான சுவாசப்பையின் அமைப்பை ஒத்ததாகவும், குருதிக் கலன்கள்,கொலாஜின் நார்கள் மற்றும் தொடுப்பிழையங்கள் என்பனவற்றை கொண்டு அமைந்துள்ளது

ஓரிரண்டு மணித்தியாலங்கள் ஒட்சிசன்- காபனீரொக்சைட் வாயு மாற்றச் செயற்பாடு வினைத்திறனாக நடப்பதுடன், உட்சுவாச வெளிச்சுவாசப் படிமுறைகளை செயற்படுத்துகிறது. மிக நீண்ட காலத்துக்கு இயங்கக்-கூடியவாறு ஆய்வுகூடத்தில் இந்த சுவாசப்பையை உருவாக்கி, சுவாசப்பைப் புற்றுநோய் மற்றும் சுவாசப்பை நோய்களால் பாதிப்புறும் நோயாளிகளுக்கு பொருத்துவதே இவர்களின் நோக்கமாகும்.

## தண்ணீரின்றிய சலவை இயந்திரம்

## (Waterless Washing Machine)

தற்போது பயன்பாட்டிலுள்ள சலவை இயந்திரங்கள் பயன்படுத்தும் நீரின், 90% ஐ மிச்சப்படுத்தும் சலவை இயந்தரத்தை லீட்ஸ் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்-



களின் நிறுவனமான ∴செரோஸ் நிறுவனம் கண்டுபிடித்துள்ளது.

∴செரோஸ்(Xeros) என்றழைக்கப்படும் இச்சலவை இயந்திரத்திற்கு நைலோன் பொலிமர் மணிகள் மற்றும் சலவைத்தூள் கூடவே ஒரு கப் நீரும் இருந்தால் போதும்.


நீரினால் அழுக்கு கழுவப்பட்டு பொலிமர் மணிகளால் உள்வாங்கப்படும். ஆனால் பொலிமர் மணிகள் மீளப் பயன்படுத்தத்தக்கது என்பதுடன் அதனை எடுக்க பயன்பாட்டாளர் சிரமப்படத் தேவையில்லை. சலவை இயந்திரமே அதைப் பிரித்து வெளியேற்றும்.

இந்தப் பொலிமர் மணிகள் கிட்டத்தட்ட 100 ஆடைகளுக்கு அதாவது வீட்டில் 6மாதம் வரையில் மீள் பயன்படுத்தக்கூடியது.

ஆரம்பத்தில் இச்சலவை இயந்திரம் சலவையகங்களில் பயன்படுத்தக் கூடியதாக இருப்பினும் மிக விரைவில் வீடுகளுக்கும் வந்துவிடுமாம்.

## உயிர் காக்கும் இயந்திர மனிதன் [ LIFE GUARD ROBOT ]

மனித உயிர்காப்பாளரை விட 15 மடங்கு வேகங்கொண்ட இந்த இயந்திர உயிர் காப்பாளி, நீருக்கடியில் மாட்டிக்கொள்-



பவர்களை மீட்டுத்தரக்-கூடியது. இதனைக் கண்டுபிடித்த-வர் ரொனி முல்லிகன் (Tony Mulligan) ஆவார். எமிலி (EMILY- EMergency Integrated Lifesaving Lanyard) என்றழைக்கப்படும் 4 அடி உயரமான இந்த இயந்திர உயிர் காப்பாளி, 24miles/h என்ற வேகத்தில் நீருக்கடியில் செல்லும். தோலை இயக்குக் கருவி மூலமாக இயக்கப்படும் இது, ஒரு தடவை மின்னேற்றலில் 130 km (81miles) வரை செல்லும்.

மனிதர்களைக் காப்பாற்ற வடிவமைக்கப்பட்ட இந்த இயந்திர உயிர்காப்பாளி, சமயத்தில் நீருக்குள் சிக்கிவிடக்கூடிய மனித உயிர் காப்பாளர்களையே காப்பாற்றுகிறது. ■

–ம.யசோ

## ரப்ளட் கணினி (Tablet PC)

ARM11 8902, 800MHz புரொசெசரைக் கொண்ட, அன்ரிராய்டு 2.0 இயக்குதளத்தினை(Antroid 2.0 Operating System) கொண்டியங்கும், கைகளில் வைத்துப் பயன்படுத்தக் கூடிய கணினி இதுவாகும்.

256 MB நினைவகம் 8 Inch LCD தொடுதிரை, கம்பியில்லா இணைய இணைப்பு, யுஎஸ்பி போட்(USB Port), 16GB வன்தட்டு (Hard Disc), 3G தொடர்பாடல் வசதி என்பவற்றைக் கொண்டுள்ள இது, கூகிள் குரோம்(Google Crome), யூ ரியூப்(You Tube), எம்.எஸ்.என். போன்ற இணைய மென்பொருள்களையும் கொண்டுள்ளது. இக்கணினி இயங்குவதற்கு 3.7 வோட் மின்கலம் தேவைப்படும்.







## புளூருத் விசைப்பலகை (Bluetooth Keyboard)

அழகிய வண்ணத்தில், 175 கிராம் நிறையில் மடித்து சுருட்டி வைக்கக்கூடிய வண்ணம் நெகிழ்வுத்தன்மையுள்ள புளூருத் விசைப்பலகை பாவனைக்கு வந்து உள்ளது.


415mm X 125mm X 16mm பரிமாணத்தினைக் கொண்ட இந்த புளூருத் விசைப்பலகை, ஸ்மாட் போன் (Smart Phone), அப்பிள் ஐபோட் (Apple iPod), ஐபோன் (iPhone), பிளாக் பெரி (Black Berry) போன்ற பிரபலமான கையடக்க தொலைபேசிகள் மற்றும் கணினிகளுக்கு ஒத்திசைவாக செயல்படும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதன் மின்னூட்டத்திற்கு 2AA Batteries உலர் மின்கலம் தேவைப்படும். நீர்புகாத்-தன்மையுடைய எளிதில் சுத்தம் செய்யக்கூடியதாய் பல்வேறு வண்ணங்களில் தற்போது இது சந்தைக்கு வந்துள்ளது.





டெஸ்ட் டியூப் குழந்தைகளின் வர்க்கமாகவே அனைவரும் இருப்பர். 10 மாதம் தாய் வயிற்றில் சுமப்பதென்பது உலக அதிசயம் ஆகிவிடும்.



மரபணு மாற்றம் செய்யப்பட்ட அழுகாத தக்காளியும், கண்ணீர் வரவழைக்காத வெங்காயமும், கெட்டுப்போகாத காய்கறிகளும் மார்க்கெட்டில் கிடைக்கும்.




உலகில் வயதானோரே அதிகம்




இருப்பர்.



மனித மரபணுக்கள் மூலம் உருவாக்கப்பட்ட சூப்பர் செயற்கை மனித இனம் உருவாக்கப்பட்டுவிடும்.

பருவநிலை மாற்றத்தால் பஞ்சம் ஏற்பட்டு பாதிப்பேர் பட்டினியாகவே



இருப்பர்.

ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்துக்கு 'வேர்ச்சுவல் ரியாலிட்டி'(Virtual Reality) வழியாகவே சென்றுவிடலாம்.



போக்குவரத்து வாகனங்கள் மியூசியத்திலேயே இருக்கும்.

சுற்றுலாவுக்கென பூமிக்கருகில் ஒரு கோள் உருவாக்கப்பட்டிருக்கும்.




ஜாலியா ஒரு டூர் போய் வரலாம்.

எல்லா நாடுகளிலும்



செல்லுபடியாகும் ஒரே நாணயம் பயன்பாட்டிலிருக்கும்.

கம்ப்யூட்டர் வைரஸ்களால்



நாடுகளுக்கிடையே போர் மூழும்.

சூரிய ஒளியிலிருந்தே எடுக்கப்படும் தடையே இல்லாத இயற்கை மின்சாரம் பாவனைக்கு வந்துவிடும்(பவர் கட் கட்டாகிவிடும்).

வாகனங்கள் தண்ணீரிலேயே ஓடும் (பெற்றோலுக்குத் தண்ணி காட்டிவிடலாம்).



உலகக் கோப்பை போட்டிகளில் ரோபோ வீரர்களே விளையாடுவர்(விளையாட்டு வீரர்கள் கச்சான் கொறித்தபடி அதை ரிவியில் பார்த்து இரசிப்பர்).

மாற்றுச் சிகிச்சைக்காக செயற்கை



உடல் உறுப்புகள் இருக்கும் (ஏதாவது ஒரு உறுப்பில் சிக்கலென்றால் அப்படியே கழற்றி மாற்றிவிட வேண்டியதுதான்).

உலகமெங்கும் பசுமை நகரங்களே இருக்கும் (நரகம் மேலுலகத்திலும் இருக்காது).

Source: http://rajkumer.blogspot.com

# கொழும்பில் HOLIDAY கொண்டாட்டம்

டிசம்பர் என்றாலே விடுமுறையும், கொண்டாட்டமும்தானே? அதுவும் வருட இறுதி விடுமுறை என்பதால் குடும்பத்துடன் வெளியிடங்களுக்குச் சென்று கொண்டாட இதுதான் பொருத்தமான காலம்.

யாழ்ப்பாணத்துக்கும் வெளிமாவட்டங்களுக்குமான போக்குவரத்து வசதிகள் சுமுகமடைந்திருப்பதால், இந்த விடுமுறையில் குடும்பத்தோடு கொழும்புக்கு ஒரு பயணம் போட்டு, இடங்களையும் சுற்றிப் பார்த்து, மலிவு விற்பனைகளில் தேவையான பொருள்களையும் அள்ளிக்கொண்டு வந்துவிடலாம்.

தெகிவளை மிருகக் காட்சிச்சாலை, அரும்பொருள் காட்சியகம், எக்செல் வேர்ல்ட்(Excel World), லெஷர் வேர்ல்ட்(leisure World) போன்ற களியாட்ட நிலையங்களுடன், மஜெஸ்டிக் சிட்டி(Majestic City), லிபர்ட்டி பிளாஸா(Liberty Plaza) போன்ற ஷொப்பிங் கொம்பிளக்சுகள் என ஏராளமான இடங்களை ஒரு சுற்றுச் சுற்றிப் பார்த்துவிட்டு வந்துவிடலாம்.




### மிருகக் காட்சிசாலை

தெற்காசியாவிலேயே மிகவும் சிறப்பான மிருகக் காட்சிசாலை கொழும்பு தெஹிவளையில் அமைந்துள்ளது. செடி, கொடி, மரங்கள் நிறைந்த இயற்கையான சூழ்நிலையில் அமைந்திருக்கும் இந்த மிருகக் காட்சிசாலையில் அனைத்து வகையான மிருகங்கள், பறவைகள், ஊர்வன, அரிய மீனினங்களையும் பார்வையிட்டு மகிழலாம்.

மாலை நேரங்களில் தினமும் நீர்நாயின் சாகச நிகழ்ச்சியும், ஞாயிற்றுக்கிழமைகளில் யானைகளின் சாகச நிகழ்ச்சியும் நடைபெறும்.

உணவு, குளிர்பானங்கள் அருந்துவதற்கு சிற்றுண்டிச்சாலைகளும் மிருகக் காட்சிச்சாலைக்கு உள்ளேயே அமைக்கப்பட்டுள்ளன.

தெகிவளையில் இருந்து கொட்டாஞ்சேனைக்குப் பயணிக்கும் 176ம் இலக்க பேரூந்தில் சென்றால் நேரே மிருகக் காட்சி சாலைக்கும், காலி வீதியில் தெகிவளைச் சந்திக்கு முன்பாக இறங்கி நடந்தும் போகலாம்.



### தேசிய அரும்பொருள் காட்சியகம்

பல நூற்றாண்டுகள் பாரம்பரியத்தைக் கொண்ட பல்வேறு அம்சங்கள் இங்கே நிறைந்துள்ளன. விஞ்ஞானம், கலாசாரம், இயற்கை வளப் பாதுகாப்பு, நூலகம், வெளியீடு ஆகிய ஐந்து பிரிவுகளாக அரும்பொருள்கள் இங்கே பிரித்து வைக்கப்பட்டுள்ளன.

விஞ்ஞானப் பிரிவு, விலங்கியல், தாவரவியல், புவியியல், ஆகிய மூன்று உப பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. விலங்கியல் பிரிவில் சுமார் 23ஆயிரத்திற்கும் அதிகமான பறவைகள், விலங்குகள், மீனினங்களின் உருவங்களும், தாவரவியல் பிரிவில் 1,500க்கும் அதிகமான தாவரங்கள் பற்றிய விபரங்களும், புவியியல் பகுதியில் பல நூற்றாண்டுகள் பழமையான நவரத்தினங்கள், வைரங்கள், கனியுப்புக்கள் மற்றும் பல வகையான கற்களையும் காணக்கூடியதாக இருக்கும்.

கலாசாரப் பிரிவில் வரலாறு, சமூகவியல் சார்ந்த தொன்மைப் பொருள்களைக் காணமுடிகிறது. நாணயங்கள், பழமை வாய்ந்த கற்கள் பதிக்கப்பட்ட பாவனைப் பொருள்கள், ஆபரணங்கள், தளபாடங்கள், பழமையான எழுது கருவிகள், ஆயுதங்கள், சட்டி பானைகள் எனப் பல்வேறு பொருள்களும் வரலாற்றுப் பிரிவில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.



அமைந்துள்ள Excel World க்கு, வெள்ளவத்தையிலிருந்து அல்லது கொட்டாஞ்சேனை, மட்டக்குளிய பகுதிகளிலிருந்து 155ஆம் இலக்கப் பேருந்தில் செல்லலாம்.

கொழும்பு 7 இல் அமைந்துள்ள இந்த அரும்பொருள் காட்சியகத்துக்கு, வெள்ளவத்தையிலிருந்து அல்லது கொட்டாஞ்சேனை, மட்டக்குளியவிலிருந்து 155ஆம் இலக்கப் பேருந்தில் செல்லலாம். புறக்கோட்டை பஸ் நிலையத்திலிருந்து 138 வழி இலக்க பேருந்திலும் செல்லலாம்.

## எக்செல் வேர்ல்ட் (Excel World Entertainment Park)

அழகான புத்துணர்ச்சி தரும் சூழலில், குழந்தைகள், இளைஞர்கள், பெரியவர்கள் என அனைத்து வயதினரையும் கவரும் களியாட்டங்கள் Excel World இல் நிறைந்துள்ளன.

குழந்தைகளின் உடலுக்கும், மனதுக்கும், உற்சாகத்தைத் தரும் பல சாகச விளையாட்டுக்கள் இங்கே உள்ளன. அத்துடன் Laser Game Center க்கு ஒரு முறை செல்லாமல் நீங்கள் திரும்ப முடியாது. உங்கள் திறமையை வெளிப்படுத்தும் பல்வேறு நிகழ்ச்சிகள் இங்குதான் நிறைந்து கிடக்கின்றன.

இலங்கையின் மிகப்பெரிய Game Center ஆன இங்கு, மின்சாரக் கார், மோட்டார் சைக்கிள் சவாரிகள், Bowling, உதைபந்தாட்டம் போன்ற விளையாட்டுக்களுடன் martial arts games, போர் மற்றும் மயிர்க் கூச்செறியும் பல விளையாட்டுக்களும் உள்ளன.

இலங்கை, இந்திய, மலேசிய, மொங்கோலிய அறுசுவை உணவுகளைப் புசிப்பதற்கு Avenue என்ற பரந்த உணவகமும் இங்குள்ளது. உடலுக்குகந்த ஆரோக்கியமான உணவுகள் மற்றும் பழரசங்கள் என்பன இங்கே கிடைக்கும். முப்பரிமாணத் திரைப்படம் பார்க்க CINAMATRIX என்ற பிரிவும் உள்ளது.

கொழும்பு 10 இல்

## லெஷர் வேர்ல்ட் (Leisure World)

கொழும்பின் புறநகர்ப் பகுதியான அவிசாவளையில் அமைந்துள்ள லெஷர் வேர்ல்ட், சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை பொழுதைக் களிப்பதற்காக நீச்சல் தடாகங்கள், சிறுவர்களுக்கான விளையாட்டு இடங்கள், இராட்சத இராட்டினங்கள், நீர்ச் சறுக்கல் விளையாட்டுக்கள் எனப் பல்வேறு அம்சங்ளைக் கொண்டுள்ளது. கூடவே நிறைய உணவகங்களையும் கொண்டுள்ளது.

இயற்கை எழில் சூழ்ந்த் மிகப் பரந்த நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ள லெஷர் வேர்ள்டை முழுமையாக அனுபவிப்பதற்கு ஒரு முழு நாள் தேவைப்படும்.


## மலிவு விற்பனை (SALE !)

டிசம்பர் மாதம் ஆகையால் இருப்புக்களை விற்றுத் தீர்ப்பதற்காக ஏராளமான மலிவு விற்பனைகள் கொழும்பின் பல இடங்களில் நடைபெறும். ஆடை அணிகலன்கள் முதல் இலத்திரனியல் உபகரணங்கள் வரையில் அனைத்தையுமே மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள டிசம்பரை விட்டால் வேறு காலம் கிடையாது.

இரவு ஏறினால் விடிந்ததும் கொழும்பு. பாதுகாப்புக் கெடுபிடிகளும் கிடையாது.

ஒருக்கால் போய்த்தான் வாருங்களேன்! ■

**– ம.பிரசாத்**





# கிளித்தட்டு

**"ஆலையில சோலையில**
**ஆலம் பாடிய சந்தையில**
**கிட்டிப்புள்ளும் பம்பரமும்**
**கிறுக்கியடிக்கப் பாலாறு"**
என்பது கிராமத்து நாட்டார் பாடல்.

கிராமத்து விளையாட்டுக்கள் எப்போதுமே இப்படி பாடல்களுடன் இணைந்ததாகத்தான் இருந்து வந்தன. ஆடலுடன் பாடலும் சேர்ந்ததுதான் பண்டைத் தமிழர் வாழ்வாக இருந்து வந்தது. விளையாட்டும், கலைகளும் அந்தளவுக்கு ஒன்றுடனொன்று பின்னிப் பிணைந்திருந்தன.

முன்னர் கிராமங்களில் விடுமுறையைக் கழிக்கச் செல்லும் நகர்ப்புறத்துப் பிள்ளைகள் இத்தகைய பண்டைய விளையாட்டுக்களை ஆச்சரியத்துடன் பார்த்து மகிழ்வர். இப்போது இப்படிப் பார்ப்பதற்குக்கூட பாரம்பரிய விளையாட்டுக்கள் கிடைப்பது அரிது.

இவ்வாறான பாரம்பரிய விளையாட்டுக்களில், கிளித்தட்டு அல்லது தாச்சி மிகவும் பிரபலமான, சுவாரஸ்யமான ஒரு விளையாட்டு. அருகிவரும் இந்த விளையாட்டைப்பற்றி அறிந்துகொண்டு நாமும் விளையாடி மகிழ்வதற்கு இம்முறை அதுபற்றிக் கொஞ்சம் தெரிந்துகொள்வோம்.

எங்கள் மண்ணுக்கே சிறப்பான விளையாட்டுக்களில் ஒன்றான 'கிளித்தட்டை' சிறுவர் முதல் பெரியோர் வரை வயது, பால் வேறுபாடின்றி எல்லோருமே விளையாடி மகிழலாம். சில கிராமங்களில் இதனை "யாட்" அல்லது "தாச்சி" என்றும் அழைப்பார்கள். பண்டைய காலத்தில் கிராமத்துப் பிள்ளைகளுக்கு பிடித்தமான ஒன்றாக இருந்துவந்த இவ்விளையாட்டு இன்று பலருக்கும் தெரியாததென்பது ஆச்சரியம்தான்

கிளித்தட்டு விவசாயிகளின் கலாசாரத்தை பிரதிபலிக்கின்ற ஒன்றாகும். நெல் விதைத்த காலங்களில் வயலில் நெல்மணிகளைப் பொறுக்க வரும் கிளிகளை, கமக்காரன் வரம்புகளில் ஓடிக் கலைத்து வயலைக் காப்பதையே இந்த விளையாட்டுக் காட்டி நிற்கிறது. காப்பவர்- கமக்காரனாகவும், புகுவோர்- கிளிகளாகவும், தட்டுக்கள் (பெட்டிகள்) - வயல் நிலங்களாகவும், கோடுகள்- வரம்புகளாகவும் பாவனை செய்யப்படுகின்றது.


நமது கலாசாரத்தோடு கூடிய இவ்விளையாட்டு செலவுச் சிக்கனமானதும், விளையாடுபவர்களுக்கு மிகுந்த உற்சாகத்தையும், ஆர்வத்தையும் கொடுக்கக்கூடியதாகவும் உள்ளது.

இதற்காகத் தெரிவு செய்யப்படும் இடம் புல், பூண்டற்ற துப்பரவானதாக இருக்கவேண்டும். விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கைக்கேற்ப இரு கொலம்களாக (column) பெட்டிகள் பிரிக்கப்படும். ஆகக் குறைந்தது 6 பெட்டிகளாவது இருக்கவேண்டும்.

விளையாடும் வீரர்கள் இரண்டு அணிகளாகப் பிரிவர். குறைந்தது ஒரு அணியில் 5பேர் வரையிலாவது இருக்கவேண்டும். இரு அணிகளில் 'பூவா', 'தலையா' போட்டுப் பார்த்து எந்த அணி முதலில் களமிறங்குவது என்பது தீர்மானிக்கப்படும்.

மைதானத்தை மறிக்கத் தெரிவாகும் அணியின் தலைவர் 'கிளி' ஆவார். இவர் நெடுங்கோட்டு வழியாக மட்டும் வழிமறிப்பார். மேலும் தனது கைக்கு எட்டும் தூரத்திலுள்ள எதிரணியினரை அடிக்கவும் முடியும். கிளியிடம் அடி வாங்கியவர் ஆட்டத்திலிருந்து விலகிவிடவேண்டும்.





குறுக்குக் கோடுகளிலுள்ளவர்கள் எதிரணியினர் பெட்டிக்குப் பெட்டி தாவுவதை மறிப்பர். பக்கத்து பக்கத்து பெட்டிகளுக்கு மாறி மாறி செல்வதன் மூலம் இவர்களைத் திசைதிருப்பி முன்னேற முடியும்.

'காத்தலும்', 'புகுதலும்' என இரு அணியினரும் மும்முரமாக விளையாடி ஒரு வழியாக முழுப்பெட்டியையும் தாண்டி களமிறங்கியவர்கள் வெளியே வருவார்கள்.

இத்தோடு முடிந்துவிடாது. இனிமேல்தான் விளையாட்டே ஆரம்பமாகும். பெட்டிகளைத் தாண்டி வெளியே களமிறங்கியவர்கள் தொடர்ந்து எதிர்ப்பக்கமாக முன்னேறி மீண்டும் ஆரம்பித்த இடத்துக்குச் செல்வதுதான் விளையாட்டின் விறுவிறுப்பான பகுதி.

ஆரம்ப இடத்திலிருந்து உள்நுழைந்தவர்கள் 'காய்' என்றும், எதிர்ப்பக்கம் சென்று மீண்டும் வெற்றிக்காக முன்னேறுபவர்கள் ஆர்வமும் களமிறங்கியவர்கள் முன்னேறும் வேகத்தில்தான் தங்கியிருக்கும். இவர்கள் காலம் தாழ்த்திக்கொள்வதை கட்டுப்படுத்த நடுவர் ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பார். இவர் குறிப்பிட்ட நேரத்துக்குள் முன்னேறாத வீரர்களை ஆட்டத்திலிருந்து விலக்குவார்.

போட்டியை விறுவிறுப்பாக்குவார்.

இவ்வாறு மாறி மாறி இரு அணியினரும் விளையாடி தாம் எடுக்கும் வெற்றிகளின் எண்ணிக்கையில் அன்றைய போட்டியின் வெற்றியணி தீர்மானிக்கப்படும்.

சின்னச் சின்ன சண்டைகள், கோபங்களுடன் விளையாடும்போது

## பெட்டிகளைத் தாண்டி வெளியே களமிறங்கியவர்கள் தொடர்ந்து எதிர்ப்பக்கமாக முன்னேறி மீண்டும் ஆரம்பித்த இடத்துக்குச் செல்வதுதான் விளையாட்டின் விறுவிறுப்பான பகுதி

'பழம்' என்றும் அழைக்கப்படுவர். இங்கு 'காயும்' 'பழமும்' ஒரே பெட்டிக்குள் சந்திக்க முடியாது. இவ்வாறு சந்தித்தால் அவர்களும் ஆட்டத்திலிருந்து நீக்கப்படுவர்.

இவ்விளையாட்டின் சுவாரஸ்யமும், இவை தவிர, கிளியாக வழிமறிப்பவர், எதிரணியினருக்கு அடித்துவிட்டதாக அடிக்கடி கூறுவார். அடிக்காமலே இவ்வாறு அவர் சொல்லவும்கூடும். இதை 'அழாப்பல்' என்று கூறுவர். இதனையும் நடுவரே கண்காணித்து போட்டியின் விறுவிறுப்புக்கு எல்லையேயிருக்காது. போட்டி முடிந்ததும் அனைவரும் சமாதானமாக வெளியேறும்போது இன்றைய கிரிக்கெட் விளையாட்டை தொலைக்காட்சியில் பார்க்காமல் நேரடியாகப் பார்க்கிற மாதிரி இருக்கும்.



மார்கழி விடுமுறையில வீட்டுக்கு-ள்ள அடைந்து இருக்காமல் நண்பர்கள் எல்லோருமாகச் சேர்ந்து கிளித்தட்டு விளையாடிப் பாருங்கள்.

காலம் போற வேகம் தெரியாமலே நீங்க எல்லோரும், 'இத்தனைநாளும் எப்படிப்போச்சு?' என்ற ஆச்சரியத்-தோடு தை மாதம் பாடசாலைக்கு ஆயத்தமாகுவீர்கள்! ■

–சி.ஜெயந்தி



'பருத்தித்துறையிலுள்ள தாய்மார் ஆண்பிள்ளையொன்றைப் பிரசவித்துவிட்டால், அந்தப் பிள்ளையின் கால்கள் சரியாயுள்ளதா என்பதைக் கண்டுகொள்வதற்கு அவர்களை உதைபந்தாட்டப் போட்டியில் பங்குபெறச் செய்வதே வழக்கம்' என்கிறார், 20 வருடங்களாக டயமன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் செயலாளராக இருந்துவரும் அதன் முன்னாள் விளையாட்டு வீரர் S.வரதராசா.

'சிகரம் தொடு' வாசகர்களுக்காக தமது விளையாட்டுக் கழகத்தின் செயற்பாடுகள் பற்றி பல விடயங்களை எம்முடன் பகிர்ந்துகொண்டார்.

"ஆரம்ப காலங்களில் வதிரியிலுள்ள பெரும்பாலான மக்கள் பாதணி செய்யும்



# சாதனை படைக்கும் வதிரி டயமன்ஸ்

தொழிலையே கொண்டிருந்தனர். தமது தொழில் தேவைக்காக காலி, மாத்தறை போன்ற இடங்களுக்குச் சென்று வந்த அவர்கள், அங்கு உதைபந்தாட்ட விளையாட்டுக்-களைப் பார்த்து ஈர்ப்பு ஏற்பட, தமது ஊரிலும்



உதைபந்தாட்டத்தை விருப்புடன் விளையாடி வந்தனர்" என்று, வதிரிக்கு உதைபந்தாட்டம் வந்த வரலாற்றைச் விளக்குகிறார் வரதராசா.

உதைபந்தாட்டத்தில் முறையாகப் பயிற்சி பெற்று, ஓய்வு நேரங்களில் இவ்விளையாட்டை விளையாடவேண்டும் என்ற நோக்குடன் 1935இல் டயமன்ஸ் விளையாட்டுக்கழகம் தோற்றுவிக்கப்பட்டது என்கிறார் அவர்.

ஆரம்பத்தில் தனியே வதிரி வீரர்கள் மட்டுமன்றி-ல்லாமல், வடமராட்சியிலுள்ள அனைத்து ஆர்வமுள்ள வீரர்களையும் அது இணைத்துக்கொண்டது. எனினும், தனக்கெனத் தனிமுத்திரையைப் பதிக்கும் எண்ணத்துடன், தனியே வதிரி வீரர்களை மட்டும் கொண்ட கழகமாக 1950இல் அது மாற்றம் பெற்றது.

இதன் ஆரம்பகாலத் தலைவராக வே.மு.கந்தவனம், செயலாளராக வ.பாஸ்கரன், பொருளாளராக ப.தர்மராஜா என்போர் இருந்தனர்.



## முதல் பாய்ச்சல்!

1970களில் முன்னணி வீரரான இரட்ணசிங்கம் ஆசிரியர், இக்கழகத்தின் முதலாவது அணிப் பயிற்சியாளராகி, டயமன்ஸ் வீரர்கள் யாழ் மாவட்ட சுற்றுப் போட்டிகளில் பங்கெடுக்க காரணமானார். இந்தியாவில் உதை-பந்தாட்டப் பயிற்சி பெற்ற இவர், தன்னுடைய பயிற்சி மூலம் பல வீரர்களை உருவாக்கினார்.

இவரது வழிகாட்டலின் கீழ், டயமன்ஸ் வீரர்களாக மா.மணிகலாதன், கா.இராஜதுரை, சீ.இராஜநாதன், சீ.சாந்தநாதன், ந.சுந்தரலிங்கம், க.துரைராஜசிங்கம், கி.துரைராஜா, மற்றும் Dr.பரம் ஆகியோர் புகழ்பெற்றனர்.

பயிற்றுவிப்பாளர் இரட்ணசிங்கத்தின் அயராத உழைப்பினால், இக்கழகத்தின் முதல் போட்டியான அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகம் நடாத்திய சித்திராபூரண உதைபந்தாட்டப் போட்டியில் முதலாவது சம்பியன் பட்டத்தை டயமன்ஸ் வென்றெடுத்தது.

தொடர்ந்து 1980களில் இக்கழக வீரர்களான போ. பொன்ராஜா, S.வரதராஜன் ஆகியோர் கொழும்பில் பயிற்சிகளைப் பெற்றதுடன், 1983 ஆம் ஆண்டு ஒலிம்பிக் சொலிடாறிற்றி பயிற்சியில் S.வரதராஜன் கலந்துகொண்டார்.

1990களில் கி.தர்மேந்திரா, ல.அனுராகாந்தன், வி.சாரங்கன் ஆகியோர் ஆசிய உதைபந்தாட்டப் பயிற்சிநெறியில் கலந்து கொண்டு சான்றிதழ்களையும் பெற்றனர்.

“போர்க்காலத்தில் பல தடைகளைச் சந்தித்த இவ்விளையாட்டுக்கழகம், சுமார் இரண்டு தசாப்தங்களாக தமக்குள்ளே பயிற்சியாக விளையாடி வந்தது. இதனால், தமது ஆரம்ப சாதனைகள் விபரங்களை முறையாகப் பேணிக்காக்க முடியாமல் போனது” என வருத்தப்பட்டார் தற்போதைய செயலாளர் வரதராஜன்.

இதனால், மேலெழுந்தவாரியாக ஞாபகத்திலுள்ள முன்னாள் விளையாட்டு வீரர்களின் விபரங்களை மட்டுமே எம்முடன் பகிர்ந்துகொண்டதாக அவர் சொன்னார்.



## புத்தெழுச்சி

தொடர்ந்து வந்த சுமுகமான சூழ்நிலையும், விளையாட்டுத்துறையில் முழு யாழ்ப்பாணமுமே காட்டுகின்ற முன்னேற்றமும் டயமன்சுக்குக் கைகொடுக்க, கழக வீரர்கள் தமது திறமைகளை வெளிக்கொணர்ந்து சாதனைகளை நிலைநாட்டி புத்துயிர் பெற்றனர்.

டயமன்ஸ் வீரர்களான வ.மலோராஜ், ல.அனுராகாந்தன் ஆகியோர் இவ்வாண்டு(2010) நடைபெற்ற தேசிய உதைபந்தாட்டப் பயிற்சியில் கலந்துகொண்டனர். இன்று, 16 உதைபந்தாட்ட மத்தியஸ்தர்கள், 50 விளையாட்டு வீரர்களைக் கொண்ட அணியாக டயமன்ஸ் உயர்ந்துள்ளது.


இந்த ஆண்டு யாழ் சென்மேரிஸ் விளையாட்டுக் கழகம் நடாத்திய போட்டியில் சம்பியன் கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டது. மாலுசந்தி மைக்கேல் விளையாட்டுக் கழகம் நடாத்திய போட்டியில் 2ம் இடத்தைப் பெற்றது.

18-09-2010 அன்று யாழ் மத்திய கல்லூரியில் நடைபெற்ற பிரீமியர் லீக் 3 க்கான போட்டியில் குருநகர் பாடுமீன் அணிக்கெதிராக விளையாடி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றிவாகை சூடியது.

தனியே உதைபந்தாட்ட விளையாட்டு மட்டுமன்றி கிரிக்கெற், எல்லே, கரப்பந்தாட்டம் ஆகியவற்றுக்கும் இக்கழகம் முறையான பயிற்சிகளை வழங்கி வருகிறது. இந்த விளையாட்டுக்களிலும் தம்மை நிலைநாட்ட வீரர்கள் பாடுபடுகின்றனர்.

இது தவிர, பெண்களும் இக்கழகத்தினூடாக வலைப்பந்து, கிரிக்கெற், டென்னிஸ் ஆகிய விளையாட்டுக்களுக்கு முறையான பயிற்சி பெற்று வருகின்றனர்.


## தேசிய அணியில் இணைவு



டயமன்ஸ்சின் தொடர்ச்சியான விளையாட்டுச் சாதனைகளுக்கு மகுடம் சூட்டினாற்போல, இந்த அணியின் உதைபந்தாட்ட வீரரான மதனராஜன் பிரேம்குமார் இன்று தேசிய அணியில் இடம்பிடித்து யாழ் மாவட்டத்துக்கே பெருமை சேர்த்துள்ளார்.

யா/தேவரையாளி இந்துக்கல்லூரியில் கல்வி பயின்ற இவர், டயமன்ஸ் விளையாட்டுக் கழகத்தில் இணைந்து வெளிப்படுத்திய திறமையின் காரணமாக யாழ் மாவட்ட உதைபந்தாட்ட அணியில் இடம் பிடித்தார்.

சமீபத்தில் நடைபெற்ற வடமாகாண விளையாட்டுப் போட்டியில் மன்னார் அணிக்கெதிரான போட்டியில் பலமான வீரராகத் திகழ்ந்த டயமன்ஸ் கழகத்தின் நட்சத்திர வீரர் பிரேம்குமார், தேசிய அணியில் சேர்த்துக்கொள்ளப்பட்டார். இதற்கென விசேட பயிற்சியையும் பெற்றுள்ளார்.






ம.பிரேம்குமார்

பிரேம்குமார் போன்று இன்னும் பல வீரர்களை சகல விளையாட்டிலும் தேசிய அணியில் இணைத்துக் கொள்வது மட்டுமன்றி, பெண்கள் அணியையும் தரமுயர்த்த வேண்டும் என்பதே டயமன்ஸ் இன் இலட்சியமாகும்

டயமன்ஸ் தனது இலட்சியத்தின் சிகரம் தொட, நாமும் வாழ்த்துகிறோம்.



-மா.சுரேஷ்
2ம் அணி

# குறும்பாணிக்கள்

கவிதை எழுதுவதென்றால் எல்லோருக்குமே ஆசைதான். அதிலும் இளைஞர், யுவதியருக்கு இதில் அலாதிப் பிரியம்.

ஆனால், அனைவரும் இரசிக்கக்கூடிய அருமையான கவிதைகளை எப்படி எழுதுவதாம்?

'சிகரம் தொடு' ஒக்டோபர் இதழில் தமிழகத்தின் தலைசிறந்த எழுத்தாளர் சுஜாதாவும், கார்ட்டூனிஸ்ட் மதனும் சொல்லியிருந்ததுபோல், 'நல்ல இரசிகனே நல்ல படைப்பாளியாக முடியும்'.

அவ்வாறு நீங்கள் இரசிப்பதற்காக இந்த இதழில் ஈழத்தின் மூத்த கவிஞர் மஹாகவி உருத்திமூர்த்தியின் குறும்பா வடிவிலமைந்த பாடல்கள் சிலவற்றைத் தருகிறோம்.

அதன் பெயரே சொல்வதுபோல், இவை குறும்பாக்கள்(குறுமை +பா) - அதாவது குறுகிய வடிவிலான பாடல்கள்தான். ஆனால், இது விரிக்கும் அர்த்தங்களோ ஏராளம்.

இந்தக் குறும்பாக்களின் சிறப்பே அவற்றின் குறும்பான அர்த்தச் செறிவுதான். சிரிப்போடு சிந்தனையைத் தூண்டும் குறும்புகள் அவை.

ஆங்கிலத்தில் ஐந்து வரிக் கவிதையான 'லிமரிக்' கவிதையின் சாயலை இது கொண்டிருந்தாலும், குறும்பா தனக்கெனத் தனிச் சிறப்புக் கொண்டது. ஆங்கில லிமரிக் கவிதைகள் தனியே நகைச்சுவையை மையமாகக் கொண்டிருக்க, குறும்பா சிந்தனையைத் தூண்டி சிரிக்கவைப்பதாக அமையும்.

சுயமான கருத்து வலிமையும், சிறந்த மொழியாற்றலும், கற்பனை வளமும் கொண்டதாக இது இருக்கும்.

குறும்பா ஒவ்வொன்றும் தனிப்பாடல் அமைப்பை நேர்த்தியாகக் கொண்டது. ஒரே எதுகையுடைய மூன்று அடிகளைக் கொண்டது. இந்த மூன்று அடிகளும் ஐந்து வரிகளில் எழுதப்படுகிறது.

தனிப்பாடல் மரபு வழியில் எழுதப்படும் இவை, குட்டிக் கதையமைப்பைக் கொண்டதாகவோ, ஒரே காட்சியமைப்பைக் கொண்டதாகவோ, சிறு துணுக்காகவோ காணப்படும்.


இதுதான் குறும்பா? (குறும்பு+ஆ) என நகைச்சுவையாக எல்லோரையும் மகிழ்வித்து சிந்திக்கத் தூண்டுகின்றது குறும்பா!

இரசித்துத்தான் பாருங்களேன்.



**உத்தேசம் வயது பதி னேழாம்**
**உடல் இளைக்க ஆடல் பயின் றாளாம்**
**எத்தேசத் தெவ்வரங்கும்**
**ஏறாளாம்! ஆசிரியர்**
**ஒத்தாசை யால், பயிற்சி பாழாம்.**

உத்தேசமாக பதினேழு வயதுடைய ஒரு மங்கை, உடல் இளைக்க தன் ஆசானிடம் ஆடல் பயின்றாளாம். அவ்வாறு பயின்றவள், அரங்கேற்றம் செய்யாளாம். ஏன்? மேயும் இளவயதினளான அவள், ஆசிரியர் 'ஒத்தாசை'யால் வயிறு – கற்பு பாழாகிப் போனாளாம் என்று விரிகிறது இதன் பொருள்.



**பெஞ்சனிலே வந்தழகக் கோனார்**
**பெருங்கதிரை மீதமர லானார்.**
**அஞ்சாறு நாள் இருந்தார்.**
**அடுத்த திங்கள் பின்னேரம்;...**
**பஞ்சியினாலே இறந்து போனார்.**

ஓவர் டைம் போட்டு உத்தியோகம் பார்க்கும் இயந்திரங்களாகவே வாழும் யாழ்ப்பாணத்தின் நடுத்தர வர்க்கத்தினர், உத்தியோகத்திலிருந்து இளைப்பாறிய பின்னர் செய்வதற்கு ஒன்றுமில்லாமல் வெறுமை சூழ்ந்த நிலையில் கதிரையில் அமர்ந்தபடியே அமரராகிவிடும் நிலைமையை கிண்டலாக வர்ணிக்கிறது இந்தக் குறும்பா.

எல்லாவற்றுக்கும் விளக்கம் தருவது, குறும்பாக்களின் உயிர்த்துடிப்பையும், சாத்தியமான பொருள் கொள்ளளவையும், குறும்பாவுக்கும் உங்களுக்கும்

இடையேயான தனிப்பட்ட
இரசானுபவத்தையும் கெடுத்துவிடும்.


மீதியை நீங்களே படித்து
இரசியுங்கள். மீண்டும், மீண்டும்
இவற்றை வாய்விட்டு லயத்தோடு
பாடிப் பாருங்கள்.

கொஞ்ச நாட்களில் நீங்களும்
குறும்பா மஹாகவி ஆகிவிடுவீர்கள்.


பிறகென்ன? மொழியோடு நீங்கள்
விளையாடியவற்றை இங்கே
பகிர்ந்துகொள்ள வேண்டியதுதானே?



பத்திரிகை நான் புரட்டிப் பார்த்தேன்
பழம் விலைக்கு விற்பதற்காய்ச்
சேர்த்தேன்
உத்தரவில்லாமல் அதன்
உட்புகுந்த சுண்டெலியின்
பக்கிராைப் பின் எண்ணிக் கீர்க்கேன்.



சொந்தத்திற் கார், கொழும்பிற் காணி,
சோக்கான வீடு, வயல், கேணி
இந்தளவும் கொண்டுவரின்
இக்கணமே வாணியின் பாற்





"நன்றி சொல்வேன் என் எதிரிற்
தோன்று,
நாளை இரவு!" என்றனன் உட்சான்று
"நன்றிதல்ல," என்றிடினும்,
சென்று பிழை கண்டு கொண்டாள்



நள்ளிரவில் வீடு வந்தார் சாம்பு.
நடுவழியில் தீண்டியது பாம்பு.
பிள்ளை பெரும் பீதியுற்றுப்
பிரக்கினை போய் மாண்டாராம் –




தொலைபேசியிற் பேசிப் பேசித்
தொந்தரவுக் குள்ளானான் காசி
மலரை மணந் தான்! எனினும்
வாழ்கின்றான் – மீண்டும் அதே



காதலரின் ஓவியம் வரைந்தான்
கண்ணியம் உள்ளோர் என நினைந்தான்
மாதம், உருண்டோட மறு
கண்காட்சி வந்தது. ஃஆ,



செந்திரு இரட்டையரை ஈன்றாள்
சிந்தையிலே பேருவகை சான்றாள்.
வந்து கண்ட ஐயப்பர்
வாய்கழத்தே, "என்னுடையது
எந்த மகவு?" என்ன, ஏதும் தோன்றாள்.



வண்டு வடைக்குள்ளிருந்து மேலே
வந்தது, நான் பிய்த்தபடி யாலே!
கண்டொரு சொல் பேசாமல்
காற்றில் அது போயினது
நன்றி சொல்லா தெம்மவரைப் போலே

**கருத்தோவியம்: - சௌ-**

# எண்ணம்போல் வாழ்வு

நமது வாழ்க்கையின் இன்பம், துன்பம், வெற்றி, தோல்வி எல்லாவற்றுக்கும் பிரதான காரணமாக இருப்பது "ஈர்ப்பு விதி" (Low of Attraction) என்கிறார் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த தொலைக்காட்சி எழுத்தாளரும், தயாரிப்பாளருமான ரோண்டா பைண் (Rhonda Byrne).

உங்கள் வாழ்க்கையில் உங்களுக்கு ஏற்படும் சம்பவங்கள் அனைத்துமே உங்களால் ஈர்க்கப்பட்டவையே. நீங்கள் யாராக இருந்தாலும், எப்பிரதேசத்திலிருந்தாலும், நீங்கள் நினைப்பவை, உங்கள் மனதில் தோன்றும் எண்ணங்கள் அனைத்தையும் நீங்கள் உங்களை நோக்கி ஈர்க்கின்றீர்கள் என்கிறார் தத்துவவியலாளர் பொப் புரொக்டர்(Bop Proctor).

அது எப்படி? நான் எவையெல்லாம் வேண்டாம் என்கிறேனோ அவையெல்லாம் திரும்பத் திரும்ப எனக்கு நடக்கிறதே! அவற்றை எல்லாம் நான் எப்படி ஈர்த்ததாகும்? என நீங்கள் கேட்கலாம்.

இந்த ஈர்ப்பு சக்திக்கு "வேண்டும்", "வேண்டாம்" என்கிற பாகுபாடு எல்லாம் தெரியாது என்கிறார் மனவியல் நிபுணரும் எழுத்தாளருமான லிசா நிக்கோல்ஸ்(Lisa Nichols). நீங்கள் எதைப்பற்றி எண்ணுகிறீர்களோ அதை அது உங்களுக்கு ஈர்த்துத் தருகிறது. அது வேண்டப்படாதது என்றாலும்கூட என்கிறார் அவர்.

உதாரணமாக, பணக்கஷ்ரத்தை நாம் விரும்பவில்லை என்றால் தினமும் எங்களை அறியாமலே அதைப்பற்றி நாம் நினைக்கிறோம். கஷ்ரம் வந்துவிடுமோ? கடன் கூடிவிட்டால் என்ன செய்வது? எனப் பிரச்சினைகள் பற்றியே சிந்திக்கிறோம். எமது இந்த எண்ண அலைகள் அப்பிரச்சினையை நம்பால் ஈர்க்கின்றன.

இதை விடுத்து, செல்வச் செழிப்பைப் பற்றியும், செல்வத்தை எப்படி பெருக்குவது என்பது பற்றியும் சிந்திப்போமானால், அச் செல்வம் நம்மை நோக்கி ஈர்க்கப்படுகிறது. கிடைத்தவற்றுக்கு நன்றி செலுத்துவதனால் ஈர்ப்பு மேலும் வலுப்பெறுகிறது.

ஏழை தொடர்ந்து ஏழையாகவும், செல்வந்தன் மேலும் செல்வந்தனாகவும் வாழ இவ்விதியே காரணம்.

எமக்கு ஏற்படும் விபத்துக்களைக் கூட, விபத்துப் பற்றிய எண்ணங்கள் மூலமாக, மறைமுகமாக நாம்தான் ஈர்க்கிறோம் என்கிறார் ஆய்வாளர் ஜோ விடேல்.

பல கொடிய வியாதிகளிலிருந்து சிலர் மீண்டு வந்த அதிசயங்கள் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். இது எவ்வாறு சாத்தியமாகிறது?

எண்ண வலிமை! நோயை நினைத்துப் பயந்து கொண்டிருக்காமல், நலத்தைப் பற்றியே சிந்திப்பதால் அந்நோயிலிருந்து விடுபடமுடிகிறது.

மார்பகப் புற்றுநோயிலிருந்து மனோ வலிமையால் மூன்று மாதங்களில் குணமடைந்த Cathy Goodman, ஆரம்பத்தில் இருந்தே தான் பூரண குணமடைந்து விட்டதாகவே தினமும் எண்ணி வந்ததாகக் கூறுகிறார்.

✱✱✱✱ ✱✱✱✱ ✱✱✱✱

ஒரு துறவி மலைச் சிகரம் ஒன்றில் ஆழ்ந்த தியானத்தில் அமர்ந்திருந்தார். சில நோய்க் கிருமிகள் கூட்டம் கூட்டமாக நகரம் நோக்கி நகர்வதை உணர்ந்து அவற்றை அழைத்தார்.

"விதியின் ஏவலால் நகரில் பரவப்போகிறோம். நூறுபேரை மட்டுமே கொல்வோம்." என்று வாக்களித்து விட்டு அவை அப்பால் நகர்ந்தன.

அடுத்த நாள் ஐந்நூறுபேர் இறந்திருந்தார்கள்.

திரும்ப வரும் போது "நாங்கள் கொன்றது நூறு பேரைத்தான். மிகுதி நானூறு பேரும் அச்சத்தால் இறந்தார்கள்" என்று கூறின அந்தக்



கிருமிகள்.

ஆக, மிகுதி நானூறு பேரும் நோய் பற்றிய பயத்தினால் சாவைத் தம்மை நோக்கி ஈர்த்துள்ளனர்.

**** **** ****

நம்பிக்கை என்பது இந்த ஈர்ப்பின் அடிப்படையிலேயே செயற்படுகின்றது. நீங்கள் ஒரு விடயத்தை எவ்வளவு தூரம் உறுதியாக நம்புகிறீர்களோ அவ்வளவுக்கு அது செயல் வடிவம் பெறுகிறது.

பரீட்சைக்குப் புறப்படுகிறார் ஒருவர். பூனை குறுக்கால் ஓடுகிறது. அடடே சகுனம் பிழையாயிற்றே! பரீட்சை கடினமாகத்தான் வரப்போகிறது. இம்முறை நான் சித்தியடையப்போவதில்லை என அதையே எண்ணியபடி இருப்பார். அவர் எண்ணப்படியே ஈர்ப்புவிதி இயங்க, பரீட்சையும் பிழைத்து விடும். உடனே சகுனத்தின் மீது இன்னும் நம்பிக்கையை வளர்ப்பார்.

தவறு பூனையிடமோ, சகுனத்திடமோ இல்லை. அவரவர் நினைப்பிலேயே உள்ளது. அவர் மாறாக தன் திறமை மீது நம்பிக்கை வைத்திருப்பாரானால் நிச்சயம் வெற்றி கண்டிருப்பார்.

அடியார்களுக்கு நாளும் கோளும் நன்மையே செய்யுமென கூறிய ஞானசம்பந்தர் வாக்கும், "நம்பினார் கெடுவ-தில்லை" எனும் வாசகமும் இதையே உணர்த்துகின்றன. அனைத்து மதங்களும் இதையே கூறுகின்றன.

நாம் வேண்டியது அனைத்தும் கிடைக்குமென்றால் எப்படி? எவ்வாறு இது நடைபெறுகிறது? என்ற கேள்வி எங்களுக்கு எழலாம்.


"எவ்வாறு என்பது பற்றி நீங்கள் கவலைப்படத் தேவையில்லை. அது உங்களுக்கு அவசியமும் இல்லை. எவ்வாறு என்ற உங்கள் சந்தேகம் உங்கள் நம்பிக்கையின் செறிவைக் குறைக்கிறது. இதன்மூலம், ஈர்க்கப்படுவதும் தடுக்கப்படுகிறது" என்கின்றனர் பொப் புரொக்டர் மற்றும் ஜோ விடேல் ஆகியோர்.

ஆளியை (Switch) அழுத்தியவுடன் மின்குமிழ் எரிகிறது. ஆனால் அது எவ்வாறு? அதன் பின்னணியில் என்ன நடக்கிறது? என எமக்குத் தெரிந்திருக்கத் தேவையில்லை. அதன் பயன்பாட்டை நாம் அனுபவிக்கிறோம்.

இனி நடப்பவற்றுக்கு யாரையும் குறைகூற முடியாது. அனைத்துக்கும் நம் எண்ணங்களே பொறுப்பு.

"எண்ணம் போல் வாழ்வு" என்பது இதைத்தான்.

எனவே, இன்று முதல் எமது எண்ணங்களில் மாற்றங்களைக் கொண்டு வருவோம். எவையெவை வேண்டாம் என்று நினைப்பதை விடுத்து, வேண்டியதை மட்டும் மனதில் கொள்வோம்.




"யுத்தம் வேண்டாம் என நினைக்காதீர்கள், அமைதி வேண்டும் என நினையுங்கள்" என்கிறார் ஹேல்ட் லாஸ்கின்.

ஏனெனில், யுத்தம் வேண்டாம் எனும்போதே, அங்கே யுத்தத்தையும், அழிவுகளையும் பற்றியே நாம் அதிகம் நினைக்கிறோம்.

"யுத்த எதிர்ப்புப் பேரணிக்கு என்னை அழைக்காதீர்கள். அமைதிப் பேரணிக்கு வேண்டுமானால் அழையுங்கள்." என்றாராம் அன்னை தெரேசா ■

## நீங்கள் ஒரு விடயத்தை எவ்வளவு தூரம் உறுதியாக நம்புகிறீர்களோ அவ்வளவுக்கு அது செயல் வடிவம் பெறுகிறது



– கிரி வரதராஜன் –

நன்றி : "வானமே எல்லை"

# உரிமைகளை அறிந்து கொள்வோம்!



மனிதர்கள் மனிதர்களாகப் பிறந்த காரணத்தினால் அவர்களுக்குக் கிடைத்த அடிப்படையான, விட்டுக் கொடுக்க இயலாத, மறுக்க முடியாத சில உரிமைகள் தான் மனித உரிமைகளாகும்.

சுமார் மூன்று தசாப்த காலமாக போர்ச் சூழலுக்குள் வாழ்ந்து வந்த எமக்கு, எமக்கிருக்கும் இந்த உரிமைகள் பற்றித் தெரிந்திருக்க வாய்ப்பிருக்கவில்லை.

ஆனால், இன்று இந்த நாட்டின் ஏனைய பாகங்களில் வசிப்பவர்களைப்போல, இந்த உலகின் பிற பகுதிகளில் வாழ்பவர்களைப்போல, நாமும் மனிதர்கள்தான் என்று உணர்ந்து எமது உரிமைகளை நிலைநாட்டும் வாய்ப்பு நீண்ட காலத்துக்குப் பின்னர் எமக்குக் கிட்டியிருக்கிறது.

எமக்குக் கிடைத்துள்ள இந்தப் புதிய வாய்ப்பை - சுதந்திரத்தை முழுமையாக அனுபவிப்பதற்கு, எமக்கிருக்கும் உரிமைகள் எவை என்பதை நாம் அறிந்துகொள்வது அவசியமாகும்.

## 'மனித உரிமைகள் என்றால் என்ன?'

சாதி, மதம், பால், இனம், நாடு ஆகிய எல்லைகளுக்கு அப்பால், ஒவ்வொரு தனி மனிதருக்கும் இருக்கக்கூடிய பிறப்புரிமைகளை - நமது சுதந்திரத்துக்கும், கண்ணியத்துக்கும், நலன்களுக்கும் அவசியமான உரிமைகளைத்தான் மனித உரிமைகள் என்று அழைக்கின்றோம்.

'எவ்வித மறுபயனுமின்றி, மனிதனாகப் பிறந்த காரணத்தினாலேயே ஒவ்வொரு தனி நபருக்கும் இருக்கக் கூடிய குறைந்தபட்ச உரிமைகள்தான் மனித உரிமைகள்'. இது இன்று உலகளாவிய ரீதியல் அங்கீகரிக்கப்பட்டு அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகவும் உள்ளது.

*1948* டிசம்பர் *10*இல், ஐக்கிய நாடுகள் அமைப்பினால் 'அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம்' (Universal Declaration of Human Rights) முதன் முதலில் அறிமுகப்படுத்தப்பட்டபோது, இந்த மனித உரிமைகள் 'உலகளாவிய' என்ற பரவலான கருத்தொற்றுமையைப் பெற்றது. அவசியமான உரிமைகளும் சுதந்திரங்களும் எனக் கருதப்பட்ட சுமார் *30* உறுப்புரைகளுக்குள் இவை உள்ளடக்கப்பட்டன.

எமது நாடான இலங்கையும் ஐக்கிய நாடுகளின் அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தை ஏற்றுக்கொண்டுள்ளதுடன், *1978*ஆம் ஆண்டு அரசியலமைப்பு உறுப்புரைகளின் கீழ் அடிப்படை உரிமைகள் பற்றிய அத்தியாயம் ஒன்றையும் தயாரித்துள்ளது. இதன்கீழ் பின்வரும் உரிமைகள் பிரதானமாக ஒவ்வொரு இலங்கைப் பிரசைக்கும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

## உயிர்வாழும் சுதந்திரம்

கடத்தல், கொலை, வன்முறை, குண்டுவீச்சுக்கள் நிறைந்த ஒரு சூழலில் வாழ்ந்தபோது, இலங்கையின் அரசியலமைப்பில் உத்தரவாதப்படுத்தப்பட்ட மிக அடிப்படையான உரிமையான உயிர்வாழ்வதற்கான உரிமையே எமக்குக் கேள்விக்குறியாகியிருந்தது.

ஆனால், இன்றைய சூழலில், 'எனது உயிர்! அதை நான் ஏன் இழக்கவேண்டும்?' என்று எமது உயிரைப் பாதுகாத்துக்கொள்ளும் உரிமை எமக்குக் கிட்டியிருக்கிறது.

## கருத்துச் சுதந்திரம்

போர் மற்றும் போராட்டச் சூழலில் வெளிப்படையாகச் சொந்தக் கருத்துக்களைக் கொண்டிருக்கவோ, அவற்றை வெளிப்படுத்தவோ முடியாதிருந்த நிலைமை மாறி, இப்போது எமது கருத்துக்களைச் சுதந்திரமாக வெளிப்படுத்தக்கூடிய சூழல் கனிந்துவருகிறது.

## தகவல்களை அறியும் சுதந்திரம்

கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தின் பிரிக்க முடியாத மறு பகுதியான தகவல்களை அறிந்துகொள்ளும் சுதந்திரத்தையும் நாம் முழுமையாகப் பயன்படுத்திகொள்ளவேண்டும். எந்தவொரு அரச, அரசார்பற்ற, தனியார் நிறுவனங்கள், நிறுவன அதிகாரிகளிடமும் எமக்குத் தேவையான தகவல்களைக் கேட்டு அறிந்துகொள்ள எமக்கு உரிமை உண்டு.

**சட்டத்தின் முன் அனைவரும் சமம்**
சட்டம் எல்லோருக்கும் பொதுவானது. இதில், உயர்ந்தவர்-தாழ்ந்தவர், கற்றவர் - கல்லாதவர், உயர்சாதி – தாழ் சாதி, ஏழை – பணக்காரன் என்ற வேறுபாடெல்லாம் கிடையாது.

**நடமாடும் சுதந்திரம்**
நாட்டின் எப்பகுதிக்கும் எந்நேரமும் சென்றுவரக்கூடிய நடமாட்டச் சுதந்திரம் இன்று எமக்கு உத்தரவாதப்படுத்தப்பட டிருக்கிறது. யாழ்ப்பாணத்துக்கு வெளியே பயணம் செல்வதில் இருந்துவந்த கட்டுப்பாடுகள், நெருக்கடிகள் அனைத்தும் தளர்ந்து, நினைத்தவுடன் எங்கும் சென்றுவரக்கூடிய ஒரு நிலைமையை இப்போது நாம் பெற்றிருக்கிறோம். இதனை முழுமையாகப் பயன்படுத்திக்-கொள்ளவேண்டும்.

நாம் தெரிவுசெய்யும் பண்பாடு, கலாசாரம், கல்வி, உணவுமுறை இவையெல்லாம் எங்கள் விருப்பாகவே இருக்கலாம். யாருடைய வற்புறுத்தலினாலும் நாம் எங்கள் சுதந்திரத்தை பறிகொடுக்கத் தேவையில்லை.

**மீறினால்...?**
இம்மனித உரிமைகள் எவ்வாறு எமக்கு உத்தரவாதப்படுத்தப்படும்? அவை மீறப்பட்டால், தனிமனிதராக நாம் எப்படி அதனை எதிர்கொள்வது?

மேல்நீதிமன்றத்துக்கு விண்ணப்பிப்-பதன் மூலம் இந்த எல்லா அடிப்படை உரிமைகளையும் ஒருவர் சட்டரீதியாகப் பாதுகாத்துக்கொள்ள முடியும். இதனைவிட, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, பரிபாலனக் கருமங்கள் பற்றிய பாராளுமன்ற ஆணையாளர் (Ombudsman) முறைகேள் அதிகாரியிடமும் முறையிடலாம்.

**வரையறைகள்**
மேற்கூறிய எமது உரிமைகளை, நாட்டின் தேசிய பாதுகாப்புக்குக் குந்தகம் விளைவிக்கக்கூடிய வகையில் நாம் பயன்படுத்த முடியாது. சட்டரீதியாக எமக்கிருக்கும் உரிமைகளையும், அவற்றின் வரையறைகளையும் உணர்ந்து நாம் செயற்படவேண்டியது அவசியம்.

மேலும், எந்தளவுக்கு எங்களுக்கு உரிமைகள் இருக்கின்றனவோ, அந்தளவுக்கு மற்றவர்களுக்கும் அதே உரிமைகள் உண்டு என்பதையும் நாம் உணர்ந்திருக்கவேண்டும். எமது உரிமைகளை முழுவதுமாக அனுபவிக்க, மற்றையோரின் உரிமைகளை நாம் மதிக்கப் பழகவேண்டும்.

உனதுரிமை இழக்காதே..!
பிறருரிமை பறிக்காதே..!

**–ம.யசோ**

**அடிப்படை மனித உரிமைகள்**

சிந்தனை, மனசாட்சிப்படி நடக்கும் சுதந்திரம் மற்றும் சமயச்சுதந்திரம் [உறுப்புரை10]

துன்பத்திலிருந்து விடுபடல் [உறுப்புரை11]

எல்லோருக்கும் சம உரிமை [உறுப்புரை12]

கேள்வி முறையற்ற கைது, தடுத்துவைப்பு மற்றும் தண்டனையிலிருந்து சுதந்திரம் மற்றும் பின்விளைவிலுள்ள குற்றவியல் சட்டங்களிலிருந்து பாதுகாப்பு [உறுப்புரை13]

வெளியீட்டுச் சுதந்திரம் உட்பட பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரம் [உறுப்புரை14(1)(அ)]

அமைதியான கூட்டத்துக்குரிய சுதந்திரம் [உறுப்புரை14(1)(ஆ)]

கூடுவதற்கான சுதந்திரம் [உறுப்புரை14(1)(இ)]

தொழிற்சங்கம் உருவாக்கும் மற்றும் அதிலிணையும் சுதந்திரம் [உறுப்புரை14(1)(ஈ)]


சட்டரீதியான தொழில் சுதந்திரம் [உறுப்புரை14(1)(உ)]

சுயாதீனமாக இயங்கும் சுதந்திரம் மற்றும் வசிக்கும் சுதந்திரம் [உறுப்புரை14(1)(ஊ)]

இலங்கைக்குத் திரும்பும் சுதந்திரம் [உறுப்புரை14(1)(எ)]

# டிசெம்பர்-10 சர்வதேச மனித உரிமைகள் தினம்





# ஊடகங்களிடம் - மக்கள் என்ன எதிர்பார்க்கிறார்கள்?

முப்பது ஆண்டு காலப் போர்ச் சூழல் ஓய்ந்து ஒரு புதிய சூழலுக்குள் தமிழ் மக்கள் காலடி வைத்துள்ளார்கள். இந்தச் சூழலில், ஊடகங்கள் எவ்வாறு செயற்படவேண்டும் என்பது பற்றி பல்வேறு வாதங்கள் முன்வைக்கப்படுகின்றன.

எதிர்மறைக் கருத்துகளையே சொல்லிக்கொண்டிராமல், நேர் சிந்தனையை வளர்க்கவேண்டும் என்று யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் அண்மையில் ஊடகங்களுக்கு ஆலோசனை சொன்னார்.

'வழமைக்கு மாறானதே செய்தி' என்று நினைத்துக்கொண்டு எப்போதுமே குறைபாடுகளை மட்டுமே சொல்லிக்கொண்டிருக்காமல், ஏற்பட்டுவரும் முன்னேற்றங்களை, அபிவிருத்திகளை செய்தியாக்கவேண்டும் என்று, சிகரம் ஊடக இல்லப் பணிப்பாளர் கோ. றுஷாங்கன் கூறியிருந்தார்.

இவ்வாறு பலவிதமான கருத்துக்கள் ஊடகங்கள் தொடர்பாக நிலவிவரும் சூழ்நிலையில், மக்கள் ஊடகங்களிடம் என்ன எதிர்பார்க்கிறார்கள் என்று அறிவதற்காக, சிகரம் ஊடக இல்ல மாணவர்களாகிய நாம் பல்வேறு தரப்பட்டவர்களிடமும் பேச்சுக்கொடுத்தோம்.

ஊடகங்கள் கொண்டிருக்கவேண்டிய தொழில்முறைத் தராதரங்களை, பின்பற்றவேண்டிய நெறிமுறைகளை, கடைப்பிடிக்கவேண்டிய பொறுப்புணர்ச்சியைப்பற்றி ஆச்சரியப்படத்தக்க வகையில் அவர்கள் கருத்துக்களை முன்வைத்தார்கள்.

மக்களின் மனச்சாட்சியாய் ஒலிக்கும் இந்தக் குரல்களை இங்கே தொகுத்துத் தருகிறோம்.

### ஆக்கபூர்வமான கருத்துக்கள் வேண்டும்!



திசைமாறும் இளம் சந்ததியினரை நெறிப்படுத்தக்கூடிய நல்ல நீதிக் கருத்துக்கள், உள்ளதை உள்ளபடி எடுத்துக்கூறும் தன்மை, ஆன்மீக வழிமுறைகள் போன்றவற்றுக்கு அதிக முக்கியத்துவத்தை ஊடகங்கள் கொடுக்கவேண்டும். மேலும் எழுத்துப் பிழைகள், உச்சரிப்புப் பிழைகள், வாக்கியப் பிழைகள் போன்ற இலக்கணப் பிழைகளைக் குறைக்கவேண்டும். இவை உள்ளடங்கலாக ஊடகங்களிடம் நாம் எதிர்பார்ப்பது தரமான- தகுதியான- மக்களின் சிந்தனையைத் தூண்டக்கூடிய- அறிவு பூர்வமான- ஆக்கபூர்வமான கருத்துக்களைத்தான்!

–திருமதி.ச.சாட்சாயணி(ஓய்வு பெற்ற ஆசிரியை)

### தவறுகளை மட்டுமே சொல்லாதீர்கள்!

ஊடகங்களில் எழுத்துப்பிழை, உச்சரிப்புப் பிழை என்பன அதிகளவில் வெளிவருவது தவிர்க்கப்படவேண்டும். மேலும், நடந்த தவறுகளை மட்டும் வெறுமனே சுட்டிக்காட்டுவதை விடுத்து, தவறுகளைத் திருத்தக்கூடிய வழிமுறைகளுடன் செய்திகளைப் பிரசுரிக்கவேண்டும்.

போக்குவரத்து விதிமுறைகள்,சட்டம் பற்றிய அடிப்படை அறிவு என்பன யாழ் மக்களுக்கு அவசியமான-தொன்று. இதனைக் கருத்தில் கொண்டு அது சார்ந்த விளக்கங்களைப் பிரசுரித்தால் நன்று.

–ஜனனி,மூளாய்

### விற்பனைக்காகப் பொய் கூறாதீர்கள்!



ஊடகங்கள் மூலம் வெளிவரும் செய்திகளால் பொதுமக்கள் பாதிக்கப்படலாம் எனும் நிலை காணப்படின் உண்மைகளைச் சற்று மறைப்பதில் தப்பில்லை. அதேவேளை, சிறு விடயங்களைப் பெரிதுபடுத்துவதைத் தவிர்க்கவேண்டும். நாட்டினதும், மக்களதும் நலனைக் கருத்தில் கொண்டு பக்கச்சார்பற்ற கருத்துக்களை முன்வைக்கவேண்டும்.

பத்திரிகைகள் விலைப்படவேண்டும் என்பதற்காக மக்களைக் கவர்வதற்காக தேவையற்ற பொய்யான செய்திகள் வெளியிடுவதை பார்க்கக்கூடியதாயுள்ளது. இதனால் நற்சேவை புரியும் ஊடகங்களும் பாதிக்கப்படலாம். இவை தவிர்க்கப்பட்டால் நம்நாட்டு ஊடகத்துறையும் உலகிலே மிளிரும்.

–திரு.பொ.செல்வரத்தினம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்)

### யுத்தகால மனோநிலையை தவிருங்கள்!

நான் யாழ்ப்பாணத்துப் பத்திரிகைகள் மட்டுமன்றி தென்னிலங்கை ஆங்கிலப் பத்திரிகைகளும் வாசிக்கும் பழக்கமுடையவன். தரமான பத்திரிகை வெளிவரவேண்டும் என்ற நல்லெண்ணத்துடனே, தற்போதுள்ள குறைபாடுகளைக் கூறுகிறேன்.

எமது பத்திரிகைகள் யுத்த காலத்தில் இருந்ததைப்போலவே தற்போதும் காணப்படுகின்றன. இவை செய்திகளை வழங்கும்போது, செய்தியாளர்களின் கருத்துக்களை உள்வாங்கி வெளிவருதல் தவிர்க்கப்படுதல்வேண்டும்.

ஏற்கனவே பிரசுரித்த செய்திகளை மீளப்பிரசுரித்தல், செய்தியுடன் தொடர்பற்ற படங்களைப் பிரசுரித்தல் மற்றும் விளம்பரங்களை எல்லாப் பக்கங்களிலும் வெளியிடுதல் என்பன தவிர்க்கப்படல்வேண்டும். மேலும் செய்திகளின் தரத்துக்கேற்ப அல்லது முக்கியத்துக்கேற்ப முன்னுரிமை வழங்கி முதலாம் பக்கத்தில் பிரசுரிக்கவேண்டும்.

–பெயர் குறிப்பிட விரும்பாத ஒரு ஆசிரியர்

### மக்களுக்கு அவசியமானதைச் சொல்லுங்கள்!

ஊடகங்கள் அதிகரித்து வருவது எமக்குச் சந்தோசத்தைத் தருகிறது. அதேவேளை, பத்திரிகைகளுக்கான விலைப்பெறுமதி இன்னும் குறைக்கப்படலாம். போட்டி போட்டு செய்திகளை வெளியிடுவதில் அதிக கவனம் கொள்ளும் பத்திரிகைகள், ஒருவருடைய பேச்சைப் பிரசுரிக்கும்போது, அவர் கூறியவற்றுள் மக்களுக்கு முக்கியமானதை மட்டும் தெரிந்தெடுத்து எழுதுதல் அவசியம். மேலும், சில கட்டுரைகளில் தலைப்பு ஒன்றாக இருக்க, உள் விடயம் வேறொன்றாக இருக்கும். இதை அவதானித்து வெளியிடவேண்டும்.

–திரு.சி.ரவீந்திரகுமார் (வர்த்தகர்)

### அரசியல் பக்கச்சார்பு வேண்டாம்!



ஊடகங்கள் அரசியல் சார்ந்த செய்திகளை வெளியிடும்போது பக்கச்சார்பின்றி மக்களுக்கு உண்மை நிலைகளைத் தெரியப்படுத்தவேண்டும். சம்பவங்களைச் செய்தியாக்கும் போது தாம் நேரடியாகப் பெற்ற தகவல்களை, மிகத் துல்லியமானவற்றைப் பிரசுரிக்கவேண்டும். தவறான செய்திகளால் சிலருடைய மனம் நோகடிக்கப்படும் என்பதை உணரவேண்டும். அத்துடன் அதிகளவில் மருத்துவத்துறை சார்ந்த கட்டுரைகளைப் பிரசுரித்தால் நன்று.

- செல்வி.சோ.பாரதி (கணக்காளர்)

### எழுத்துப் பிழை, உச்சரிப்புப் பிழைகளை தவிருங்கள்!

ஊடகத்துறைக்கு சமூக அக்கறை என்பது அவசியமானதொன்று. செய்திகளை வெளியிடும்போது இதனைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

சொற்பிழை, பொருட்பிழை என்பன தவிர்க்கப்படுவதுடன், மக்களைத் திருத்தக்கூடியதாய் அதாவது தீய வழிக்குச் திசை திரும்பாத வகையில் செய்திகளை வெளியிடுதல் நன்று.

குறிப்பாக பத்திரிகைகள் அதிகளவு எழுத்துப்பிழைகளை (உதாரணமாக கலாசாரம் என்பது கலாச்சாரம் என்று எழுதப்படுவது), வானொலி, தொலைக்காட்சி ஊடகங்களில் உச்சரிப்புப்பிழை (உதாரணமாக சொல்லி – சொள்ளி என்றவாறு உச்சரிக்கப்படுவது) கவலைக்குரியது. இதனை கருத்தில்கொண்டு எதிர்காலத்தில் தரமான விடயங்களை ஊடகங்களில் எதிர்பார்க்கிறேன்.

–உதயலதா(ஆசிரியர்)

## அழகே உன்னை ஆராதிக்கின்றேன்

# எண்ணெய்த்தன்மையான முடியைப் பராமரிக்க

எண்ணெய்த்தன்மையான கூந்தலை உடையவர்களின் முடி மட்டுமன்றி, முகமும் எண்ணெய் வழிந்ததாகவே இருக்கும். எந்தவிதமான முகப்பூச்சுக்களைப் பூசினாலும் இதைத் தவிர்க்க முடியாது. இதற்கு முதலில் தலைமுடி எண்ணெய்த்தன்மையாக இருப்பதைத் தடுக்கவேண்டும்.

வாரத்தில் இரண்டு அல்லது மூன்று முறை தலையில் குளிக்கவேண்டும். தலை சுத்தமாக இல்லாவிட்டால் இயற்கையாகவே அதிகமாகச் சுரக்கும் எண்ணெய்யுடன் வியர்வையும் தூசியும் படிந்து மயிர்த்துவாரங்களை அடைத்து பொடுகு உருவாகத் தொடங்கும். முடியும் கொத்துக் கொத்தாக உதிர ஆரம்பிக்கும்.

சுத்தமான ஒரு சிறிய கடதாசித் துண்டை உச்சந்-தலையில் வைத்து நன்கு அழுத்தித் தேய்த்து பார்க்கும்போது கடதாசியில் எண்ணெய்த்தன்மை காணப்பட்டால், உங்கள் தலையில் எண்ணைத்-தன்மை காணப்படுகிறதா என்பதைக் கண்டுகொள்ளலாம்.

- தலையில் இயற்கையாகவே எண்ணெய் சுரக்கின்றதுதானே என்றுவிட்டு வெறுந்தலையில் குளிக்கக்கூடாது. முழுகும்போது தலைக்கு எண்ணெய் வைக்கவேண்டும்.

- நல்லெண்ணெய் அரை மேசைக்கரண்டி, தேங்காய் எண்ணெய் அரை மேசைக்கரண்டி சேர்த்துச் சூடாக்கி அடுப்பில் இருந்து இறக்கியவுடன் ஆமணக்-கெண்ணெய் அரை மேசைக்கரண்டி விட்டு நன்கு கலக்கவேண்டும்.

அதன்பின், ஒரு பஞ்சினால் தொட்டு தலையில் நன்கு படும்படி எல்லா இடமும் பூசி உங்கள் விரல்களினாலோ அல்லது வேறொருவரின உதவியுடனோ நன்றாக மசாஜ் பண்ணவும்.

- இரண்டு நிமிடங்களின் பின் ஒரு துவாயை கொதிநீரில் அமிழ்த்திப் பிழிந்து தலையைச் சுற்றித் தலைப்பாகை கட்டுவது போல் மூடிக் கட்டவும்.

- சூடு ஆறியபின் மீண்டும் கொதிநீரில் அமிழ்த்திப் பிழிந்து முன்பு போல் செய்யவும். இவ்வாறு இரண்டு மூன்று தடவைகள் செய்வதன் மூலம் மயிர்த்துவார அடைப்புக்கள் திறக்கப்பட்டு புதிய முடிகள் முளைக்க ஆரம்பிக்கும். இரத்த-ஓட்டம் அதிகரிக்கும். அதிகமாக எண்ணெய் சுரப்பதும் நின்றுவிடும். முடி கொட்டுவதும் படிப்படியாக நின்றுவிடும்.

- நல்லெண்ணெய் மட்டும் பூசுபவர்கள், சிறு துளி தேங்காய்யெண்ணை-யைக் கலக்கலாம்.

- தேங்காய் எண்ணெய் பூசுபவர்கள் ஒரு துளி நல்லெண்ணெய் மட்டும் சேர்த்து சூடாக்கலாம். ஆமணக்கெண்ணெய் சேர்த்தல் முக்கியம்.

- மேற்குறிப்பிட்டவாறு செய்து முடித்து மூன்றுமணி நேரத்தின் பின் ஒரு முட்டையுடன் எலுமிச்சப்-பழச்சாறும் கலந்து நன்கு கலக்கி முடிகளில் நன்றாகப் படும்படி பற்றுப் போட்டு (pack) 10 நிமிடத்தின் பின் முழுகவும்.

- முட்டை பாவிக்காதவர்கள் எலுமிச்சப்பழச்சாற்றைத் தேய்த்து 5 நிமிடங்கள் வரை விட்டு, பின் சீயாக்காய்த்தூளோ அல்லது ஷம்பூவோ பாவித்து முழுகிவிடவும்.

இவ்வாறு வாரத்தில் குறைந்தது இரு தடவைகளாவது செய்து வருவதன் மூலம் பட்டுப் போன்ற மென்மையான முடியைப் பெற்றுக் கொள்ளலாம்.

– **இ.உமாசங்கரி**

*கலாலயா*

# கடன் ஒரு வரம்

கடன் வாங்குவது என்றாலே சிலருக்குப் பயம் வந்துவிடும். அது ஒரு கூடாத பழக்கம் என்று மற்றவர்களும் அச்சமூட்டுவர். உண்மையில் கடன் வாங்குவது தவறு என்று சொல்கிறவர்கள், பணத்தின் மதிப்பைச் சரியாக உணராதவர்களாகவே இருப்பர்.

எதற்காகக் கடன் வாங்குகிறோம்? வாங்கும் பணத்தை ஆக்கபூர்வமாகச் செலவழிப்பது எப்படி? வருமானத்தைப் பெருக்குவது எப்படி? என்கிற தெளிவு இருந்தால், கடன் ஒரு கெட்ட பழக்கமே அல்ல. வரப்பிரசாதமே!

புதிய தொழில் முயற்சி ஒன்றைத் தொடங்க நினைப்பவர்கள், ஏற்கனவே தொழில் முயற்சிகளில் ஈடுபடுபவர்கள், வர்த்தகத்தில் ஈடுபடுபவர்களுக்கு கடன் அவசர நேரத்தில் கைகொடுக்கும்

இன்று பல வழிகளில் கடன் பெறலாம் என்றாலும், வங்கியில் கடன் பெறுவதே பாதுகாப்பானதும், ஒப்பீட்டு ரீதியில் குறைந்தளவு வட்டியைக் கொண்டதுமான வழியாகும்.

ஆனாலும், வங்கிக் கடன் என்றவுடன் சும்மா போனவுடன் தூக்கித் தந்துவிடமாட்டார்கள். உங்களுடைய கடன் பெறும் தகுதி, முன்னைய கடன் வரலாறு, கடனைத் திருப்பிச் செலுத்தும் ஆற்றல் எனப் பல விடயங்கள் தொடர்பாக வங்கி கவனம் செலுத்தும்.

- பலவிதமான கடன்கள் உண்டு. உங்களுக்குத் தேவையான கடனை, குறைந்த வட்டி வீதத்துடன் வழங்கும் வங்கியைத் தெரிவுசெய்யுங்கள்
- பெறப்போகும் கடன், அதன் வட்டி வீதம், கடன் காலப் பகுதி தொடர்பான முழு விபரங்களையும் சரியாக அறிந்துகொள்ளுங்கள்.
- மறைமுகக் கொடுப்பனவுகள் ஏதும் உள்ளனவா என்பதை கவனமாக ஆராயுங்கள்.
- கடன் விண்ணப்பத்தை நியாயப்படுத்தக்கூடிய தெளிவான காரணமும், விண்ணப்பத்திற்கு வலுச்சேர்க்கும் போதியளவு ஆவணங்களும் உங்களிடம் இருக்கிறதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

## வங்கிகளில் பெறக்கூடிய சில கடன் வகைகள்

**தனிநபர் கடன்:**
நிலையான வருமானம் பெறுவோருக்கு அல்லது வங்கியின் நம்பிக்கைத்தன்மையுள்ள வாடிக்கையாளருக்கு இக்கடன் கிடைக்கும். தனிப்பட்ட மற்றும் வியாபாரத் தேவைகளுக்கு இதைப் பெறமுடியும். கடனுக்கான பிணையாக அசையாச் சொத்துக்கள், நிலையான வைப்பு போன்றவற்றில் ஒன்றுடன், பிணையாளர்களையும் கொடுக்க வேண்டும்.



**வீட்டு வசதிக் கடன்:**
புதுவீடு கட்ட, வாங்க மற்றும் வீட்டுத் திருத்த வேலைகளுக்கானது. காணி அல்லது வீட்டு உறுதியைப் பிணையாக வைத்து இந்தக் கடனைப் பெற முடியும்.

**தொழிற் கடன்/ வியாபாரக் கடன்:**
வியாபாரத்துக்கான மேலதிக மூலதனம், பொருள் கொள்வனவு, கட்டடம் வாங்குதல் மற்றும் திருத்த வேலைகள் போன்ற தேவைகளுக்காக வழங்கப்படுகின்றது. இதற்குப் பிணை எதிர்பார்க்கப்படும்.

**சுயதொழில் கடன்:**
சுயதொழில் ஊக்குவிப்புக்கானது (ஆடு, கோழி வளர்ப்பு, வியாபாரம் ஆரம்பித்தல் மற்றும் தொழில்கள் etc...). கடன் பெறுபவரின் தேவைக்கும், தகுதிக்கும் ஏற்ற தொகை வழங்கப்படுவதுடன், பிணைகளும் எதிர்பார்க்கப்படும்.

**லீசிங்:**
புதிய வாகனம் அல்லது வீட்டுப் பாவனைப் பொருள் கொள்வனவுக்காக வழங்கப்படுகின்றது. கொள்வனவு செய்யும் வாகனம் அல்லது பொருளின் பெறுமதிக்கு ஏற்பவே கடன் தொகை அமையும். கடனுக்கான பிணையாக வாகனத்தின் உரிமம் வங்கியிடமே இருக்கும். இரண்டு பிணையாளிகள் கோரப்படுவர்.

**சந்தோசமாய்க் கடன் வாங்குங்கள்!**

**நேர்மையாகத் திருப்பிச் செலுத்துங்கள்!**




**– ந.சதீஸ்**

# பல்துறை ஆற்றல்களை விருத்தி செய்யும்

# சிகரம் ஊடகக் கற்கைநெறி

பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, இணையம் என்று ஊடகங்களில் மட்டுமன்றி, அச்சகம், ஸ்டுடியோ, விளம்பரத்துறை, சந்தைப்படுத்தல், பொதுமக்கள் தொடர்பாடல் என்று 25க்கும் மேற்பட்ட தொழில்வாய்ப்புக்களைப் பெறுவதற்கு ஊடகக் கல்வி உதவுகிறது.

முழு நேரமாகவோ, பகுதி நேரமாகவோ ஊடகங்களில் பணியாற்றும் வாய்ப்புக்கள் தவிரவும்,அதிகளவு வருமானமீட்டக்கூடிய வேறு பல துறைகளிலும் தொழில்வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளும் வகையில், நவீன முறையில் வடிவமைக்கப்பட்ட ஊடகக் கற்கைநெறியை சிகரம் ஊடக இல்லம் வழங்குகிறது.

**தொடர்பாடல் திறன்:**

"என்னிடம் வரும் ஊழியர்களுக்கு தொழில் தெரிந்திருக்காவிட்டாலும், அவர்களுக்கு சிறந்த தொடர்பாடல் திறன் இருக்கிறதா என்பதைத்தான் நான் பார்ப்பேன்" என்று சொல்கிறார் உலகப் பிரசித்தமான கணினி உற்பத்தி நிறுவனமான ஐ.பி.எம். இன் பிரதான முகாமையாளர்.



செய்தி சேகரிப்பு, பலதுறைப்பட்டவர்களுடன், தொடர்புகளைப் பேணுதல், நேர்காணல் செய்தல் என்று, தொடர்பாடல் திறன் விருத்தியில் சிகரம் ஊடகக் கற்கைநெறியின்போது அதிக கவனம் செலுத்தப்படுகிறது. இதனால் எத்துறையிலும் மாணவர்களால் இலகுவாகத் தொழில்வாய்ப்பொன்றைப் பெற்றுக்கொள்ள முடிகிறது. சிகரம் ஊடக இல்லத்தில் ஊடகக் கற்கைநெறியைத் தொடரும் காலத்திலேயே பல மாணவர்கள் இலகுவாகத் தொழில்வாய்ப்பைப் பெற்றுக்கொண்டுள்ளமை இதற்குச் சான்றாகிறது.

**கணினி – வரைகலை பயிற்சி:**

சிகரம் ஊடகக்கற்கைநெறியில் கணினி, இணையம், வரைகலை (Graphic Design) பயிற்சிகளும் உள்ளடக்கப்பட்டிருக்கிறது. இதனால், எந்தவொரு தொழில்வாய்ப்புக்கும் அவசியமான அடிப்படைக் கணினி அறிவை மாணவர்கள் பெற்றுக்கொள்வதுடன், வரைகலைத் திறன்களை விருத்தி செய்பவர்கள் அச்சகம், ஸ்டுடியோ மற்றும் சுயதொழில் வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

**ஒளிப்படக்கலை(Photography):**

ஸ்டுடியோ மற்றும் சுயதொழில் வாய்ப்புக்கு உதவக்கூடிய ஒளிப்படக்கலை தொடர்பான பயிற்சிகளால், பகுதி நேரமாக ஒளிப்படக் கலைஞராகப் பணியாற்றி மேலதிக வருமானமீட்டக்கூடிய வாய்ப்பை மாணவர்கள் பெறுகின்றனர்.

**சந்தைப்படுத்தல், விளம்பரத்துறை:**

சிகரம் ஊடகக் கற்கை மாணவர்க-ளுக்கு பயிற்சி நெறியின் போதே விளம்பரம் மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பான நேரடிக் களப் பயிற்சிகள் வழங்கப்படுவதால், இந்தத் துறைகளில் கவர்ச்சிகரமான சம்பளத்துடன் தொழில்வாய்ப்புக்-களை இலகுவாகப் பெற முடியும்.

**ஆங்கிலம்:**

எந்தத் தொழிலையும் பெற்றுக்கொள்வதற்கு, கணினியைப் பயன்படுத்தவும், ஆங்கிலத்தில் பேசவும் தெரிந்திருப்பது அவசியமானது. இதற்கேற்ற வகையில் ஆங்கிலப் பயிற்சிநெறியொன்றும் சிகரம் ஊடகக் கற்கைநெறியில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**தொழில் வழிகாட்டல்:**

ஒருவருடைய திறன்களைச் சிறப்பாக வெளிப்படுத்தக்கூடிய வகையில் சுயவிபரக்கோவை தயாரித்தல், தொழில் தருநர்களை இனங்காணல், போன்ற விடயங்களில் தொழில் வழிகாட்டல் பயிற்சிகள் சிகரம் ஊடகக் கற்கைநெறியில் உள்ளடக்கப்பட்டிருப்பதால், பயிற்சிநெறியைத் தொடரும் காலத்திலேயே ஒவ்வொரு மாணவர்களும் பொருத்தமான தொழில்வாய்ப்புக்களை இனங்கண்டு பெற்றுக் கொள்ள முடிகிறது.

**தனித்துவமான பயிற்சியாளர்:**

10 வருடங்களாக தினக்கதிர், வீரகேசரி, தினக்குரல், சக்தி எ∴ப்.எம்., ஐ.ரி.என்., லங்கா ஈ வொட்ச் என்று பல்வேறு அச்சு, இலத்திரனியல் ஊடகங்களில் பணியாற்றி, சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஊடகப் பயிற்றுவிப்பாளரான கோ.றுஷாங்கன், சிகரம் ஊடகக் கற்கைநெறியை நெறிப்படுத்தி நடாத்தி வருகிறார்.

டெய்லி நியூஸ் பத்திரிகையின் பிரதம உதவி ஆசிரியராக நீண்ட காலம் பணியாற்றிய மூத்த ஊடகவியலாளர் த.சபாரத்தினம் அவர்களின் வழிகாட்டலுடன், யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பைச் சேர்ந்த அனுபவமிக்க ஊடகப் பயிற்றுவிப்பாளர் பலரும் சிகரம் ஊடகக் கற்கைநெறி வகுப்புக்களை நடத்தி வருகின்றனர். ■

# மிலேனியம் பெஷன் & பொம்பே பஸார்



நவநாகரீக ஆடைகளின் சோலை



# ஜீவல் பிளாசா
## Jewel Plaza


ஓடர் நகைகள் 22 கரட்டில் குறித்த் தவணையில் செய்து கொடுக்கப்படும்.



No:10, Power House Road,
Grand Bazaar, Jaffna.
Tel: 021 222 9399, Fax: 021 222 2967

91, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். Tel: 021 222 3124

# SARAVANA TEXS
# சரவணா புடைவையகம்



## இளைஞர் யுவதிகளுக்கான இதயம் கனிந்த ஆடைத் தெரிவுகளுக்கு

- திருமண பட்டுச்சேலைகள்
- சல்வார்
- சோலி
- ரெடிமேட் ஆடைகள்



முகவரி:
இல.526,529, பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 1723

கிளை:
770,772, கே.கே.எஸ் வீதி,
தட்டாதெரு சந்தி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 0421

# 25 க்கும் மேற்பட்ட தொழில் உத்தரவாதமான

பத்திரிகை

தொலைக்காட்சி

வானொலி

இணையம்

# சிகரம் ஊடகக் கற்கைகள்
# SIKARAM MEDIA STUDIES

**அச்சு ஊடகவியல்**

செய்தி சேகரிப்பு, எழுதுதல், நேர்காணல், சித்திரிப்பு

**வானொலி ஊடகவியல்**

அறிவிப்புக்கலை, எழுத்துருவாக்கம், நிகழ்ச்சித் தயாரிப்பு, Editing

**தொலைக்காட்சி ஊடகவியல்**

வீடியோ படப்பிடிப்பு, நிகழ்ச்சித் தயாரிப்பு, எழுத்துருவாக்கம், Editing

**கணினி, இணையப் பயிற்சி**

Microsoft Office, Internet, Email, Social Media etc.

**தொடர்பாடலுக்கான ஆங்கிலம்**

சொற்களஞ்சிய விருத்தி, வாசிப்பு, வசன அமைப்பு, பேச்சுத்திறன், எழுத்து

**ஒளிப்படக்கலை (Photography)**

SLR, Digital Camera Techniques Photo Editing, Studio Lab Training

**சந்தைப்படுத்தல் (Marketing)**

தொடர்பாடல் திறன் விருத்தி, விற்பனை நுட்பங்கள், விளம்பரக்கலை

**Graphic Designing**

பக்க வடிவமைப்பு, மடல்கள், விளம்பர வடிவமைப்பு, வரைகலை PAGE MAKER, PHOTOSHOP, INDESIGN

Computer Lab

Audio - Video Studio



10 வருட அச்சு, வானொலி, தொலைக்காட்சி, இணைய ஊடக அனுபவத்துடன், சர்வதேச அங்கீகாரம் பெற்ற ஊடகப் பயிற்றுவிப்பாளர் கோ.றுஷாங்கன் தலைமையிலான அனுபவமிக்க ஆசிரியர் குழாம்

மேலதிக விபரங்கள் உள்ளே

3மாத கற்கைநெறி + 3மாத பணியிடப் பயிற்சி = பயிற்சிநெறி முடிவில் தொழில் உத்தரவாதம்

சுயவிபரக்கோவையுடன் விண்ணப்பங்களை அனுப்பி வையுங்கள்

MEDIA

## சிகரம் ஊடக இல்லம்

இல.221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்

தொ.பே.: 021 300 80 60, நேரடி: 077 77 33 931

மின்னஞ்சல்: SikaramMedia@gmail.com